உ

திருச்சிற்றம்பலம்

245

# மதிவாணன்

புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை

---

இது

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத்

தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து

காலஞ்சென்ற

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

இயற்றியது



மதுரை

வி. சூ. சுவாமிநாதன்

வெளியிட்டது

[பதிப்புரிமை]

# உரிமையுரை

---

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

தேனினு மினிய செய்யுள்யாத் திடினுஞ்
செந்தமி ழுரைவகுத் திடினு
மேனெனக் கேளா திருக்குமிந் நாளி
லின்றமிழ்ப் புலவரைக் காப்பல்
யானென வெழுந்திங் கெந்தமக் குதவு
மியல்புளா யெழிற்கலைப் புந்தி
மானெனு முத்துக் குமாரசா மிப்பேர்
வள்ளலே யிதுகொளாய் மகிழ்ந்தே. (க)

---

Fourth Edition—1000 Copies

# முகவுரை

மதிவாணன் என்னும் பெயரிற் புதுவது புனைந்த இச்செந்தமிழ்ச் சிறு கதை, 1897-ஆம் ஆண்டு முதல் 'ஞானபோதினி' யென்றமாதாந்தத்தமிழ்ப்பத்திரிகையின்கட்சிறிது சிறிதாக வெளிப்படுவதாயிற்று. காலஞ்சென்ற **ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களது** வேண்டுகோளின்படி வகுக்கப்பட்ட இந்நூல் அன்னா ரிருந்தகாலத்திலேயே முற்றுப்பெறாது போனமைபற்றிப் பெரிதும் மனமுளைகின்றேன்.

இனித் தமது பத்திரிகையினின்றும் பெயர்த்து அச்சிட்டுக் கொள்ளுமாறு விடையளித்த ஞானபோதினிப்பத்திராதிபர் **ம-ா-ா-ஸ்ரீ மு. சு. பூரணலிங்கம் பிள்ளையவர்களது** கருணைத்திறம் ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று. இப்பதிப்பிற்கும் ஞானபோதினிப் பதிப்பிற்கும் அதிகாரவமைப்பின் மட்டிற் சிறிது வேற்றுமை காணப்படும். இதனை ய சிடுதற்கண் உடனின்றுதவிய எந்தம் 'இயற்றமிழ் மாணவர் [illegible] என்றும் பாராட்டற்பாலதே.

மற்று, அவகாசக்குறைவினாலும், ஆதி வ [illegible] றும், யாம் இந்நூலினை யெண்ணியாங்கு முடித்தற்கியலாது போயிற்று. இதனையும் இந்நூலின்கண் ஆங்காங்குக் காணப்படும் ஏனைய பிழைகளையும் பேரறிவாளராயினார் பொருட்படுத்தலின்றி அன்புடன் ஏற்றுப்படித்து எளியேமை மகிழ்விப்பரென்னுந் துணிவுபற்றி இதனை வெளிப்படுத்தாநின்றேம்.

16—5—1902
சென்னை

வி. கோ. சூ.

திருச்சிற்றம்பலம்

# மதிவாணன்

## கடவுள் வாழ்த்து

நேரிசை வெண்பா

அன்போ டருணல் லறத்தோ டெழினலஞ்சான்
மன்போர் மதிவாணன் மாண்பெயரா—னின்போங்குஞ்
செய்ய தமிழுரையிற் சீர்த்தகதை சொல்லவருள்
செய்யு மிறைவன் சிறந்து.

## முதல் அத்தியாயம்

### மருகன் வருகை

திருவளர்ந்தோங்கும் பரதகண்டத்துப் பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரை யென்னும் மாநகரத்து வையையாற்றின் வடகரைக்கண், ஒருநாட் காலைப் பொழுது புலர்ந்து சிறிதுநேரஞ் சென்றபின்றைச் செவ்விய மேனியன் சிறந்த நோக்கினன் பரந்த மார்பினன் பவள வாயினன் பதினறுட்டைப் பிராயத்தான் ஓரிளந்தோன்றல் போர்க்கோலம் பூண்டு புரவிமீதேறிக் காற்றினுங் கடுகித் தென்புலநோக்கி வாரா நின்றான்.

அப்போழ்தத்து யாற்றினது இருகரை மருங்கினு முள்ள கோங்கு வேங்கை மாதவி சம்பகம் புன்னை பாடலம் அசோகமாதிய வான்றோய் மரங்கள் தத்தம் மலர்களுதிர்த்து ஆரவாரித்துத் தலையசைத்தல், உலகிற் கோரு கண்ணென மிளிரும் உயர்பேரொளியுறு செஞ் ஞாயிற்றினைக் கையா னருச்சித்து நாவாற் றுதித்துத் தலையான் வணங்குதல் போலாநிற்ப, யாற்றினிடை யோடுகாலிற்புனல் குடையுநரும் ஆடைமாசு நீக்குநரும், மணற்கரைப் பாங்கர் வெளியதுடீஇ வெண்ணீறணிந்து அஞ்செழுத்தறைநரும், வெண்சாந்து பூசி வேதமோது நருமாய்ப் பலர் குழீஇயிருப்ப, ஒருசார் ஆதவன் பன் னிறக்கதிர்கள் மணலின்மேல் வீழலும் ஆண்டுப் பரந்து கிடக்கும் வெள்ளியம்பருக்கை வயிரமென மின்னித் திகழாநிற்ப, மற்றொருசார் இருவர் கைகோத்துலாவா நின்றார்.

அவ்விருவருளொருவன் பரிமாவுகைத்துப் பாய்ந்து போதரும் பரிய தோளனைப் பார்த்துளமாழ்கி மற்ற வரை விளித்து "ஆண்டுக் குதிரையிவர்ந்து ஒன்றை யுங் குறிக்கலனாய்ச் செல்லுங் கோதறு வீரனை யறி விர்கொல்?" என்றான். இது காறுஞ் சென்ற பரி யாளனை வியப்புடன் நோக்கிய விந்தையங் குரவர் சிறிதுபோது மௌனஞ் சாதித்த பின்னர்க் "கோர மேற்கொண்டான் சோணாட்டான் போலும்" எனலும் "அவனடிச்சுவடு பற்றிச் சென்று அவனிருக்கையினை யறிவாம். வம்மின்" என்றான் மற்றையோன். உடனே யிருவரும் ஏகினர்.

போந்த வீரனே காவற்பொழில் கடந்து அகழ்ப் புறத்துற்று எயிலமைப் பெழிலை நோக்கி நின்றனன். அகழாடையுடுத்த அவ்வெயிலானது முன்னொருகால் அரவுசூழ் கிடந்தது போன்று வட்டமாய் வளைந்து அம் மதுரையம் பதியைச்சுற்றி நின்றது; திசைமுகனைப் போற் படைக்கு மாற்றலிலதாயினும் அவன் போன்று முகங்கள் நான்கு பெற்றிருந்தது; அவைதாம் அந் நகரின் வாயில்களாம். அவை புதுவர் புகுவாயிலென் றும், கலைஞர் புகுவாயி லென்றும், படைஞர் புகுவாயி லென்றும், வையைசெல்வாயிலென்றும்,பெயர் பெறும். இந்நான்கும் முறையே கிழக்கு முதல் வடக்கிறுதியாக வுள்ளன. இவற்றினுள் எவ்வாயில் வழியேனும் உள் ளூரார் உட்புகுதலாமாயினும் அவர்கள் பெரும்பாலும் போய்வருவன கிழக்கு வாயிலும் வடக்கு வாயிலுமே. அவ்வளமதிலை வெளிப்புறத்தோ டிணைப்பன மேற் குறித்த நான்கு வாயில்களினு முள்ள இழுவைப்பாலங் களே. இத்தகைய பாலங்களின் வழியாய் உட்புகின் விரிந்து பரந்து விளங்குறும் பைம்புற்றரை யொன்று காணப்படும். அத்தரையினு ளாங்காங்கே சிற்சில மலர் மரங்கள் நிற்கும். இதன் கண்ணே தாம் அரண்மனை யைச் சேர்ந்தனவாய மான் முதலிய இல்லுறை மிருகங் கள் மேய்ந்துகொண் டிருக்கும்; களி மயில் கலவம் விரித்தாடா நிற்கும்; இடையிடையே முழந்தாளளவு ஆழமுள்ள சிறு நீர் நிலைகள் சான்றோர் மனமெனத் தெளிந்து மிளிரும். இனைய பசும் புற்றரை கடந்து செல்லின் மற்றுமோ ரகழ் காணலாம். இவ் வகழாற் சூழப்பட்டுளதோ ரெண்கோணக் கோட்டை. இவ்வர

ணம் ஒரு சிறு வாவியின் மலர்ந்த எட்டிதழ்ப்பதுமம் போலும். ஒவ்வொரு கோணத்தின் மிசையும் நூற்று வரைக் கொல்லி முதலிய அரும் பொறிகள் பகைஞரை வெல்லுமாறு வைக்கப்பட்டுள. அவற்றுட் சில குண்டுறை முகத்தவும் குழிந்தவாயவும் பனையெனப் பருத்து நீண்டவும் எஃகினியன்றவும் உருமென வொலிப்பவுங் கணக்கில் மாந்தரைக் கடிதிற் காய்வவுமாய பொறிகளாம். கோணந்தொறுங் கயற்கொடிக ளசைந்துகொண்டிருக்கும்; வீரர் பலர் குழூமி நிற்பார்; நச்சுக்குழல், காற்றறி குழல், திசையறி கருவி, சீதோஷ்ணமானி முதலியனவும் ஆண்டுள. மற்றைப்படி இவ்விரண்டு கோணங்கட்கிடையில் உட்புகுதும் வாயில்கள் இருநான்குள்ளன; அவ்வாயில்களு ளொவ்வொன்றினுங் காவலாளர் உறை நீத்த வாளினர் உலம்பொரு தோளினர் கழலிடு காலினர் கவச யாக்கையர் சேகரச் சென்னியர் செங்கட் டீயினர் உரத்த குரலினர் ஓய்வின்றி யுலாவி நிற்பார். அதன்பினர் அவ்வாயில்களா னுட்புகுந்து பார்ப்புழிக் கோணத்தின் உட்புறம் யாவும் ஆயுத சாலையும், யானைச் சேவகமும், குதிரை நிலையும், தேர் நிலையும், வீரர்கள் வாட்போர் மற்போர் முதலியன பயிலிடமுமாம். இவற்றினின்றும் வெள்ளிடைவந்துழி*வையாளி

---

* வையாளிவீதி = செண்டுவெளி = குதிரைகள் சுழன்று செல்லுமாறியற்றிய வையாளிவீதி. புறநானூற்றில் 174, 220-ம் பாட்டுக்களினுரையின்கண், முற்றம் மன்றம் என்ற வீரிடங்களினுஞ் செண்டு வெளியென்றுரை யெழுதப்பட்டிருத்தலான் அது வெளியென்பதும், பெரிய புராணத்துக் குதிரைச் செண்டென்று கூறியதற்கேற்ப 'வாலுளைப் புரவியிற்பொருவில் செண்டாடிப் போர்க்கலை,தெரிதலின்,'' எனக்

வீதி எதிரே தோன்றும். அஃதோர் வளைந்த தெருவாம்; அதன் கண்ணே அரசன் உலாவரும் வழக்கமுண்டாதலின் அதற்கு அரச வீதி யென்னுமொரு பெயருளது. குதிரைகள் கொட்புற வுலவுஞ் செண்டுவெளியு மதுவே. அவ் வையாளி வீதிக்குட்பட்டுத் தோன்றுவது மாசி வீதியாம். இது சதுரமான வொரு தெரு, நாற்றிசையினும் பாற்பட்டு நான்கு வெவ்வேறு தெருக்களெனத் தோன்றுமாதலின் அது கீழைமாசி வீதி, தெற்கு மாசி வீதி, மேலை மாசி வீதி, வடக்கு மாசி வீதியென நால் வேறு பெயர்த்தாம். கீழை மாசி வீதியில் தென்பகுதி தொடங்கித் தெற்கு மாசி வீதியிற் கீழ்ப்பகுதி யிறுதிகாறும் பரந்திருக்கும் அரசன் மாளிகை; மேலை மாசி வீதியின்கண் தானைத் தலைவர் மாளிகையும் வடக்குமாசி வீதியின்கண் மந்திரியார் மாளிகையு முளவாம். இனி

---

கம்பராமாயணத்தினுங் கூறப்பட்டிருத்தலான் அவ்வெளி செண்டு வெளியென்பதும் வெளியாயின. "நீதில் வையாளி வீதி திகழ்செண்டு வெளியேயென்ப, சாதியாம் புரவிவட்டந் திருமுற்றந் தானுமப்பேர்" என்று சூடாமணி நிகண்டு மிக்கூற்றினை வலியுறுத்து மாறறிக. அன்றியும், "பருமமின்றுகுமணி பரல் சொரிவதாப்பகட்டி, னருவிமும்மதம் விலாழி நீரானடி மிதித்த, வுருவவன்மர மிடிப்பதாநிலம் வலியுறுப்பார், விரவிநின்ற வச்சூழலொத்துள செண்டுவெளிகள்" எனத் தணிகைப் புராணமுடையார் கூறுதலையுமுற்று நோக்குக. அற்றேற்செண்டு வெளியை வையாளி வெளியென்னுது வையாளி வீதியென்ற தென்னையெனின், ஔபசாரிக நியாயம் பற்றி யவ்வாறறைந்ததென்க. செண்டு வெளிகளிற் குதிரையேறிச் செல்வோர் தங்கள்முதுகுகளை தாங்களே பார்க்கலாம் படியாகக் குதிரைகள் விரைந்து செல்கின்றன என்பதாம்.

மாசி வீதிக்குட்பட்டு ஆவணி மூலவீதி, சித்திரை வீதி முதலிய பல வீதிகளிருக்கின்றன. இவ்வீதிகளெல்லாம் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலிய நால் வகைச் சாதியாருமே வசிப்பவராவார். இது நிற்க, பெருந் தெருக்களை இடை நின்றியைக்குஞ் சிறு மறுகு கள் பலவுள; அவையாவும் பெரும்பாலும் பரத்தையர் பாணர் கூத்தர் கொல்லர் தட்டார் முதலிய பஃறொழி லாளரும் ஒருவித வொழுங்குமின்றிச் செறிந்து உறை யா நிற்பார். கோட்டைக்கு வெளியே புறஞ்சேரிகளினும் பாக்கங்களினும் இறுப்பார் பிறப்பொழுக்கங் குன்றிய பேதைமாக்களும், அறிவறைபோகிய அநந்தையாளரும், அரசன் விலக்கிய அரும்பிணியாளரும், களியாட்டய ருங் கயவரும் ஏனைய தீயருமே யாவார். அவர்களும் அரசனதாணைக் கடங்கியே நடப்பவராயினும் ஒழுக்க விழிவுபற்றி வெளிப்படுத்தப்பட்டனர். இனி யாவற்றி னுக்கும் நாப்பண், தாமரைமலரிற் பொகுட்டென விளங் காநிற்கும் எம்பெருமான் மதிமுடிச் சொக்கன்கோயில்.

இத்துணைச் சிறப்பினதாய அக்கூடலம்பதிப் போந்த அம்மழவிளங் குமரன் வையைசெல் வாயிலுற்று நகரி னுட் செல்வான் கடைகாப்பார்க் குணர்த்தலும், அன் னர் "ஒருவரும் புரவியேறி யிவ்வழிப்போத லொண் ணாது. அதான்றியும் போருடைதரித்த நும்மைப் புகு மாறு சொல்லவும் வல்லரல்லேம் ஆதலிற் பொறுத் தருள் புரிமின். விருப்பமேற் கீழ்த்திசை வாயிலாற் புகுமின்" எனவே மதிவாணன் தன் கலினமாவைத் திருப்பி விசையுடனுந்தலும் அது மாத்திரைப் போழ்தி னின் மறைந்துவிட்டது.

உடனே பொழுது விடிந்து நான்கு நாழிகை கழிந்தன வாதலின் நானுழிகை மணி முழங்கிற்று. அந்நேரம் யாற்றிடைக் கைகோத்துலாய அவ்விருவரும் வாயில் காவலர்பாற் போந்து "ஈண்டுப் போந்த குதிரைவீரன் யாண்டுச் சென்றனன்? விரைவினி னுரைமின்" எனலும், அவர்கள் "யாங்கள் தடுத்துரைத்தமையிற் றிரும்பிச் சென்றனன். ஒருவேளை கீழைவாயிலாற் சென்றிருப்பினு மிருக்கலாம். மற்று அதற்குமேல் யாங்களொன்று மறியோம்" எனப் புகன்றனர். புகலக் கேட்டாரிருவரும் பொருக்கெனப் புகுந்து போயினர்.

மதிவாணனோ புதுவர் புகுவாயில் சென்று கோட்டைக் கடைகாவலர்பாற் போய் "மந்திரியார் வாய்மையாளர் தம் இல்லஞ்செல்லும் விருப்பினேன். என்னைப் புகவிடுதிரோ?" என்றான்; காவலர் "அற்றேற் புகுதக" எனலுங் கடிதிற் போயினான்.

சிறிது நேரத்தினுள் வடக்கு மாசிவீதியின் கீழைப் பகுதியின்கண் உயர்ந்து குன்றெனத் தோன்றும் ஒரு மாளிகைத் தலைக்கடை வந்துற்றது மதிவாணன்றன் பாய்மா. அன்னணம் பாய்மா வொன்று வந்து நிற்கக் கண்ட ஏவலாளரிற் சில்லோர் விரைந்து போந்து குதிரையைப் பிடித்துக் கோடலும் அதனின்றும் மதிவாணனிழியா முன்னர்ப் பலர் பேசியதோர் பேரொலியுண்டாயிற்று. அஃதென்னெனத் திரும்பிநோக்கலும் நாற்புறத்தினுமுள்ள மாந்தர் நிற்றலைக் கண்டு அஃதோர் வாழ்த்தொலியாதல் வேண்டுமென்னுங் கருத்துடனிழிந்து மாளிகையை நோக்கிச் சேறலும் எதிர்ப்பட்டார் ஒரு பெரியர். அவரை நோக்கி யெழுந்ததுபோலும் மேற்

கூறிய அவ்வொலிதான். அப்பெரியர் நரைத்த குஞ்சியும் சிறிது சுருக்கம் விழுந்து பரந்த வதனமும், இடையிடை விளர்த்த மீசையு முடையார்; தடித்துப் பருத்த வயிற் றின ராயினும் உயரமுங் கம்பீரத் தோற்றமு முடைமை யின் அஃது அவர்க்கு அழகு செய்வதாகவே காணப் படும். மெய்ப்பை புக்கிருந்த அவ்வாய்மையாளர் நந்தம் மதிவாணனைக் கையிற் பிடித்துக்கொண்டு மாளிகையி னுட் சென்றனர்.

அம்மாளிகைத் தலைக்கடை மிசை அங்கயற்கணம்மை யுருவமும் மதிமுடிக்கடவுளுருவமுஞ் செம்பொன் வண் ணத்தில் தீட்டப்பெற் றிருந்தன; கதவத்தினிற் பல்வித மான கைத்தொழில் வல்லமைகளுங் காட்டப்பட்டிருந் தன. வாயில்கடந்து சென்றவளவிற் சென்னெறிக் கிரு மருங்கினும் முல்லையாதிய மலர்ச்செடிகளுங் கொடிக ளும் நிறைந்துளவாயின. அவை பார்வைக்கு மிகவு மின் பமான காட்சி தந்தன. இனி, மேற்செல்லின் வெள்ளிடை முற்றமொன் றுண்டு. அம் முற்றத்தினடுவட் பதினறு கான் மண்டபமொன்று பளிங்கினலாயது, சம்பங்கியா திய கொடிபடர்ந்துள்ளது, கண்கவர் வனப்பினதா யிருந் தது. அதினின்றுமோரி டைகழி புறப்பட்டு மாளிகை யின் மற்றைய பகுதிகளோ டியைந்து நிற்கும். அதன் வழியாய்ப்போனல், ஓரவை குழுமிடமுளதாகும். அதன் கண்ணே ஏறக்குறைய நூற்றுவர்க்குமேல் மாந்தர்கள் இருத்தற்கேற்ற இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தேயே வாய்மையாளரும் மதிவாணனு மிருந்து உரையாடிக்கொண் டிருக்குமாறு சென்றனர்.

சென்ற அவ்விருவரும் அடுத்தடுத்துள்ள ஈரா னங்களி னிருந்தனர். அவர்க ளிருந்ததுதான் தாமதம், உடனே யொருவன் மலர்தலை வெள்ளிக்கலத்தினிற் சில சிற்றுணுக் கொணர்ந்து பருகுதற்குரிய இன்னிள நீரு டன் வைத்தகன்றனன். அச்சிற்றுணுவைத் தின்று கொண்டே இருவரும் பின்வருமாறு பல விடயங்களை யுங் குறித்துப் பேசத் தலைப்பட்டனர்.

"நுந்தையாரிடமிருந்து நெருநற் காலைப்போந்த திருபத்தின்கண் வரைந்திருந்தாங்கு நின்னை இன்றுகாலை யெதிர்பாரா நின்றேன். அவ்வண்ணமே நீயும் போந்தனை. இதுபற்றி யானும் பேருவகை பூத்தேன். அன்றியும் நின் றன் இருமுது குரவரும் இடர்ப்பாடொன்றுமின்றி இனிதுறைகின்றன ரென்பதும் அதனு னுணர்ந்தேன். மற்றுக் காவேரி யாற்றின்கண் வெள்ளங் கரைபுரள்கால மிஃ தன்றோ?"

"ஆம் இதுவே. சென்ற பரிதி நாண்முதல் வெள்ளம் வரம்புகடந்து போகாநின்றது. கரைக்கணிருக்குந்தோட் டங்களெல்லாந் தண்ணீர்;யாற்றுப்புறச் சீறூரினெல்லாந் தண்ணீர் ; குளனெலாந் தண்ணீர் ; தடமெலாந் தண் ணீர். இனி மேல்வரிற் பயிரெலாம் பாழ்படும். யான் உறந்தையம்பதி வழியாய்ப் போந்தேனுதலின் இத்துணை யுங் காணல் நேரிட்டது."

"யாற்றிடையரங்க முற்றனைகொல்?"

"ஆம். அவணுற்று மணிவண்ணன் கோட்டமும், ஆனைக்காவி லண்ணலார் கோயிலும் புகுந்து தரிசித்தேன். அவையாவுங் குறைபாடின்றிச் செவ்வனேயுள."

“ திரிசிரபுரத்து மலையரண் காப்போர் தம்மால் நிகழ்ந்த கலகம் இன்னு மமர்ந்தின்று கொல்லோ ?”

“ அக்கலகத்தை யடக்குவான் யானே தண்டெடுத்துச்சென்று கலகத் தலைவரைப்பற்றிக் காவற் சிறையகம் புகுத்திஅங்ஙனே நின்றேன். நிற்புழி நீவி ரெந்தையார்க்கு விடுத்த நிருபமொன்றும் அவர் தாமே யெற்கு விடுத்த நிருபமொன்றுமாக இரண்டும் போந்தன. அதன்பின் அவர் தம் நிருபத்திற் குறித்தவாறே யாவற்றையும் என் கீழிருக்கும்படைத்தலைவன்பால்விடுத்திவட்போந்தேன்”

“ கலகம் விளைதற்குக் காரணனாயிருந்த கயவனைக் கண்டுபிடித்தனை கொல் ?”

“ அவனைக் கண்டேன். பிடித்திலேன் !”

“ யாண்டுக் கண்டனை ? கண்டுமேன் பிடித்திலை ?”

“ ஆண்டுத் திரிசிரபுரத்தே கண்டனென். கயவன் கரந்திவட் கடிதிற் போந்தனன் ?”

“ அவனின்னனென் றறிதிகொல்?”

“ ஓ! அணுவளவும் ஐயமின்றி யறிவேன்! அவனை நீவிரு மருவீர் ! யாவரு மறிவார் !”

“ அத்தகைக் கொடியோன் யாவனோ ?”

“ அன்னான் நுந்தம் மாயவன் ! மன்னவன் மதிப்பும் மந்திரியார் விருப்பு முற்றவன் ! அரசனவைக்கோரணியென விளங்குவோன் ! வஞ்சகமே யொரு வடிவெடுத் தனையான் !”

“மாயவனோ யிது செய்தான் ? மாயவனோ யிது செய்தான் ? நன்று ! நன்று ! இறும்பூதினு மிறும்பூதே! —அவனை இத்தகைய தீச்செயல் புரிகுவான் தூண்டிய தென்னையோ ?”

"என் கருதினனோ? அதனை யானறியேன்."

"அதன் பினர் நீ செய்த தென்னை?"

"யான் ஆண்டுக் கலகத்தால் நிகழ்ந்தனவாய பல் விதத் தீங்குகளையும், மனத்துணி வெய்திக் கலகஞ் செய் தோரையும், கலகத்திற்கு முழுமுதற் றலைவராய் நின்று முரணினோரையும், கலகஞ் செய்யுமாறேயின இப்புல்லி யோனையும், இவனே இதற்கு மூலமாயினனெனத் தெளிந்துகோடற்கு ஏற்ற குறிகளையுங் கரிகளையும், இவன் ஒளித்து நின்று என்றனை மும்முறை கோறற்கு முயன்ற மூதறிவாண்மையினையும், அங்ஙன முயன்றன யாவும் வீணாயினமை கண்டு இனி யிவ்விடமிருப்பின் உயிர்க்கிறுதி உறுமென்று அவனோர்ந்து கரந்தோடல் கடைப்பிடித்துக் கூடன்மாநகர்க் குறுகினமையினையுங் குறித்து விரிவாய்ப் பொறித்து எந்தையார்க்கு நிருபம் விடுத்துளேன். அஃதொருகால் நந்தம் வழுதியர் பெரு மாற்கு இந்நேரம் வந்திருப்பினு மிருக்கலாம்."

"யாவுமிற்றைஞான்று அரண்மனைக்கேகின் அறிய லாம்" என்று இவர்களிருவரும் பேசி நிற்றலும் வாயிற் றலைக்கடை காப்போனொருவன் போந்து, ஓரோலை நறுக் கினை வாய்மையாளர்தங் கையின்கணிடலும், அவர் மதி வாணனை மாடத்தும்பர்ச் செல்லுமாறு கூறி விடுத்தனர். அவனும் அவர் கூறியாங்கே மாடமிசை சென்றோர் விடுதியிடமுற்று, ஆயிடைத் தன்போருடை முதலிய வற்றைக் களைந்து வைத்த பின்னர் வாய்மையாளர் தம் வாழ்க்கைத் துணைவியாருந் தன்றாயுடன் பிறந்தாரு மாகிய தன் சிற்றெளவையாரொடும் அவர் தம் மக்க ளோடும் அளவளாவிப் பேசி விளையாடாநின்றான்.

இடையில், மந்திரத்தலைவர் வாய்மொழிபெற்றகாவலாளன் வெள்ளிடை முற்றத்துப் பதினாறுகான் மண்டபத்திருந்தானிட முற்றுப் "புகுதுக" என்றலும், அன்னான் அணுத்துணையுந் தாழாது ஆவலொடு புக்கனன். அவன் மலர்ந்த முகமுஞ் சுரிந்த கவுளும் பரந்த நெற்றியும் மிகவுங் கறுத்துவளைந்து நெற்றிமீமிசை ஏறி யிறங்கும் புருவமும் புறத்தே தோன்றா துள்ளடங்கிய விதழு முடையான்; மேலுங் காளிமைதவழ்ந்த மேனியான்; உயரிய வுருவினன்; ஓங்கிய தோளினன்; முப்பதிற்றியாட்டையான்; முழுமெய் படைத்துளான். இன்னதன்மைய மாபுருடனைப் பார்த்தோர் யாவரும் அவனை ஆழ்கருத்தாளனென்றே மதியா நிற்பார். அவன்றன் இடுகிய விழிகளின் அரை நோக்கினானே யாவற்றினையு மறிந்துகொள்ளு மாற்றல் சான்றோன். அவனது அத்தகையநோக் கெதிர்ப்பட்டமாந்தரெல்லாம் அவனைப் பரமசாதுவென்றே பாவியாநிற்பார். அவனென்றுந் தான் கொண்டகருத்தினைப் பிறரறியாவண்ணம் போற்றிக்கோடலிற் பொருவிலான். அவன் செய்யும் வினைகளினாற்றான் அவன்றன கருத்துக்கள் பிறர்க்கு வெளிப்படிற் படாலாமேயன்றி அவற்றை வேறெவ்வாற்றானு முணர்தலொண்ணாது. சிற்சில வேளைகளில் அவன் செய்தொழிலானேக்கஞ் செவ்விதிற் புலப்படாது மருட்கையு முறுத்தும். அவன் ஒன்று செய்வதற் கொன்பான் வழி கொள்வான்; ஒன்றனைக்காட்டி மற்றொன்றனைப் புரிவதி லொப்புயர் வற்றவன்; கைதவத் தன்மையிற் கண்ணனை வென்றவன்; ஒருகணப் பொழுதினி லூர்வலம் வருவான்; நயம்படப் பேசுவான்;

ஞாட்பினும் வல்லான்; வையகத்தா ரெலாம் பொய் யகத்தாரென்பான். என்னே யவன்றன் மாயம்!

இத்தகைய மனிதன் உட்போதரக்கண்ட நம் வாய்மையாளர், "வருதி மாயவ! மாயவ வருதி!! ஈண்டை வருதி, இங்ஙன மிருத்தி" என்றனர். எனலுங் குறித்த விடத்தி னிருந்துகொண்டே மாயவன் வாய்திறவாமுனம், வாய்மையாளர் "நேற்றைப் பிற்பகல் வருவலென் றுரைத்தநின் மாற்றத்தினைமறந்தனைகொலோ?" என வினவலும், அன்னான் "மறந்தே னல்லேன். மற்றி யான் ஈண்டை வருமாறு புறப்பட்டுழித் தானைத்தலைவர் வேலவர்தம் வேலையாளனொருவன் போந்து என்னைக்கையோ டழைத்துக் கொடு சென்றனன். அல்லாக்கால் யான் ஈண்டு வந்திடற் கென்னை? நுந்தம் ஆணையைக் கடந் தொழுக வல்லே னல்லேன். அன்றியும் என்றன் வாய் மொழி பிறழ்ந்த வழுவினைப் பொருட் படுத்தாது என் மீது கருணை புரிந்தருளுமாறு வேண்டுகின்றேன்" என்று பகர்ந்த விடையினைச் செவி சாத்திய மந்திரக் கிழவர், "அதுநிற்க. முளரிமலைக்கணுள்ள நின்றௌவையார் தலைவர் தமக்குற்ற நோயி னீங்கி இற்றை ஞான்று சுகமா யிருக்கின்றன ரலரோ?" என்று கடாயினர்.

"ஆம். சுகமே."

"ஆண்டிருந்து நீ யென்றிவட் போந்தனை?"

"யா னீங்குப் போந்து முந்நா ளாயின."

"இன்னுங் காலைக்கடன் கழித்திலைகொலோ?"

"வேறுகாரியமாய் விந்தையங்குரவர் மெய்ம்மொழிப் புலவர் தம் இல்லஞ் சென்றேன். அதன்பின் அவர் தம்

மோடு யாற்றிடைச் சென்று நேரே அவணின் றீண்டே போந்தனென்."

"புலவ ரெங்குற்றனர்?"

"அவர் தம் மனையகம் புக்கனர். யான் நேற்றை ஞான்றே வந்திலெனே யென்று இவ்விட முற்றேன்."

"இஃதிற்றாக. மாயவ! நீ நந்தம் புலவரைக் கண்டக் கால் நம்மை வந்து காணுமா றுரைத்தி."

"ஓ! அங்ஙனமே செய்வல். மற்று நேற்றென்னை வருமாறு ஆணை தந்தது என் கருதியோ? அறிகிலேன்" என்று மாயவன் வினையபின்னரும் வாய்மையாளர் தம் கருத்தினை வெளியிட விரும்பிலர், அது திரிசிரபுரத்தே நிகழ்ந்த கலகத்தினைப்பற்றிய தாதலின், உடனே மந் திரியார் மனத்திற் பஃறிறப்பட்ட யோசனைகளும் உதித் தன. ஒருவேளை மாயவன் நெருநற் பிற்பகற் பொழுது வாராதிருந்தமையே நன்றென் றெண்ணுவார். மற்றொ ருவேளை யாமிதனைக் குறித்துக் கடாயவழி யென்னை மறுமொழி தந்திருப்பானோவென மயங்குவார். இவ் வாறு அவர் தம்மனம் இருபாற் கவர்வுற்று இடையூச லாடி யொருபாற் படாது நின்றது. நிற்பவே இதனை யொருவாறு தனக்குள்ளே யுய்த்துணர்ந்த மாயவன் "வேற்று ஞாபகம் போலும்" என்று மெதுவாய்க் கூறி னன்.

அதுகேட்ட அமைச்சர் தலைவர், "ஆம். உண்மை யில் வேற்று ஞாபகமே; ஆதலின் நீ இன்னொருபொ ழுது வருதி" என்று கூறி யெழுந்தனர். எழலும், "இனி யான் வாளாதிருப்பது இடர்ப்பாட்டினை யெய் துவிக்கும். ஆதலின் யான் என்னை வியன்றவளவு உறுதி

பயப்பக் கடைபோகுமட்டு முயலாநிற்பேன்" என்றெழீஇ, மாயவன் "இன்றுகாலை யிவ்விடம் யாவனோ ஒரெழிலுடையாடவன் இவுளியேறிப் போந்தனனென்று கேள்வியுற்றேன், அஃதென்னை? மெய்யேயோ?" என்று வினவினன்.

"ஆம். நந்தந் தஞ்சைவாணர் மகன் மதிவாணன்" என்று சொல்லிக் கொண்டே மந்திரியார் உட்புகுந்தனர்.

மாயவனே நின்ற நிலையிலேயே பலவாறுங் கருதத் தொடங்கினன். "அந்தோ! பாவியேன் இவர் கூறியாங்கே நேற்றே வாராமற்போயினெனே! வந்திருப்பேனேல், மாற்றம் பிறழ்ந்தேனென்று இவர் மதிக்கவு மாட்டார்; சொல்லக் கருதிய விடயஞ் சொல்லியு மிருப்பார். அற்றேல் யானதற்குத் தகநாடி நடக்கவுங்கிற்பேன். இனிமேற் சூழ்ச்சித் திறத்தினிற் பொன்னையும் வென்ற இப்புகரில் பெரியோன் என்ன கருதி யென்ன செய்வானோ? யான் செயும் ஒவ்வொரு தொழிலையும் அயிர்ப்பான், ஆய்வான். அம்ம! என்செய வல்லேன்! ஆயினும் இவனயிராவணம் அனைத்தையு மாற்றுவல்—அரசற் கண்மிய தம் மவனுகானுயினன்; தூரிய மனிதன் சுற்றமாயினன்; நெருங்கிய முறைமையான் நீசத்தன்மையான்; விலகிய வுரிமையான் மேதகவுடையோன் —ன்று! நன்று!! இதுவுங் காலக்கொடுமையே யன்றே? ஓ! தலைக்குமேல் வெள்ளம்! எப்புறமும் எரி! எமேனும் தேனு மெதற்கு மஞ்சிலேன். ஆண்மை யற்றவன் பல பெண்மை யுற்றிலேன். மேலே வெண்மை வே குவல். அடியினில் மறைவா யதிர்வெடி வை

தையும் புகைப்பல். குடிக்க வியலாதேற் கொட்டிக் குப்புறக் கவிழ்ப்பல். ஊக்கங் குன்றிலேன்; ஆக்கங் கன்றிலேன். எவ்விதத்தானு மென்னெதிரியை யொழிப்பேன். மாயவ மயங்கேல்! மாயவ மயங்கேல்!!" என்று இவ்வாறு மாயவன் கம்பீரசன்னி நோயுற்று வாய்க்குள்ளே பிதற்றிக்கொண்டு மந்திரம் வல்லுநர் மாளிகையினின்று நீங்கிப் போயினன்.

முதல் அத்தியாயம் முற்றிற்று

---

## இரண்டாம் அத்தியாயம்

---

### கரவு செயல்கள்

இதுகாறும் பேசி விளையாடிக் கொண்டிருந்த மதிவாணனோ வந்த விளைப்பு நீங்க நீராடிய பின்னர், வாய்மையாளர் தம்மொடுங்கூடி விருந்துண்டி கொண்டதன் மேல், மாளிகை மீமிசை செவ்வியதோ ரறையின் கண்ணே, தென்றலங் குழவி மெல்லெனத் தவழ, மன்றலம்பாணி வாய்மையாளர்தம் மக்கள்பாட, இல்லுறை பறவைகளாய கிள்ளையும் பூவையும் மழலைமிழற்ற, அயர்ந்து நித்திரை போயினான்.

இதுநிற்க, வாய்மையாளரோ உண்டி முடித்தபின் யில் வழுதியர்பெருமான் கோயில் புக்கு மதிவாணன் மூதூ நிறுபங்களு ளேதேனுந் தஞ்சைவாணனாரிட "இனி போந்துளதோவென் றறிந்து அதற்குத்தக்கத் துவிக்கும் புரியுமாறே மன்னவன் வரவை யெதிர்பார்த் டிருந்தனர். மன்னனும் அமைச்சர்பிரான்

வரவினை யெதிர்பாரா நின்றனன். ஆகவே மன்ன னும் மந்திரியாரும் ஆண்டுப் போந்துள நிருபங்க ளெல்லாவற்றையு மெடுத்துப் பார்ப்புழி மதிவாணன் கூறியாங்கே மாயவன் பெருங் குற்றவாளி யென்றே பசுமரத்தாணி யறைந்தாற்போலும் உறுதியாயிற்று. இஃதுணர்ந்த வழுதி மந்திரியாரை நோக்கி, "நமது நீதியந்தலைவர் சோக்கநாதர்க்கு இதனைக்குறித்து ஆராய்ச்சி செய்யுமாறு ஆணைதந் தனுப்பிவிடுவாம். அஃதிருக்க, நீவிர் நமது தஞ்சைவாணனார் மகன் மதிவாணனை நமதரண்மனைக் கனுப்புதிர். இல்வாழ்க்கைக்கின்றியமையாத சிலவிடயங்களைப்பற்றி அவன்றன கருத்துக்களை அறியுமா றவாவுகின்றனென். மணமக்கடமது மனக்கோளுணர்ந்தே மணவினை முடிப்பது மாண்புடைத்தாகும்" என்று கூறி வேறு காரியங்களைக் கவனிப்பான் சென்றனன். அமைச்சர்பிரானுந் தமது பஃறலைப்பட்ட தொழிலினைப் பரிவுகூர்ந்து பார்க்கத் தொடங்கினர்.

இனி யரண்மனையினுள் மற்றொருசார் அத்தாணி மண்டபத்தருகே யிருவர் பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தனர்.

"தஞ்சைவாணனார் குமாரன் மதிவாணன் ஈண்டு வந்துளனாமே. அஃதுண்மையேயோ?

"ஆம். அவ்வாறே யென்செவியினும் பட்டது. அஃதன்றியும், நந்தம்மாயவன் அக்கேள்வியினைத் தன் கூற்றினனே வலியுறுத்தான்."

"அற்றேல் யாமவனைப் பார்த்துச் சிறிது நேரமேனும் அவனுடன் சல்லாபஞ் செய்தல் வேண்டும். அவன் பல

விடயங்களினும் வல்லாளனென்று கேள்வியுறுகின்றேன்; மிக்குமிளையனும், மற்போர்வல்லனும், வாட்போர் மன்னனும், விற்போர்வீரனும், சொற்போர்ச் சுமுகனும், சகுணச்செல்வனும், சுந்தரக்குரிசிலாம், கல்விக்கடலாம். நீவிரறிவிரோ?"

"ஆம். யானுமவனைப் பற்றிக் கேள்வியுற்றுளேன். எற்குரைத்தார் இவ்வளவு சிறப்பித்தனரல்லர். ஆயினு மிங்ஙனம் நீவிர் கூறியதிற் பெரும்பான்மை அவர்தங் கூற்றினோடொக்கும். அது நிற்க, திரிசிரபுரக் கலகச் செய்தி ஏதேனும் நீவிரறிதிரோ?"

"ஏதோ கலகம் நடந்ததாகவும் அதனை இம்மதிவாணனே சென்று தனது ஆற்றலினானே அடக்கினதாகவுங் கேள்வியுற்றேன். அதற்குமேல் யானொன்றுமறியேன்."

"கலகம் விளைந்த காரணந் தெரியுமோ?"

"என்னையோ? காலாட்படையொருட் சில்லோர்குடிகடம் இல்லங்களுட் புகுந்து கொள்ளையிட்டனரென்றும், தஞ்சைவாணனார் அதனைப்பற்றி விசாரித்துக் குற்றவாளியரைச் சிறையிட்டனரென்றும், அதுகாரணமாகவே கலகம் விளைந்ததென்றும், மாயவன் தற்செயலாய் ஆண்டுச்சென்றனனாக, மதிவாணன் காகதாலியமாய் அவனே இதற்குக் காரணமாயினானென்று தன்றந்தையார்க்கு நிருபந் தீட்டியிருக்கின்றனனென்றுஞ் சனங்கள் சொல்லக் கேள்வியேயன்றி, யான் இதன்கட் பொய்ம்மெய் யறிகிலேன்."

"நீவிர் கூறியதிற் பெரும்பகுதி மெய்ம்மையே, மற்று, மாயவன் திரிசிரபுரஞ் சென்றது தற்செயலன்று.

வேண்டுமென்றே யெனக்கோடற்குக் கரிகள் பலவுள வென்று நமது மந்திரியார் வாய்மையாளர் மன்னவன்பா லுரைத்தனரென அம்மாயவனே யென்னிடங் கூறினன்.”

“அற்றேல் அகப்பட்டனன் மாயவன்! அவனின்னணம் நும்பாற் கூறியதன் கருத்து யாதுகொல்? அறிந்திரோ? அன்றியுமவன் செல்வுழி முளரிமலைக்குப் போதல்வேண்டுமென் றன்றோ மன்னவன் மாட்டு விடைபெற்றேகினேன். முளரிமலைச் சென்ருன் சிராமலைச் சேறற்குக்காரணமென்? மேலும் மதிவாணற்கும் மாயவற்கு மென்னை? யாது கொலியைபு? மதிவாணன் இவன்மீது குற்றமேற்றுதற்கு ஏதேனு முட்கருத்து வேண்டுமே. அஃதென்கொலோ? இவற்றையெல்லாஞ் செவ்விதினுய்ந்தறிமின்.”

என்று சொக்கநாதரும் வேலவரும் பேசிமுடித்தலும், சேவகனெருவன் போந்து சொக்கநாதரை வழுதியும், அமைச்சர்பிரானும் அழைத்தனர் என்று கூறலும் சொக்கநாதர் வேலவரிடை விடைபெற்று மன்னவனிருந்துழி யேகினர்.

மேற்கூறியாங்கு வேலவருஞ் சொக்கநாதரும் பேசிக்கொண்டிருந்த வொவ்வோரெழுத்தினையுந் தவற விடாது மறைந்து ஒற்றுக்கேட்டிருந்த மாயவன் சொக்கநாதரைச் சேவகனழைத்துக்கொடு சென்றவக்கணமே வேலவரெதிரே பொள்ளெனத் தோன்றி நின்ருன். அது கண்ட வேலவர் சிறிது வெரூஉக்கொண்டனராயினும் அதனைப் புறத்தே பிறர்க்குப் புலனுகாது கடிதின் மறைத்துக் கொண்டனர்.

"வேலவரே! யான் நும்மிடத்து மறையெனக் கூறிய வாய்மொழிகளை வெளியிட்டது நேரிதேயோ?" என்று வினயினன் மாயவன்.

"நேரிதோ அன்றோ? அதனை யாமறியேம். நின்றன் மறைமொழிகளை வெளியிட்டு நின்றனக்கு ஏதேனுந் தீங்கிழைப்பாமென்று கருதினேமல்லேம்" என்றனர் வேலவர்.

"அன்றியும்

* "நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
வறைகடல்சூழ் வையநக" (ஙு)

என்று முன்னோர் கூறியாங்கே அவ்வாறு வெளியிடுவோர் அருநரகுக் காளாவரென்ப தொருதலையன்றோ? அங்ஙனமாகவும் நீவிர் வெளியிட்ட தென் கருதியோ?"

"எல்லாம் நிற்கு நலங்கருதியே யென்றுணர்தி."

"அற்றேல் நீவிரெப் பொழுதும் எற்குத்துணைவராய் நின்றுதவி புரிதல் வேண்டும்."

"ஓ! அதற்கென்னை?"

"அதற்கொன்றுமில்லை. ஆயினும் நீவிரெற்கு நுந்தம் வாக்களிமின்."

"யாமெப்பொழுதும் நிற்குத் துணைபுரிதல் கருதியிருப்பவும், நீயதனை யயிர்த்து மீட்டுமெம்மை வாக்களிக்குமாறு வெண்டுகிற்பதை யாலோசிப்பின் நின்றன் ஒவ்வொரு செயலினுக்கும் ஒருட்கருத்துக்கற்பிக்கலாம் போலும்!"

---

* நாலடியார்.

"ஆம். கற்பிக்கலாம். ஆயினும் அஃதுண்மையா தல் வேண்டாவோ?"

"வேண்டும். அது நிற்க, நீ யிவ்வாறெம்மைக் கேட் பதனால் நின்றன் கருத்து யாதுகொல்?"

"இத்துணையுத்துணர்ந்த பேரறிவாளர்க்கு என் றன் கருத்துச் சொல்லியோ தெரிதல் வேண்டும்? நீவிர் முன்னரே தெரிந்துகொண் டிருக்கின்றீரென்று யான் அறிந்துகொண்டேன். ஆகவே யானதனை மீட்டுங் கூறப் புகுவேனேல் அஃது 'அறிந்ததை யறைதல்' என்னுந் தருக்கநூற் குற்றத்திற் கிடனாமன்றே!"

"நீ சொல்ல விரும்பாமையின் அதனை விடுத்தி! மற்று, நீ மெய்ம்மொழிப் புலவரிடம் அவர்தம் மகள் கயற்கண்ணியை அங்கிசான்றாய் மணந்து கொள்வலென வாக்குத்தத்தம் பண்ணினையென்று கேள்விப்படுகின் றேனே! அஃதுண்மை கொலோ?"

என்று வினய வினாவிற்கு மாயவன் மறுமொழி சொல்ல அறியாது சிறிது திகைத்தனனாயினும் ஒருவா றாக விடைதந்தனன். அது நேரிய விடையன்றென அவற்கே தெரியும். ஆயினும் என் செய்வது?

"ஆம். உண்மையே. அதற்கோரையமுமில்லை. அவர்தம் மகள் கயற்கண்ணியையே மணப்பான் கருதி யிருக்கின்றேன்" என்றனன் மாயவன். உடனே வேல வரும் மாயவனிடம் விடைபெற்றுக் கொண்டு தாம் நாடோறும் வீரர்கட்குப் போர்முறைகள் பயிற்றுவிக் கும் படைச்சாலை புக்கனர்.

மாயவனோ பின்வருமாறு தனக்குள்ளே பேசுகின் றான்: "என்னைக் காணும்போதெல்லாம் அன்புடன்

பேசும் மன்னவனே யான் திரிசிரபுரஞ் சென்றுவந்தது தொடங்கி என்னிடத்து அதிகமாகப் பேசுகின்றிலன். மந்திரி வாய்மையாளர் என்மீது ஐயங்கொண்டுளரென் பது வெள்ளிடை மலையென விளங்குகின்றது. அவ் விளஞ்சிறுன் மதிவாணனே ஆண்டுத் திரிசிரபுரத்து யான் மும்முறை அவனைக் கொல்ல முயன்றும் ஒவ் வொன்றினும் வெகு சாமர்த்தியமாய்த் தப்பிக்கொண் டனன். அவன் பரிமாவேறி வாளினைக் கைக்கொண் டனனேல் நகுலனும் வெள்கி நகுலமாய் மறைவான்; வில்லெடுத்தனனேல் விசயனும் அவசயமடைவான். அதற்கையமில்லை.—வழுதியோ தன் மகளினை மதிவா ணற் களிப்பான் மதித்தனன்! மன்னவன் மருகன் மாயவனே மதிவாணனே? இதன்கண் முயன்று இன்னு மொருகை பார்ப்பேன். ஓ! இன்பவல்லீ! உன்னை மணப்பவன் யானே, மதிவாணனல்லன் —ஆ! இஃதெ ன்னை! இறும்பூது! யான் மெய்ம்மொழிப் புலவர்மகள் கயற்கணியை மணப்பலென் றுரைத்தமாற்றம் வேல வர்க் கெங்ஙனந் தெரிந்தது?—இருக்கட்டும். யான்கயற் கணியை மணப்பலென்றது இருவர்க்குத் தெரியும். திரிசிரபுரஞ் சென்றது ஒருவர்க்குத் தெரியும். இன்ப வல்லியை யெய்த வெண்ணுவது ஒருவர்க்குந் தெரி யாது. ஆகவே யான் இது கருதியே மதிவாணனைக் கோறல் கடைப்பிடித்தேனென்று எவரானுமுய்த்துண ரன் முடியாது. யாவற்றிற்கும் மதிவாணனிருக்கு மட்டும் என்றனக்கின்பமில்லை யென்பது அங்கையி னெல்லியங்கனியே! ஆதலின் என்றன் மதிவலி துணைக் கொடு மதிவாணனை மாய்ப்பான் கருதிப் பூண்டேனு

றுதி! இனிப் பின் வாங்கேன்! எவரையு மதியேன்!" என்றெண்ணமிட்டுக் கொண்டே மாயவன் வெளியே போயினன்.

துயிலொழிந் தெழுந்த மதிவாணனே கீழிழிந்து மாளிகைப் புறக்கடை சென்று வாவியினுற்று முகங் கழீஇ வாய்பூசி வருமுன்னர் அவற்குச் சிற்றுண்டி படைக்கப்பட்டிருந்தது. உடனே அவனும் சிற்றுண்டி கொண்டனன். கொள்வுழி "மதிவாணு! வந்த காரிய மின்னதென்றறிவையோ?" என்ற சொற்கள் அவன் செவியில் வீழ்ந்தன. வீழலுந் தலைநிமிர்ந்த மதிவாணன் புன்முறுவல் பூத்து "அறியேன் அம்மா!" என்றனன். என்னக் கேட்ட வாய்மையாளர்தம் மக்கள் "திருமணம்! திருமணம்!!" என்று கூவிக் குதித்தனர். அப்போழ்து தன் மக்களை வாளாதிருக்குமாறு கையமைத்து வாய்மையாளர்தம் மனைவி மதிவாணனைநோக்கி "மதிவாணு! நிற்கு நந்தம் வழுதியர் பெருமான் மாவீர வள்ளல் தனது அருந்தவச் செல்வக்குமாரி இன்பவல்லியைக் கடிமணஞ்செய்து கொடுப்பக் கருதியே நின்னை யழைத்தனன்" என்றனள்.

"அற்றேல் எந்தையாரநுமதியின்றி யானென்ன ணம் இதைக் குறித்துப் பேசுவல்?"

"நின்றந்தையார்க்குத் தெரியாமலோ இவையனைத்தும் நிகழ்கின்றனவென் றெண்ணுகின்றனை?"

"ஆம். அவர் இவையனைத்தும் அறிந்திருக்கலாம். ஆயினும் அவர் யான் சிரகிரியிலிருந்துழி எற்குவிடுத்த நிருபத்தின்கண் மதுரை செல்லுமாறு வரையப்பட்டிருந்ததேயன்றி வேறொன்றும் மணவினையைக் குறித்து எழுதப்பட்டிலதே."

"ஏன்? அவரிதைக்குறித்து ஒன்றும் வரையாதிருந்தமையேமேதக்கது. விவாகவிடயத்தில் இந்நாட்பிள்ளைகள் பெற்றோர்க்கடங்கியும் ஒழுகுகின்றனரோ? மேலுமவர் தம் மகனுக்குத் தாமே இத்தகைய விடயங்களைக் குறித்து எதுவேயாயினும் வரைந்திடல் நேரிதாகுமோ?"

"அஃதென்னை அங்ஙனங்கூறுதிர்? உலகவியலுள் ஒரு சிறிதும் உணரும் பருவமுறாத மக்கட்கு அவர் தந்தாதைமார் நன்மதிபுகட்டி நடத்தாது அவர்தமைமனம் போனவாறெல்லாம் போகவிட்டு அழிவுறக் கொன்னே விடுத்தல் அழகிதோ?"

"அழகிதோ அன்றே? அதற்கென் செய்வது? நீ நின்றன் தாதையார் விரும்பியாங்கு ஈண்டுப் போந்தனை. ஈங்கே நின்றன் சிறிய தாதையார் நிற்குவேண்டிய உதவி புரிவார். அவர்தமோடளவளாய் ஆலோசனை செய்து கோடி."

"அவர்தமோடளவளாய் ஆலோசனைசெய்தல்! அம்மம்ம! இஃதென்னை விந்தை! நன்று கூறினீர்! நன்று கூறினீர்!! அவர்தம் ஆணைவழி யொழுகலை விடுத்து அவர்தமோடளவளாய் ஆலோசனைசெய்யவோ சொல்கின்றீர்?"

"ஐய மதிவாண! யானுன்னை இக்காலத்துத்தாமெனுமதங்கொடு தருக்கித் திரியுஞ் சிறாருட் படுத்தமைபற்றி வருந்தற்க. உன்றன் உத்தமகுணங் கண்டு உளமகிழ்கின்றேன்."

"அம்மையே! யான் சிறிது வெளியேபோய் வருதற்கு விடைதரல் வேண்டும்."

என்று கேட்டலும் வாய்மையாளர் தந்துணைவி விடையளித்தனள். உடனே மதிவாணன் தன்னெதிரே

யிருந்த நிலையாடிக்கட் டன்னைநோக்கிக் குஞ்சிகோதி, நீலக்குறியொன்று நெற்றியிற்றீட்டி, அதன்கீழ்ச் சிறிதாய்ச் செவ்விய திருநீற்றுக்காப்பும் இட்டுக்கொண்டு நிற்றலும், விரைந்துபோந்து ஒருவன் உடைகளைக் கையகத்தேந்தி நீட்டினான். மதிவாணன் அவ்வுடைகளைத் தரித்துக் கவயமணிந்து போர்க்கோலம் பூண்டு மாளிகைத் தலைகடைவந்தனனாகப் புரவியொன்று புனையப் பெற்று நிற்கக்கண்ட மதிவாணன் விரைந்து சென்று அதன்மீதேறிக் கலினங் கைக்கொண்ட வளவினில்அது மின்னென மறைந்தது. மறைந்ததுகண்ட மாந்தரனைவரும் "இத்தகை யிவுளி யாமெங்குங் கண்டிலேம்! இதனை யுகைக்குநன் யாவனோ? அறியேம். என்னை யதிசயம்! என்னை யதிசயம்!!" என்று தமக்குள்ளே பேசிக்கொண்டனர்.

இது நிற்க, மதிவாணனோ புதுவர்புகுவாயிலாற் புறத்தேபோந்து வையையாற்றின் தென்கரையோரமாய்ச் சென்று மணலூர் வந்துற்றனன். உடனே பரியைவிட்டிறங்கிய மதிவாணன் அதனைப்பைம்புன் மேயுமாவிடுத்து அடுத்ததோர் கருங்கன் மண்டபத்தெய்தியிருந்து பின்வருமாறு தனக்குள்ளே யோசியா நின்றான்:

"மணவினை கருதியோ தந்தையார் என்னை மதுரை செல்லுமாறு ஆணைதந்தது? மணவினைப் பேச்சுயான் தஞ்சைமாபுரியி லிருந்துழியொன்றும் நிகழ்ந்திற்றிலதே! அவ்வாறு ஏதேனுமிருப்பினும் என்னருமைத்தாய் என்னிடங் கூறுதிராளே! இது யான் திரிசிரபுரஞ்சென்ற பின்னரே நிகழ்ந்திருத்தல்வேண்டும். அற்றேல் எந்தையார் என்னைத் தஞ்சைக்கழைத்து யான் மதுரை போக

வேண்டிய காரியம் இன்னதென்று ஏனென்னைத் தெருட்டாது சிராமலேநின்றே செல்லுமாறேயினர்? காவலன் கணப்பொழுதுந் தாழாது என்னை விடுக்குமாறு ஆணையிட்டனன்போலும்! அஃதெற்றாயினுமாகுக. வாய்மையாளரும் இதைக்குறித்து ஏனென்றுமென்னிடங் கூறிலர்?—ஓ! உணர்ந்தேன்! உணர்ந்தேன்!! யாவனோ ஒருவன் யாங்கள் பேசிக்கொண்டிருப்புழி உட்போதரல் வேண்டியமை பற்றியன்றே அவரொன்றுங் கூறினாரல்லர். இது நிற்க, வழுதியார்க்கு அறவும் நெருங்கிய சுற்றத்தார் எத்துணையரோ விருப்பவும், என்னை யவர் தம் மருகனாகக் கோடற்கு என்னிடத்துளதாய சிறப்புக்குணம் யாதுகொலோ?— ஓ! அஃதொன்றுமன்று. அவர் எந்தையார்மீது வைத்துள பரிவினானே யிவ்வாறு செய்ய விரும்புகின்றனர்.—ஓ! இறைவனே! எங்ஙனமுய்த்தியோ வுய்த்தி"

என்று கருதுமளவில் இருவர் ஆடவர் ஒருவரோடொருவர் மலைந்துகொண்டு மதிவாணனெதிரே போந்தனர். போதரக்கண்ட நந்தலைவன் அவர்களை நோக்கி "நீவிரேனோ வீணிற் பொருதுமாய்கின்றீர்? நின்மின்! நின்மின்!!" என்று கூயினன். கூயது கேட்டாரிருவரும்போரினைநிறுத்திமதிவாணன்பாலுற்று ஒவ்வொருவனுந் தன்றன் வழக்கினை வகுத்துரைப்பான் தொடங்கி விடயத்தை நேரே கூறாது காலம் நீட்டித்தல் கண்ட மதிவாணன் தன்புரவி நின்றவிடத்தினை நோக்கிப் பொள்ளெனத் திரும்பினன். அப்போழ்தத்தொருவன் தன் குதிரைமீதேறி நடாத்திக்கொண் டோடாநின்றனன். அது கண்ணுற்ற மதிவாணன் பொருக்

கென வெழீஇ ஞெரேலெனப் பாய்ந்து சென்றனன். பக்கத்து நின்றாரிருவரும் மதிவாணனை விரைந்து செல்ல வொட்டாது இருகப்பற்றித் தகைத்தனர். ஆயினு மஞ்சாத மதிவாணன் தாவிக்குதித்தும் உதறிச் சிலிர்த்துந் தன்னுடல்பற்றிய தடியரைத் தாடையிற் புடைத்துங் கைகளை வாழையந்தண்டெனவொடித்துந் தாளின் ஞற்றுவைத்தும் அவர்களைக் கீழே தள்ளிவிட்டுமீட்டும் விரைந்தோடினன். இதற்கிடையிற் பரிமாவேறிப் பரபரப்புடனே பதறியோடிய மனிதன் குதிரையின்வேகத்தினிற்கேற்ப அதன் மீதிருக்கலாற்றாது சிறிது தூரஞ் சேறலும் அஃதவனை யொருபுறமெறிந்துவிட்டு மதிவாண னிருந்தவிட நோக்கித் திரும்பிற்று. திரும்பி வந்த பாய்மா மதிவாணனைக் கண்டவுடனே கனைத்துக் களித்துக் குதித்துத் தலைநிமிர்ந்து அவனருகில் நின்றது. அவ்வாறு நிற்றல்கண்ட மதிவாணன் அதனைக் கழுத்தினின் மெல்லெனப் புடைத்துத் தைவந்து அதன் மிசைத்தாவினன். உடனே குதிரையுங் கூடன்மா நகரை நோக்கிப் பறந்தது. அங்ஙனம்பறந்து செல்லும்போது ஒரு பழுமரத்தினின்றும் நற்கரும் பாந்தளொன்று மதிவாணன்மேல் விழுந்து அவனது தூரகத்தினையுமுற்றது. அஃதுணர்ந்த மதிவாணன் தன் வாளினல் அதனை யிருதுண்டாக வெட்டி யயற்புறமெறிந்துவிட்டு அண்ணுந்து மரத்தினுச்சியை நோக்கலும் ஆண்டிருந்தொருவன் ஒரு பெருங் கல்லினைச் சுழற்றி மதிவாணன் மீதோச்சி விசையுடனெறிந்தனன். இதுகண்ட செம்மல் சரேலென விலகிநின்று மீட்டு மரத்தின்மீதுள்ள மனிதனை யுற்றுநோக்கினன். இவ்

வாறு நோக்குகின்ருன் மதிவாணனென்றுணர்ந்த அம் மனிதன் மரத்தின் கொம்புகளினிடையே மறைந்தனன். இதற்கிடையில் தன் புரவி பின்செல்லத் தலைப்பட்டது. இஃதென்னை கொலென் றுயரநோக்குதல் விடுத்து முன்புறம் பார்த்தலும் இருவர் முசலக்கையினர் முனைந்து குதிரையைத் தாளினிற்ருக்கி அதனைப் பங்கப்படுத்துவான் முயறல் கண்டனன். ஓ! இனியென் செய்வான் மதிவாணன்? நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்தனன். மேலே நோக்கினன். சிறிது தூரந் தன் பரிமாவினைத் திரும்பிப் பின்னே செலுத்தினன். செலுத்துழி யொருவன் வேலியொன்றினிற் கரந்து நின்று எறிவேலொன்றினை விடுத்தனன். அஃதயலே பைம்புன் மேய்ந்து நின்ற பசுவினைப் படுத்தது. இஃதறிந்த மதிவாணன் "இனி யெதுவரினும் வருக—என்கொ விமமாயம்! என்கொ விம்மாயம்!!—ஓ! ஒரு நொடிப் பொழுதுந் தாழேன்" என்று சொல்லித் தன் குரகதத்தினைத் தூண்டலும் அது மனோவேகமும் இதன் கடுப்பினுக் கிணையன் றென்னுமாறு விரைந்து எதிரே நின்ற இருப்புலக்கையாளர்மீ தெழும்பித் தாவிக் குதித்தோடிவிட்டது. மதிவாணனும் ஞாயிறு மேற்றிசை மறைந்து சிறிது போதாயினபின் மதுரையில் மந்திரியார் மாளிகை வந்துற்று மாடத்தும்பர்ச் சென்று ஓர் படுக்கையறைக்குட் புகுந்து ஆண்டு விரித்துக்கிடந்தவொரு பஞ்சணையின்மீது 'அம்மவோ' என்று கூவியயர்ந்து வீழ்ந்தனன்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று

---

## மூன்ரும் அத்தியாயம்

### அரண்மனைக் கழைத்தல்

உடனே சிறிது போதிற்கெல்லாம் மந்திரி வாய்மையாளர் அரண்மனையினின்றும் போந்து மாலைக்கடன் முடித்தபின்னர் மாடத்தும்பரேகி நிலாமுற்றத்தின்கண் ஒரு பிரப்பருக்கையி னிருந்துகொண்டு, "மதிவாணு!" என்று விளித்தனர். இதுகேட்ட மதிவாணனும் அக்கணமே பள்ளிவிட்டெழுந்து போந்து அவரருகே நின்றனன். நிற்றலும் வாய்மையாளர் அவனைத் தன்னெதிரே ஓராதனத்திருத்தி, "யாமிருவேமுமின்று காலைப்போழ்து பேசிக்கொண்டிருப்புழி மாயவன் போந்தனன். ஆதலின் யான் நின்னை விடுக்குமாறு நேரிட்டது. அதன்பின் யான் விரைந்து மன்னவன் மாளிகைக்குப் போய்விட்டேன். அதனனேயே நந்தம் பேச்சுத் தடைப்பட்டதுகாண்" என்றனர். அதற்கு மதிவாணன் "யானுமவ்வாறே யெண்ணினேன்" எனக் கூறினன்.

"யானின்று சிறிதுநேரம் முன்னரே போந்திருக்கலாம். அரண்மனையில் யான் செய்யவேண்டியன பல விருந்தனவாதல்பற்றி யான் சிறிது ஆண்டுத் தாழ்த்தலின்றியமையாதாயிற்று."

" அதுபற்றி யென்னை ?"

" ஒன்றுமின்று. ஆயினும் நின்னைத் தனியே யீண்டு விடுத்துவிட்டு யான் அவணிருத்தலை விரும்பிலேன்."

"யானும் ஈண்டுத் தனிமையினிருத்தலை விடுத்துப் புரவியேறி மணலூர்காறும் சென்று திரும்பினேன்."

"இந்நகர்ப்புறக் காட்சிகளை நீ நனிவிரும்புதியோ?"

"ஓ! பெரிதும் விரும்புகின்றேன். அஃதன்றியும் இந்நகரினுட் தீயர் சிலர் பல்கியிருத்தல் வேண்டுமென்பதும் புலனாகின்றது. அவர்தமை நல்வழிப் படுத்த முயறலும் வேண்டுகின்றேன்."

எந்நகரின் கண்ணும் ஆங்காங்குத் தீயர் சிற்சிலர் இருத்த லியற்கையே."

"அற்றன்று. இந்நகரின் கண் இயற்கையளவிற்கு மேற்பட்ட தீயர் தொகையுண்டென நம்புதற்கிடனுளது."

"அஃதெங்ஙன மறிந்தனை? நீ சிறுபருவத்திலேயே இந்நகர்விட்டுத் தஞ்சைமாபுரிக்கு நுந்தையாரொடு மேகினையே; அதன்பின் இன்றுதானே யிவட்போந்தனை. இதற்குள் நீ இவ்வாறு இந்நகரினைக் குறித்துப் பகருதல் எக்காரணம் பற்றியோ?"

"தாலீ புலாக நியாயம் பெரும்பாலுந் தவறு மியல்புடைத்தாயினும் இந்நகரினைப்பற்றி யானவ்வாறு கருதுழி அது நேரிதே யாயிற்றென்பதற்கு அணுவளவும் ஐயமின்று."

"இஃதென்னை? நீயுரைப்ப தின்னதென் றறிகிலேன். அதனை விளங்கவுரைத்தி" என்றனர். எனலும் மதிவாணன் தான் மணலூர் சென்றதும், ஆண்டிருவர் பொருது போந்ததும், ஒருவன் கலிமாவைக் கவர்ந்து

சென்றதும், முதலாகிய யாவற்றினையும் விரித்துச் சாங்கோபாங்கமாய்க் கடன்மடை விண்டெனக் கழறினன். இவை யனைத்தையும் இனிதினிருந்து செவிக்கொண்ட வாய்மையாளர் ஒன்றும் மறுமொழி சொல்லாது திகைத்தனர். அதன் பின் "நன்று! அதன்மேலென்ன?" என்றனர்.

"அதன்மேல் நீவிரென்னை யென் பெயரிட்டழைப்பக் கேட்டு விரைந்தெழுந்து போந்தேன். அவ்வளவே."

"நிற்குப் பகையாயினோர் யாரேனும் ஈண்டுளரோ?"

"இதற் கையப்பா டென்னை? மாயவனே இத்துணையுஞ் செய்யுமாறு ஏவி யிருத்தல் வேண்டும்."

"இவ்வாறவன் செய்வதில் அவன்றன் கருத்து யாது கொல்?"

"யானவன்மீது கலகக்குற்றமேற்றி நிருபம் விடுத்திருத்தலே அவனை யின்னணஞ் செய்வான் தூண்டியிராதோ?"

"அவ்வணமே கொள்கிற்போம். அப்போது அவனைக் கலகஞ் செய்குவான் தூண்டிய தென்கொலோ? இப்போது ஆராய்ச்சி யொன்றினின்றும் மற்றொன்றற்குத் தாயதேயன்றி வேறன்று. எவனும் எதனையு முட்கருத்தின்றிச் செய்யானென்னு மியல்பு நீ யுணராத தன்றே."

"ஆம். நீவிர் கூறுவவனைத்து முண்மையே. அவன் கருத் தின்னதென் றியானறிகிலேனென்று இன்று காலையே நும்மாட்டுச் சொல்லியிருக்கின்றேனன்றோ?"

"ஓ! அறிவேன்! அறிவேன்" என்று வாய்மையாளர் கூறியவளவினில் ஒருவன் அம்முற்றத்துத் தகள்

சித்தான்; மற்றொருவன் நீர் தெளித்தான்; மூன்றாவன் வெள்ளிக்கலங்கள் கொடுவந்து முறையின் வைத்தகன்றனன். நான்காவன் உணவு முதலியன பரிமாறினன். இவை கண்ட அவ்விருவரும் ஒருவரோடொருவர் விளையாட்டாகவும் விநோதமாகவும் பலவிடயங்களையும் பற்றிப் பேசிக்கொண்டே உணவுகொண் டெழுந்தனர். எழுந்து சிறிதுநேரம் இருவரும் ஒன்றும் பேசுகிலாது உலவா நின்றனர். அதன்பின் வாய்மையாளர் மட்டும் ஓரிருக்கையிலுற்று அதன்மீது சிறிது சாய்ந்து கொண்டு ஆலோசனைக் கடலி லாழ்ந்தனர். மதிவாணனோ அன்று மாலை நடந்த யாவற்றினையும் மறந்துவிட்டு மாளிகையுச்சியிற் றெருவோரமாய்க் கட்டப்பட்டுள கைபிடி மதிலிற் சாய்ந்துகொண்டு பின்வருமாறு இசையுடனொன்றிப் பாடா நின்றனன்.

'எப்போது முள்ளா ளியல்புணர்ந்து நாடோறுந்
தப்பாது தாண்டவம்யா மாடுகெம்வா தோழி!
தமிழ்பாடி யன்போடு மாடுகெம்வா தோழி!!
நூனந்த மில்லாத தண்முகில்பொய் கிற்பவெழு
மானந்த நீத்தத்துள் ளாடுகெம்வா தோழீ!
அணுவளவுந் தாழாம லாடுகெம்வாதோழீ!!
இன்ப வடிவுடைய வீசனெனுங் குன்றினிழி
யன்புப் பெருநதியு ளாடுகெம்வா தோழீ!
அவனருள்பெற் றுய்கிற்போ மாடுகெம்வா தோழீ!!' (4)

இவ்வாறு மதிவாணன்றன் இன்பச் செம்பாடல் செவிமடுத்த வாய்மையாளர் மெல்லென ஒரு வேலையாளனை விளித்துத் தன் மக்களிருவரையும் அழைத்துக்கொண் டோதைப்படாமல் வருமாறு கூறி விடுத்

தனர். அங்ஙனம் விடைபெற்ற சேவகன் மீண்டு வரு முன்னர் மதிவாணன் மீட்டுமெழுந்து உலாவத் தலைப் பட்டனன். அதுகண்ட மந்திரியார் மதிவாணனைக் கூய் "ஐய மதிவாணு! நீயிசைத்தமிழும் வல்லைகொல்?" என்று வினவினர்.

அதற்கு மதிவாணன் "ஏதோ அதன் கண்ணுஞ் சிறிது பயிற்சியுள்ளேன். யான் எப்போழ்தாதல் சிந் தாகுல மெய்தியக்காற் சிறிது வாய்விட்டுப் பெருமா னைப் பாடிக்களிக்கப் புகுவது முண்டு. நெருநற்றிர வினில் யான் சோழன் வந்தான் என்னுஞ் சீறூரின் கண்ணே தங்கியிருப்புழி ஆண்டுப்போந்த ஓராண்டி வாதவூரடிகள் மலர்வாய்ப் பெய்த வாசகத்தேனினை வாய்குளிரப் பொழிந்துபாடி இல்லங்கடோறும் ஐய மேற்றுச் செல்லா நின்றான். அதுகேட்ட என்றனுள்ள முருகி நெக்குடைந்து மொண்டு ஆனந்த விசைத்தேனை யோடி யோடிப் பருகிற்று, கண்ணரும்பிற்று, மெய் பொடித்தது. உடனே யானுமவன் பாடியவத் திருப் பாசுரத்தை வாயார மனமாரப் பாடி யுள்ளம் பூரித் தேன். இதனைச் செவிசாத்திய அவ்வாண்டி தன் கடி ஞையைச் சுழற்றி யோரிடமெறிந்துவிட்டு என்பாலோடி வந்து என்னை மெய்யுறத் தழுவி யழுது வாழ்த்தினன். அவனை யானென்னென வினவாமுன்னர் அவன் என் னைத் தழுவிய தன் கரங்களை வாங்கிக் கொண்டோடி மறைந்தனன். உடனே யானும் பின்பற்றியோடி வெகு தூரஞ் சென்றும் அவனைக் கண்டிலேன். அதன்மேல் யான் மீட்டு மென்னிருப்பிடம் போந்து அணைமேவி

யயர்ந்து நித்திரை போயினேன். இத்துணையும் நீவிரிப் பொழுது வினவலும் ஞாபகத்து வந்தமையிற் கூறினேன்'' என்றனன்.

அக்கணம் மந்திரியார் தம் அருமைத்திருமகளிராய வவ்விருவரும் போந்தனர். உடனே மந்திரியாரவர் தமை நோக்கி, "நீவிரிருவரும் நேற்றை ஞான்று அரண்மனையின்கண் நந்தஞ் செல்வக் கோமகள் இன்பவல்லியோடும் அவடன் பாங்கியரொடும் விளையாடிக்கொண்டிருப்புழிப் பாடியவற்றை யிப்போ திசையோடு சொல்லுகிற்பீரோ ?'' என்று கேட்டலும், அவ்விருவரும்பருந்தும் நிழலுமெனப் பாட்டு மெழாலும் பொருந்திடப் பின் வருமாறு பாடத் தொடங்கினர்:

'என்றென் றலைவனைக் காண்பலென் றேங்கிய
வேந்திழை யேயெழி லின்பவல்லீ !
நன்றிய னுன்றனை நாடி யடைந்தன
னுதன் மதிவாண நாயகனே. (5)

ஆகையின் மாதே யகங்கரை யேலினி
யானந்த முன்னை யடுத்ததுகாண்
தேக மிளைத்துத் தியங்க லவன்வருந்
திக்கினை நோக்கித் திகையாதே. (6)

ஆடன் மறந்திட் டனந்துறந் தேதமிழ்ப்
பாடன் மறந்த பணிமொழியே !
கூடல் கருதிக் குறுகினன் காணினிக்
கூட விழைத்துக் குறையாதே.' (7)

இவ்விசைத்தமிழ்ப்பாடல்களைப் புன்னகையொடுங் கேட்டுக்கொண்டிருந்த மதிவாணன் வாய்திறவாதுமோ

னவிரதம் பூண்டனன். இவ்வா றிவனென்றும் பேசாமைகண்ட அமைச்சர்கோமான் "நின்றன் சிற்றன்னையாரிடமிருந்து நின் கருத்துக்கள் யாவற்றினையு முணர்ந்து மிகப் பேருவகை மேவினன். அதுநிற்க, நீ நந்தந் தஞ்சை வாணனர் தாம் விடுத்த நிருபத்தின்கண் நிற்கொன்றும் வரைந்திலரேயென மயங்குதலொழிக. அவர் எற்கு விடுத்த நிருபத்தின்கண் நீ வழுதியர்பெருமான் மருகனுதலைத் தாம்பெரிதும் அவாவு மாற்றினை நனி புலப்படுத்துளர். வேண்டுதியே லதனைக்காண்டி" யென்று சொல்லி யெழீஇ ஓரறைக்குட் புகுதலும் மதிவானனும் அவருடன் அவ்வறையினுட் புக்கனன்.

வாய்மையாளர் காட்டிய நிருபத்தின்கட் டன்றுதையார் விருப்ப மனைத்தெனக் குறிக்கப்பட்டிருந்தமையின் மதிவாணனும் மந்திரியார் கூற்றிற்கு ஓமென விணங்கினன். அதன்பின் அவ்விருவருந் றுயில்கொளப் போயினர். மதிவாணனொழிய மற்றை யாவரும் நித்திரை போயினர். ஊருமடங்கிற்று. அப்போழ்து நாழிகைமணி யோதையும் அடிக்கடி சுணங்கன் குரைப்பும், காவலர் கடுகி யேகுறுங்கலிப்பும் கூகையின் குழறலும், யாமக்கோழி காட்டுங் குரலுமன்றி வேறேரோதையுங் கேட்கப்படவில்லை. உடனே மதிவாணன் ஆன்மகோடிக ளனைத்தும் அயர்ந்து துயில்புரிவதையும் வானத்தில் மதி யுடுத்திரளொடு கலந்து மிளிர்வதையுங் குறித்து யோசித்து "ஊழிக்காலத்தினு மிவ்வாறே சருவான் மாக்களையு மொடுக்கி நம்பெருமான் மிளிர்வான்போலும்" என்றான். அதன்பின் "ஓ! பெரும! என்னே நின்கருணை! என்னே நின்கருணை!

நீ யோகவேடமே புனைந்துளையாயின் அனைத்துலகும் அனைத்துயிரு மிவ்வாறே யோகமார்க்கத்திற் றிரும்பி யசைவற்றிருந்துவிடு மன்றே?" என்று கூறிப் பின்வரும் மணிவாசகப் பெருமான்றன் திருச்சாழலைப் பாடிய தொடங்கினன்.

*"தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ" (8)

என்னு மிப்பாசுரம் பாடி இசைக் கடலிற் றிளைத்தாடா நின்றான். அதன் பின்னர்ச் சிறிதுநேர மொன்றும் பேசாது மௌனமாய் அசைவற்று நின்றான். உடனே வானத்தை நோக்கித் தலைநிமிர்ந்து கைகூப்பி நின்று "ஐயனே! நின்செயலெல்லாம் உயிர்கட்கு உணரொணு வுறுநலங் கருதியே" என்றுரைத்துத் தனது பள்ளி யறையுட்புக்குச் சாளரங்களைத் திறந்து வைத்துவிட்டுப் படுக்கையைக் கையான் மும்முறை தட்டி யுதறியபின் பெருமானை நினைந்து துதித்த பின்றைப் படுத்துக்கொண் டுறங்கினன்: அற்றையிரவு கங்குற்போது கழிந்து வைக றைக் காலமும் இறுதியுறத் தலைப்பட்டது. கீழ்வானம் வெள்ளென விளர்த்தது; ஓவின தாரகையொளி; புறஞ் சிறைப் பொழிலும் பிறங்கு நீர்ப்பண்ணையும் இறங்கு கதிர்க் கழனியும் புள்ளெழூஉந் தார்த்தன; மறையவருட் சில்லோர் இருக்கினும் யசுவினும் சந்தை சொல்லப் புகுந் தனர்; வேறு சிலர் சாமகீதம்பாடினர்; நுதலவிழி நாட்

* திருவாசகம்

டத்திறைவ னெம்பெருமான் சோமசுந்தரக் கடவுள் கோயிலினும், அறத்துறை படிந்து மறத்துறை விளங்கிப் புறத்துறை மேம்பட்டோங்கிய மன்னவன் கோயிலினும், கோட்டையின் நாற்புறவாயிலினும் வால்வெண் சங்கொடு வகைபெற்றோங்கிய காலைமுரசங் கனைகுரலியம்பிற்று; நந்தன வனத்துறு நாண்மலர்கள் பொதியவிழ்ந்து நறுமணம் வீசின; பொய்கையம் பூவையும் வண்டர் பாண்செய்து பள்ளியெழுச்சி பாடத் தாமரைக் கண் விழித்தனள்; கூயின பூங்குயில்; கூயின கோழி; பாடுநர் பாடினர்; ஆடுநர் ஆடினர்; களிறுகள் பிளிறின; புரவிகள் கனைத்தன; வீரர்கள் படைக்கலம் பயின்றனர்; வைதிக வேதியர் மந்திரம் புகன்று வையையாற்றில் நீராடப் புக்கனர். அந்நாளந்திக் காலத்து அரசன் தேவலான் எழில்சான்ற மங்கல மடந்தையர் சிலர் வாய்மையாளர்தம் மாடத்தினுட்புக்கு உம்பர்ப்போந்து மதிவாணன்றன் பள்ளியறைக்கு வெளியே நின்று இன்னிசை பாடி வாழ்த்தொலி காட்டித் துயிலெடுப்பா நிற்ப, நந்தம் செல்வக்குரிசில் மதிவாணன் விரைந்தெழுந்து "இஃதென்னை கொல்?" என்று வெளியே சென்று பார்த்து அன்னர் அரசனனுப்பிய பாடன்மகளிரென்றோர்ந்து கீழிழிந்து காலம் நீட்டித்தலின்றிக்காலைக்கடன் கழித்துவிட்டு அவை குழுமிடத்தினை யணுகலும், வாய்மையாளர் மதிவாணனைக்கூய், "நந்தம் வழுதியர் கோமான் மாவீரவள்ளல் நின்றன் வரவினைப் பேராவலொடு மெதிர்பாரா நிற்றலின், நீ யுடனே புறப்பட்டு அரண்மனை சேரல் வேண்டும். யான் முன்னர்ச் செல்லுகின்றேன். இப்போது இரவியுதித்து அரைக்கன்ன

லாகின்றது. இன்னுங் கால் நாழிகைக்குள் ஆண்டுன்னை யெதிர்ப்பார்ப்பல்; அதற்குள் அவ்வயிற்போதுதி" என்றுரைத்தேகினர். அக்கணமே மதிவாணனும் வாசங்கொளுவிய நல்லாடை யுடுத்துப் பாசொளிக் கதிர்த்திரள் வீசுறக் கவினிய கஞ்சுகந்தரித்துக் கவயமணிந்து சென்னியிற் சேகங்கொண்டு இருமருங்கரும் நாந்தகமுறைசெறிந் தொளிர, அந்தணர் ஆசிகூற, மடந்தையர் பாட, இன்னியமியம்ப, வெளிப்போந்து, தனக்கெனப் புனைந்து நின்ற பலகாரப்பட்டவர்த்தனக் களிற்றின்மேலேறினன். உடனே பேரிகை முழங்கின; காளமும் பூரியு மொலித்தன; சங்கமேங்கின; இன்னிசை வீணையும் யாழுமிசைத்தன வொருபால்; மாதவர் இருக்கொடுதோத்திரமியம்பின ரொருபால்; துன்னிய பிணைமலர்க்கையினர் தூதைந்தன ரொருபால்; சில்லோர் சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால். இது நிற்க, மதிவாணற்கு முன்னர் ஆடன் மகளிர் அருநடம் புரிந்து சென்றனர். இனி மதிவாணனைக் கண்ட மடவாரனைவரும் "அநங்கனே யங்கம்பெற்று இவணடைந்தனன் கொல்லோ? பரங்கிரிக் குமரவேளே பரிவுகூர்ந்து இவ்வுருக்கொண்டு இம்ப ரெய்தினன் கொல்லோ? அன்றித் திருந்தெழிலயக்கன் கொல்லோ? விஞ்சையர் வேந்தன் கொல்லோ?" என்று ஐயுற்றனர். ஆயிரங்கிரணத் தலர்கதிர் ஞாயிறு மாயிரு ஞாலத்து மன்னுயிர் களிப்ப உதயத்துச்சி யுற்றுங்குக் கலைமதிவாணன் களிற்றின்மே லாரோகணித்தலும் தோரண வாயிலினும் அரமியத்தலத்தினும் மேன்மாடச் சாளரத்தினும் வண்டொடு கெண்டைகளுகளத் தாமரை மலர்

கள் தலையவிழ்ந் தலர்ந்தன. உடனே அக்களிற்றரசும் கடுகெனக் கறையடி பெயர்த்தது; வீரர்கள் வாள் விதிர்த் தேகினர்.

சிறிது நேரத்தினுளெல்லாம் அவ்வரசுவா பையப் பைய நடந்து வடக்கு மாசிவீதி கழிந்து கீழை மாசி வீதியை நோக்கித் திரும்பிற்று. அன்னணந்திரும்பிய களிறு அக்கணமே திடீரென்று யாவரு மெதிர்பாராத வண்ணமாய் ஓவென்று வாய்விட்டுப் பிளிறிற்று. உடனே வீதியின் மாந்தரெல்லாம் விலகியோடினர்; ஊடிய மகளிர்கள் உயிர்த்துணை தழீஇயினர்; நாட்டியக்காரர்கள் நாற்றிசையும் நண்ணினர்; சிலர் இவ்வழியினோடல் வேண்டுமென்று குறிக்கொளாது அம்மதக் களிற் றெதிரேயே யோடினர்; ஒருவர் மேலொருவர் வீழ்ந்தனர் சிலர்; வாயிற் படிக்கல்லி லெற்றுண்டு வீழ்ந்தனர் சிலர்; அம்மவோ! காலொடிந்தோ மெனக் கதறினர் சிலர்; அந்தோ! கையற்றேமெனக் கரைந்தனர் சிலர்; தலை தகர்ந்தேமெனத் தளர்ந்தனர் சிலர்; இவ்வாறாக அவ்வீதி முழுதுங் கலங்கி நடுங்கலுறெய்திற்று. இதன்காரண மென்னை கொலோவென் றாய்வுழி அவ்விடத்திற் கப்பணஞ் சில கண்டனர். அவை காலிற் றைத்தே யிக்களிறு பிளிறியிருத்தல் வேண்டுமென் றாய்த்துணர்ந்த பாகர்கள் அதன் முன்வலத்தாளைத் தூக்கிப் பார்த்தலும் அதனது மிகவும் மெல்லிய வுள்ளங்காலில் ஒன்பான் கப்பணங்கள் ஒருங்கே யேறியிருந்தன. உடனே யதுகண்ட யானைப்பாகர் தலைவன் அக்கப்பணங்களைத் தன்பல்லினிற்பற்றி வலித்து ஒவ்வொன்றாயிழுத்துப் புறத்தே யெறிந்துவிட்டு அப்போத

கத்தின் புண்ணுற்ற மெல்லடிக்குப் பொலம் பூந்துகில் மெல்லெனச் சுற்றிய பின்னர் யாவரு மறுக்கமொழிந்து மிகக் கவலையோடும் அரண்மனை வாயில் வந்துற்றனர். உடனே நந்தம் மதிவாண வள்ளலும் அம்மழ விளங் களிற்றினின்றும் இறங்கி, எழுகடலு மெழுமுகிலும் ஒருங்குசேர்ந் தொத்தெனத் தோலிய முழங்கா நிற்ப வும்; பறவைகளனைத்தும் ஒரே காலத்திற் பாண் செய் தென்னத் தொனிவிய மொலியா நிற்பவும், விஞ்சைமங் கையர் மிடற்றொலி யெனன நரப்பிய மிசையா நிற்ப வும், நறுமலர் மாலைகளில் வண்டர் பொம்மென விம்ப வும், யாவரும் பல்லாண்டு கூறி யருகில் வணக்கமொடு நிற்பவும், தனது வீரக்கழல் வீக்கிய வலத்தாளை முன் வைத்து அரண்மனைக்குட் புக்கனன்.

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று

---

## நான்காம் அத்தியாயம்

---

### காதலார் காட்சி

இத்துணைச்சிறப்புடனும் மதிவாணன் அரண்மனை யினுள்ளே புகுதப்பெறும் போழ்தின் வாயிலின் மேனி லையினின்று மடவார் பலர் மலர் சொரிந்தனர்; பனிநீர் பொழிந்தனர்; காளமொலித்தன; சங்கமேங்கின; முரச மதிர்ந்தன; வந்தியர் வாழ்த்தினர்; மாகதர் ஏத்தினர்; வெடிகள் வெடித்தன; வீரர்கள் தம்வாட்களை வள்ளுறை கழித்துக் கையகத்தேந்தி முறைப்பட நின்றனர்.

உடனே புகுந்த மதிவாணனை மன்னவற்சார்ந்த பரிசனங்களனைவரும் ஆண்டு வெளியிடையிற் படிகத் தூண் நாட்டிப் பொற்றகடு மேலே வேயப்பெற்றுக் கீழே வெள்ளித் தலம்படுத்து நவமணி மாலைகளும்நாலப் பெற்று நாற்புறமும் பளிக்குச் சுவரா னியன்றதோர் நடை மண்டபத்துக் கொண்டுய்த்தனர். அம்மண்டபத் தினுட் பெரிதுஞ் சிறிதுமாய இரு பொன்னிருக்கைக ளிருந்தன. அவை தம்முட் பேரிருக்கையின் மதிவா ணனை யிருத்தலும் இன்னியமெல்லா மொலித்தல்தவிர்ந் தன; சிறிதுநேரத்தினுள் இன்னிசைபாடிக் கொடுபோந் தார் ஏரிளமடந்தையர் இருபதின்மர், அவர்க்கும் பின் னர் நால்வர் வயோதிக மாதரார் நீராசனமெடுத்துப் போந்தனர்; அவர்க்குப் பின்னர் எண்மர் மங்கையர் அட்ட மங்கலங் கைகளிற்கொண்டு மெய்துவண்டண் மினர். அம்முப்பா னிருவரும்மேற்கூறிய நடை மண்ட பத்தை மும்முறை வலம் வந்து மதிவாணனை நோக்கி நின்று சிறிது பாடிய பின்னர் மங்கல சேடையிட்டு நீரா சனஞ் சுழற்றி நின்றனர். நின்றவக்கணமே கீழைத் திசை நோக்கி நின்ற அந்நடை மண்டபம் மேலைத்திசை நோக்கித் திரும்பிச் செல்லத் தலைப்பட்டது.

இதுகாறும் அதனைக் கண்டறியப்பெறாத பலரும் அது யானை பரியாதிய வேற்றுப்பொருள்களி னுதவியின் றித் தானே யியங்குதல் கண்ணுற்றுப் பெருவியப் பெய் தினர்; சிலர் அசைவற்று நின்ற நிலையிலேயே யோகிய ரென நின்றனர்; சிலர் பிளந்தவாயினராய்ப் பேசாது நின்றனர்; சிலர் தளர்ந்த வுடையினராய்த் தாழ்த்து நின் றனர். இனி யிது நிற்க.

சென்ற நடை மண்டபமோ அரண்மனையின் அந்தப் புரவாயிலிற்போய் நின்றது. நிற்றலும் மதிவாணன் அதனை விட்டிழிந்து இளம்பிடிகளுப்பனொருமதக்களி றென்ன ஆண்டுப்போந்த மாதராரொடும் அந்தப்புரத்தி னுட்புக்கனன். அவ்வயின் மாவீரவழுதி பொலம்பூ ணுடைதரித்து மெய்ப்பைபுக்குக் கால்களின் வீரக்கழல் களும் கைகளின் மணிக்கடகங்களும், புயங்களின் வீர வலயங்களும், கழுத்தினிற் பொன்னி னிற்றிணித்த வுருத்திராக்க மாலையொடு நவமணி மாலைகளும், தலையி னின் மணிமகுடமுமணிந்து நீறுபூத்த நெற்றியனாய் ஆங்கிருந்த துணைபுணரன்னத் தூவியணை மிசை புன் னகைசெய்து சாய்ந்துகொண்டிருந்தனன். இருபுறமும் இவ்விருமகளி ரிருந்து வெண்சாமரை யெடுத்து வீசுபு நின்றனர்.

மன்னவன் இவ்வாறிருந்த நிலையினைச்சற்றே யுற்று நோக்கின் நந்தம் மதிவாண வள்ளலது வருகையினை யெதிர்பாரா நிற்கின்ருனென்பது தெற்றெனப் புலனும். இப்போழ்தத்திலேயேமதிவாணனும்அம்மடவாரோடும் உட்புகுந்தான். இன்னணம் புகுதல் கண்ட வழுதியர் பிரான் ஓய்யென வெழீஇ விரைந்து மதிவாணனை யணுகி "வருக! வருக!!" எனக்கூஉய், அவனைத் தன் கையினிற் பற்றிக்கொண்டு சென்று தான் வீற்றிருந்த மெல்லணைக்கருகிருந்த மணிப்பீடத்தின் கண் இரீஇயி னன். இருந்த மதிவாணன் மீட்டுமெழுந்து பாண்டி யர் கோனைப் பணிந்து கூறுவான் "கன்னித் தமிழ் தழைப்பக் கன்னிநன்னு டாளுகிற்கு மன்னர்பிராஅன் வாழிய! மாவீர வள்ளால் வாழிய! அருளறம் பூண்ட

அரசே வாழிய! வையை யென்ற பொய்யாக்குலக் கொடிக் கிறையே வாழிய! எந்தக் குலமுழுதாண்ட கோமாஅன் வாழிய! நின்றனடித்தொண்டே நாளும் புரிதரல் தொழிலாக்கொண்ட அடியனேற்கு இடக் கடவதாம் ஆணையென்கொலோ? திருவுளம் புரிதல் வேண்டும்'' என்று மிருந்த வணக்கத்துடன் நிற்றல் கண்ட தனித் தமிழ்நாடன் "இருத்தி!'' என மகிழ் வுடன் பணித்தனன். வேந்தன் பணித்தாங்கு மதி வாணனு மிருந்தனன்.

உடனே கன்னிநாடனும் பொன்னிநாடனைநோக்கி "மதிவாண! முன்னரே நுந்தையார் தஞ்சைவாணரும் அமைச்சர் வாய்மையாளரும் நீ யெம்மாலீண்டை வரு மாறுஅழைக்கப்பட்டதன்காரணம்இன்னதென்றுரைத் திருப்பார். அன்றியு மிப்போழ்தத்து ஈண்டன் நிகழ்வுறு மவற்றினுனும் அஃதின்னதென்றுணர்ந்திருப்பையெனி னும் அதனைக் குறித்து நேரேயாமுஞ் சிறிது பேசுதல் கருதி நின்னை யழைத்தனம். அஃதென்னை கொலோ வெனில் எந்தம் அருந்தவச் செல்வமகள் இன்பவல் லியை நிற்குக் களவிசான்றாய் மணவினைசெய்து கொடுப் பான் வேணவாவுடையே மாயினேம். இதன்கணெந்தம் அரசிக்கும் பெருவிருப்பே யுளதாமென்பதற்கு எட்டு ணையும் ஐயப்பாடில்லை. மக்கண் மனமறிந்தே வதுவை முடித்தல் வேண்டுமென்பது எந்தங் கொள்கையாதலின் நின் மனக்கோளுணர்வான் விழைகின்றேம்'' என்று மாறர்பெருமான் கூறுமுன்னரே மதிவாணன் "ஓ! மன்னர் மன்ன! நின்றன் ஆணையொடு முரணவுங்கிற் பலோ? யான் நின்றன் மருகனாதற்கு யானும் எனது

முந்தையோரு மென்னதவஞ் செய்தனமோ? இதுநிற்க, நின் வேண்டுகோட்கிணங்கியே நிற்கின்றேன். ஆயினும் 'எந்தையாரநுமதியின்றியா னென்னணமிதன்கட்டலைப் படுவது?' என்ற ஆசங்கை யொன்றேயென் னுளம் நின்று உருப்பது" எனலும் பெருமுத்தரையன் "நுந்தையார் தஞ்சைவாணரும் இற்றை ஞான்றுமாலை இவ்விடம் போதுவார். அவர் தமக்கு இது முற்று முடன்பாடே யென்று விடுத்துளர்" என்றான். என்னக்கேட்ட மதி வாணன் "அற்றேல் யானுமென் மனமார வுடன்படுகின் றேன்" என்று கூறினன்.

இவ்விருவரும் இங்ஙனம்உரையாடிக்கொண்டிருப் புழி, அந்தப் புரத்திலுள்ள அரசன்றன் உரிமை மக ளிரெல்லாம் சாளரவழியாய் மதிவாணனைக் கண்ணுற் றனர். அவர்தமுள் ஒருத்தி "நமது சொக்கனார் காய்ந் தெரித்த மகானே மீட்டுந் தவம்புரிந்து முன்னையிற் காட்டின் மிக நல்லுருக்கொண்டு வந்தனன்போலும்!" என்றாள். மற்றொருத்தி "மோகினி யுருக்கொடு தாரு கவனத்து இருடியரையுஞ் சுராசுரரையு மயக்கியமாலே யின்று இவ்வயின் ஆண்மோகன வுருக்கொடு மங்கை யரை மயக்குவான் வந்தனனேயோ?" என்றாள். இன் னொருத்தி "அற்றன்று; நந்தஞ் சொக்கலிங்கப் பெரு மானே நமது மன்னற்கு ஆண்மகவின்மை பற்றி மருக னாகப் போந்தனன்கொல்லோ?" என்றாள். வேறொருத்தி "அஃதுமன்று. திருப்பரங்குன்றத்தினிதமர் செவ்வேள் தேவசேனை யாரையும் வள்ளியம்மையையும் மணந்து கொண்டதுடனமையாது நம் இன்பவல்லியையுங் கைப் பிடித்துக்கோடற்பொருட்டே மதிவாணனாகப்போந்தன னம்மா!" என்றாள்.

மதிவாணன்றன் காட்சி அரசனதுரிமை மகளிர்தம் மனத்தின்கண் இத்தகைய வெண்ணங்களை விளையா நிற்ப, நந்தந்தலைவி இன்பவல்லியின் பாங்கிமார் மனத்தின்கண் இன்னதன்மைய வெண்ணங்களை விளைத்தன வென்றதையு மொருவாறு தெரிப்பான் புகுகின்றாம். "ஓ! நந்தம் இன்பவல்லியே யெவ்விதத்தினும் பாக்கியவதி! அவள் செய்த தவமே தவம்!" என்றா ளொருவனிதை. "இம்மதிவாணனையும் நம்மின்பவல்லியையுந் தவிர்த்து இவ்வாறு எல்லா விதத்தினும் பொருந்திய வேறுதலைவன்றலைவியர் இவ்வுலகின்கணுளரோ?" என்றா ளொருமாது. "இம்மதிவாணனையு மின்பவல்லியையும் யானெந்நாளும் பிரியாது அவர்தமோடுடனிருந்து அவர்க்குக் குற்றேவல் செய்து வாழப்பெறுவனேல் அதுவே யானிம்மையிற் பெறத்தக்க பெறும்பேறு" என்றா ளொரு பாங்கி. "ஐயோ! யான் இன்பவல்லியாகப் பிறந்திருக்க லாகாதோ? பிறந்திருப்பேனேல் ஈதோ காணப்படும் இன்பக்குரிசிலை யடையாதிருப்பேனோ?" என்று விம்மினா ளொருமடந்தை. "இவ்வானந்த வள்ளல் என்மீது கருணைகூர்ந்து தனபடங்களுளொன்றெனக் களிப்பனேல் அதுகொண்டு யானுயிர் வாழ்வல்" என்றா ளோரரிவை. "ஓ! மதிவாண மன்மதனே! என்னையேனோ இவ்வாறு துன்புறுத்துகின்றாய்? ஒரு முறையேனு மென்னை நோக்கித் திரும்பிப் புன்முறுவல் புரியாயோ?" என்றா ளொருபெதும்பை. "அம்மம்ம! என்செய்கோ? இவனைக்கண்டவுடன் எனக் கென்னையோ செய்கிறதே! இன்னதென்றறிகிலெனே!" என்று மயங்குவா ளொருபேதை. "ஓ!

காட்சிக்கினிய கவினுடைய கந்தருவனே யிம்மதிவாணன் ! இசை நலஞ்சான்ற இன்பவல்லியும் இவற்கேயாயினும்—'' என்று எடுத்த வாக்கியத்தை முடிக்கலாற்ருது பெருமூச்செறிந்தா ளொருதெரிவை. "பிறர் மனங் கவருமாற்றல் இவன் எம் முனிவர்பாற் கற்றுப் பயின்ருன் ? அம் முனிவர் தம்மை யானறிவேனேற் சிறிதுபோதுந் தாமதியாது அவர்மாட்டுச் சென்று அதனைக் கற்றுணர்ந்துவந்து இம்மதிவாணனை யான்கவர்ந்து கொள்ளேனே ?'' என்றேங்கினு ளொருநங்கை.

இவ்வாறு இன்பவல்லியின் தோழியருட் பல்லோர் கூறிமயங்கா நிற்ப எஞ்சிய சில்லோர்,

"தூவிரி தாமரை தொலைத்த கண்ணினன்'' எனவும்,
"தீவிரி யாம்பலிற் சிவந்த வாயினன்'' எனவும், (9)
"மந்தர மலையினை மானு மார்பினன்' எனவும்,
'விந்தையுங் களித்துற வீங்கு தோளினன்' எனவும்,
'சுந்தர வடிவுடைச் சோதி மேனியன்' எனவும்,
'இந்துவும் வெருத்தன னிவனைக் கண்டன்ரே?' (10)

எனவுங்கூறி மகிழா நின்றனர்.

இதற்கிடையில் இன்பவல்லியின் உயிர்ப்பாங்கி மதிவாணனைக் கண்டவக்கணமே கடுகிச்சென்று நந்தந்தலைவியின் கன்னிமாடத்தினுட் புகூஉச் சாளரவாயிலை மெல்லனத்திறந்து மதிவாணனிருக்கும் நிலையினை யெமதின்பவல்லிக்குக் காட்டிநின்ருள். அவ்வமயத்து யாழ் கைக்கொண்டு கல்லும் புல்லுங் கரைந்துருகுமாறு இசை வாரியிற் படிந்து ஆடிக்கொண்டிருந்த இன்பவல்லி யுடனே யெழுந்து தன்னுயிர்ப்பாங்கி நிற்கு மிடன் சென்று பார்த்து நின்ருள். கருதலளவைக்கு மேற்

பட்டு நலங்கனிந்து நின்றாளை அண்ணலு நோக்கின னவளு நோக்கினள்.

பெண்களி விழிக்கயல் பிரான்றன் றாமரைக்
கண்களிற் பாய்ந்தன காமர் வண்டென
வுண்களி நறவுவேட் டொளிர னன்விழி
பண்கொள்வாய்க் குமுதத்துப் பாந்து வீழ்ந்தவே. (11)

இருவரு மொருவரை யொருவர் மீட்டும் மீட்டும் பார்த்தனர். அங்ஙனம் பார்த்தும் அமையாது,

விம்மினர் வியர்த்தனர் வெய்து யிர்த்தனர்;
அம்மவோ! அன்னர்தாம் படும வத்தைக
ளெம்மனோ ராளெடுத் தியம்பற் பாலவோ? (12)

ஒளிர்கின்ற வீருடற்கு மோருயிரே யாயினாரென் றக்கால்யாம் அதற்குமேலேதேனுமெடுத்துப்பேசுதலறி வின்மையின்பாற் படுமேயன்றி வேறன்று.

அதன்மேல் வழுதியும் அவன்றன்மருகனுவானுங் காலந்தாழ்த்தலின்றிச் சிற்றுண்டி கொள்வானெழுந்த னர். எழுந்து செல்வுழி யடிக்கடி யெங்குரிசில் மதிவா ணன் திருமித் திருமித் தையர் தலைமணி யின்பவல்லி யிருக்குஞ் சாளரவாயிலை யுற்று நோக்கினன். அப்பைந் தொடியும் ஓவியப்பாவைபோ லசைவற்று நின்றனள். இவ்விருவர்தஞ் செய்திகளையும் பிறரறியாவகை யுய்த் துணர்ந்துகொண்ட மதிகுலமருமான் மாவீரவழுதி தனக்குள்ளே யிளநகை யரும்பினன். சிறிதுபோழ்தி னுண் மைந்து சாலிளங் களிற்றினை நிகர் மதிவாணனும் மறையப் போயினன்; மாதரா ளின்பவல்லியும் மின் னென மறைந்தாள்.

மறைந்த மடந்தையும் பைப்பைய நடந்து சென்று தன்னை மறந்து நாத்தடுமாறி "ஐய! என்னுயிரன்ப!" வென மெல்லென மொழிந்து அவ்வாயினிருந்ததோர் மலரணையின்மீது வீழ்ந்தனள், புரண்டனள், விம்மினள், விழைவினுற் பல நினைந்தனள், பிறர் செவியிற் பட்டும் படாதுமாய்ப் பல பேசினள். இவை யனைத்துங் கண்டுங் கேட்டும் நின்ற தோழியர் விரைந்து போந்து அருகர் நின்று என்னென வினவினர். இன்பவல்லி அவ்வண்ணம் வினவினர்க்குத் தானென்று மெதிர் மொழி யியம்பிலள்.

'கோள்விடத் தேளினுற் கொட்டப் பெற்றவோர்
கள்வனின் மனந்தவக் கசிந்து விம்முவா
னுள்வழி யுற்றநோ யுரைக்கி லாமையாற்
றெள்வரிப் பாட்டிசை செய்தும் யாமெலாம்.' (13)

என்றன ரெழுந்தன ரிசைசெய் வான்புகூஉத்
துன்றிய கருவிகைத் தொட்டுப் பாண்செயக்
கன்றின ளவரைக்கூய்க் கரங்கு வித்து 'நீ
ரென்றனைத் தனியின்விட் டிருத்திரோ' வென்றாள். (14)

என்னக் கேட்ட இசைவல்ல பாங்கியரெல்லாம் தாங்கொணர்ந்த யாழ் முதலிய இசைக்கருவிகளை வாசித்தல் தவிர்ந்தனர். இவ்வாறாக வேறு பாங்கிமார் சிலர் இன்பவல்லி யிருக்கு நிலையை யுணரகில்லாது தாம் நாடொறும் பயிலுறூஉம் வழக்கம் போல அற்றை ஞான்றினும் ஓடிவந்து,

'காவிற் புகுந்தே கடிநீரி னாடிப்
பூவும் பறிப்போம் பொழுதில்லை காணும்
மாவிக் குகந்தா யடியேமொ டின்னே
மேவின்ப வல்லீ! விளையாட வாராய்' (15)

என்று விளித்து நின்றனர். அதற்கொன்றும் இன்ப வல்லி விடைகொடாமை கண்டு 'இஃதென்னே!' யென் றெண்ணி யுழையுள ஏனைத் தோழிமாரை வினவினர். அவர்களும் இவர்களைப் போலவே உண்மையறியாத பெதும்பைப் பருவத்து மடவாராயினர்.

இவ்வாறு இவையாவற்றினையுந் தம்மெதிரேநிகழக் கண்ட சிலதிப் பெண்டிரிற் சில்லோர் பெருந்தேவிபாற் சென்று கோமகடன்மையை வருத்துக் கூறினர். அது கேட்ட தேவி செவிலித்தாயரோடும் ஏனைய அந்தப்புர மகளிரொடும் கடுகிச்சென்று இன்பவல்லியின் கன்னி மாடம் புகுந்து தன்னருஞ் செல்வப் புதல்வியைக் கண்டு அவளைத் தனவிரு கரத்தினும் வாரியெடுத்து அணைத்து உச்சிமோந்து புல்லி முத்தமிட்டுத் தன்மீது சார்த்திக்கொண்டு அவளைத் தனது அங்கையான் மெல் லெனத் தைவந்தனள்; சந்தனச் சிவிறிகொண்டு இன் பவல்லி முகத்தினில் இளங்கான் மெல்லெனத் தவழு மாறு வீசினள்; செவிலி சாந்த மணிந்தனள்; ஒருத்தி பனிநீர் தெளித்தனள்; ஒருத்தி சாளரவாயில்களைத் திறந்து வைத்தனள்; ஒருத்தி அது கூடாதென் றடைத் துவிட்டனள்; ஒருத்தி யிவையனைத்துங் கண்ணேச்சி லென்றெண்ணித் திட்டி கழித்தனள்; ஒருத்தி சொக்க லிங்கப் பெருமானை வேண்டித் திருநீற்றுக் காப்பிட் டனள். இவ்வாறு மகளிர் பலரும் பல்வகைச் சீத ளோபசாரமுஞ் செய்யா நிற்பச் சிறிது மயக்கந்தெளிந்து எந்தம் இன்பவல்லி மலரணைமீது மெல்லெனச்சாய்ந்து கொண்டனள். சுற்றியிருந்த மடவாரனை வரும் அவள் முகத்தையே பார்த்து நின்றனர். அது கண்ட இன்ப

வல்லி யேதோ மொழிவான் முயன்றும் அது முடியா தாயிற்று ; உடனே யவளிரு விழிகளும் வெண்முத் துதிர்த்தன. இஃதுணர்ந்த பெருந்தேவி மனமுடைந்து,

'பெண்ணே! அழேஎல்! பிணையே! அழேஎல்!!
கண்ணே ! அழேஎல் ! கனியே! அழேஎல்!!
எண்ணே ! அழேஎல் ! இறைவீ! அழேஎல்!!
பண்ணே ! அழேஎல் ! பாவாய் ! அழேஎல்!!' (16)

என்று வாய் விடுத்தரற்றினள். இன்னண மரற்றக் கேட்ட கோமகளது அதரந் துடித்தது; ஆகம் நடுங் கிற்று. இதுகண்டு சிலர் திகைத்து நின்றனர். அவ்வ ளவில் இன்பவல்லியுஞ் சிறிது தலைநிமிர்ந்து தாயினை நோக்கி "என்னே! அம்மா!" என்றனள். எனலும் பெருந்தேவி "ஒன்றுமின்று" என மெல்லென மொழிந் தனள். அருகினிருந்த மாதராரெல்லாம் சிறிது துக்கந் தவிர்ந்து உபசாந்தஞ் செய்யத் தலைப்பட்டனர். அப் போழதத்து இன்பவல்லி கையமைத்துக் கூறுவாள் " அம்மா! என்னிடத் தொருவகைவேற்றுமை நிகழா நின்றது.

அறிவொடுங்கி நின்றதுவா லருஞ்செல்வ மடைந்தவெலாம்
பறிகொடுத்தார் போலமனம் பதறுமா லம்மாவோ!
பறிகொடுத்தார் போலமனம் பதறுமே யானாலும்
வெறிகொளும் வண்டெனமீட்டுமிக்கமகிழ்மேவுறுமால்"(17)

என்னக்கேட்டு நின்ற உயிர்ப்பாங்கி இன்பவல்லியைப் பார்த்துப் புன்முறுவல் கோட்டிப் பின்வருமாறு பாடி னாள் :

'யாணர் மேனிய வின்பவல் லித்தையால்!
வேண வாவினின் மேவிய நன்மதி
வாண வீரனும் வந்தன னென்றுகல்
யாண மின்னே யினிதி னடக்குமால்' (18)

இதுகேட்ட நங்கையர் சிரோமணியும் இளநகையரும் பின்னுள் ; அண்மையி னிருந்தவனைவரும் ஆனந்தமுற்ற னர். இனி இது நிற்க.

சிற்றுண்டி கொள்வான் சென்ற வேந்தனும் வீரனும் அரண்மனையி னெருசார்ச்சென்று நின்றனர். நிற்றலும் மங்கையரிருவர் பொற்கலங்களிற் றண்ணீ ரேந்துபு நீட் டினர். அவற்றி னீரினால் அவர்களிருவருங்கால்கழீ இக் கொண்டு உட்புக்கனர். புக்கவளவில் மதிவாணன் சிறிது பிரமித்து நின்றனன். அவ்வயின் எதிரே யொரு சிறு வாழைச்சோலை காணப்பட்டது. வாழைகளினிடை யிடையே மணங்கமழ் மலர்ச்செடிகள் நின்றன. இவை யிற்றினடுவண் ஓரழகிய யந்திரவாவி யிருந்தது. அவ்வா வியினின்றுந் தண்ணீர் மேலே யெழும்பிப் பஃறுளி யாகிச் சிதறிக்கொண்டிருந்தது. இத்தகை சிறு சோலை யூடே யிளதென்றல் இனிமையாய் வீசிற்று. இவ்வாறு வீசுறாஉங் காற்றி னூற்றின்ப நுகர்ந்த மதிவாணன் உடல் புளகித்து உரோமஞ் சிலிர்த்தனன். அதன்பினர் அவ்வாவியி னணித்தா வொரு மண்டப மிருந்தது.அம் மண்டபத்தினுட் சென்று அரசனும் அண்ணலும் ஆவ யினிருந்த ஆதனங்களின் வீற்றிருந்தனர். அக்கணமே பல்சுவை யுண்டியும் படைக்கப்பட்டன. உடனே யவ் விருவருங் காலந் தாழ்த்தலின்றி யுணவுகொள்ளுவான் புக்கனர். புக்குழி நிகழ்ந்த சம்பாஷணையில் இன்பவல் லியையே பற்றி யெண்ணிக் கொண்டிருந்த மதிவாணன் அரசன்றன் வினாக்களுக்கு விடை சொல்லத் தாழ்த்தும் மீட்டும் வினவியும், ஒன்றுகிடக்க வொன்று சொல்லி யும் மயங்கினன். உதுகண்ட மன்னவன் புன்னகை

புரிந்து சிறிதுநேரம் வாளாதிருந்தனன். இவ்வாறு மதிவாணன் மயங்குதற் கெய்திய காரணம் இன்னதென்று மிகவெளிதி னுய்த்துணர்ந்து கொண்டனன்; கோடலும் நகைத்தனன். நகைத்த வப்போதுதான் மதிவாணன் தன் மாமனுவானை நோக்கித் "தாங்கள் நகையரும்புத லென்கருதியோ?" எனவினுயினுன். வினவலும் வேந்தன் "ஐய மதிவாண! நீ யெந்தம் மகள் இன்பவல்லியைப் பார்த்தல் வேண்டாவோ? நீவி ரிவருவருமன்றே நெடுநாள் ஒருமித்து வாழுநர்? அற்றுக நுந்தையும் யானுமாநும்மிருவர்க்கும் மணவினை செய்து முடித்த பின்னர் ஏதேனும் விருப்ப வேறுபாடு நிகழின் அது பலவகைத் துன்பங்கட்கு மிடனுகு மன்றே?" எனலும் மதிவாணன் ஒன்றுஞ் சொல்லாது மோனவிரத மேற்கொண்டனன். உடனே யரசனு மெழுந்து மதிவாணனைக் கையிற் பற்றிக்கொண்டு அச்சோலையினின்று மேகிவேறோரறைக்கணிறுதலும் அவர்க ளெதிரே பெரிய படமொன்று, மந்தநகை செய்வதுபோலத் தீட்டபெற்றது, நின்றது. அதுகண்ட மதிவாணன் "யான் கன்னிமாடத் தும்பர்க்கண்ட காரிகையே யிவள், அதற் கையப்பாடென்னை?" என்று அவ்வோவியத்தருகே சேறலும் அதன்கீழ் 'இன்பவல்லி' யென்றெழுதி யிருப்பக்,

கண்டனன் களித்தனன் காத லித்தன
னண்டகு மிளநகை யினித ரும்பினன்
'விண்டபூங் குமுதமும் தவள்கும் வாயினு
லுண்டன னுவளென துளத்தை வேந்தனே!'

என்றனன். என்னக்கேட்ட வழுதியும் அவனை யவ்விடமே விடுத்துவிட்டுத் தான் கன்னிமாடஞ் சென்ற

னன். சென்றதை மதிவாண னறிந்திலன். இனித் தனித்துநின்ற மதிவாணன் இறைவனைப்பற்றியவெண்ண மிலனாய்ப் பின் வருமாறு தனக்குள்ளே பேசாநின்றான். "எல்லாநலனு மினிமையிற் கலந்துருவாகிய பெண்ணே! உன்னையா னென்னுயிர்த் தலைவியாக்கொள்ளப் போகின் றேன் என்ப தொன்றே யன்றோ என்னை யிப்போழ்தின் மகிழ்வியா நிற்பது? எனினு முன்னை நேரிற்கண்டு நினது இன்சொலமுதம் பருகுவான் விழைகின்றேன். உன்னை யான் கைப்பிடித்துக் கொண்டு உன்றன் கருங்கூந்தலில் வெள்வீ மிலையப்பெறும் பேறு இன்னும் எத்துணை ஞான்று நீட்டித்து எய்துமோ? ஓ திலகவாணுதற் கோ தாய்! நீ யென்றன் ஏற்புற வணியுந் திறத்தினைக் கடி தினிற் காண்பை. ஓ செவ்விதழ் வெண்பற் சிறுநகைப் பாவாய்! நீ யிளநகை புரியாநிற்பது என்னை நோக்கியே போலும்!! ஓ! இனி யொருகணமேனுந் தாமதியேன். கன்னியெனினுங் காதலியாதலின் உன்னைத் தொட்டு ஒருமுத்த மிடுகின்றேன் காண்" என்று கூறி அவ்வோவி யத்திற் கோர் முத்தமிட்டுத் திரும்பலும் இறைவனைக் கண்டான் கலங்கினான்; உடனே மதிவாணன்றன் செந் தாமரையெனச் சிறந்த முகமும் வெண்டாமரையென வெட்கத்தினால் விளர்த்தது; நிமிர்ந்த தலையுந் தானே குனிந்தது; நிலமகள் தன்னை மதிவா ணன் இதுகாறுங் கண்ணினை கொண்டு பார்த்தில னென்று கொண்டிருந்த கோபமுந் தணிந்தனள். மன் னவன் மாவீரவழுதியும் "என்னே! மதிவாண! நீ யொருவகையாகக் காணப்படுகின்றனை! நின்செயலினைத் தையுங் கண்ட யாம் கழிபேருவகைபூத்துநிற்கும்போது

நீ வேறுபடக் காரணம் யாதுகொல்?'' என்று தன்மருகனுவானைத் தன புயங்களிற் றழீஇயினன். தழுவலுஞ் சிறிது இயற்கைப் பணிவினாலும் நாணத்தினாலுந் திருமிய வள்ளல் தன்னெதிரே நின்ற ஓவியத்தின் மெய்யுருவை மாடத்தும்பர்க் கண்டனன். அப்போழ்தில் தன்னருந்தேவி யின்பவல்லியுந் தன்னை யரசன் கண்ணுற்ற நிலையினிற் கண்ணுற்றிருப்பாளோ என்ற ஐயத்தோடு கூடிய அச்சம் வெட்கமாய்த்திரிந்து வெளிப்பட்டது. படலும் மதிவாணன் உடல் சிலிர்த்தனன். இதுகண்டு வழுதியும் மதிவாணனைப் பிடித்துக் கொண்டு மாடத்தும்பரேறினன். 'காதலனைக் கொண்டு வருந்தும் செம்மல் மதிவாணன் ஒருவேளையேறுங்காற் படிமிசை யிடறி வீழ்ந்திடி னென்செய்வது?' என்று கருதியே அவனைக் காவலன் கையிற் பிடித்துச் சென்றனன்போலும்!

கண்டவக் கணத்தினே காதல் கொண்டிடா
தெண்டகு மன்பின ரெவர்கொ லாபவோ? (20)

நான்காம் அத்தியாயம் முற்றிற்று

---

## ஐந்தாம் அத்தியாயம்

---

## புலவர் மருகன்

மேலை மாசி வீதியின்கண் வடபுறத்தில் வெண் சுதை நன்கு தீற்றிய வீடொன்றுளது. அதன் வெளிப்புறத்தே சிறிதும் பெரிதுமாய தெற்றிக ளிரண்டுள. அவற்றுட்பெரிய தெற்றியிலொருவன் செந்தமிழ்நூலுங் கையுமா வுலாவுதலை யுற்று நோக்கின் அஃதோர் தமிழ்ப்

புலவரது இல்லமாயிருக்கலா மென்றுன்னுதற் கிடனுண்டு. இனி யுட்புகின் ஒரு சிற்றிடைகழி யுளது. இவ் விடைகழியின் தென்பாங்க ரோரறை சிறிது செவ்வனே யலங்கரிப்பட்டிருந்தது. அவ்வறைக்குத் தவக்குறிய சாளரங்களிரண்டிருந்தன. அவை யிற்றினுள் ஒன்று மட்டுமே யென்றுந் திறந்திருக்கும். கீழ்மேன் மதில்களை யடுத்துப் பெரிய மரப்பெட்டிகள் ஏழெட்டிருந்தன. அப்பெட்டிகளின் மீது பனையோலைச் சுவடிகள் அவிழ்ந்தன சிலவும், கட்டியன சிலவும், மையுண்டன சிலவும், செல்லுண்டன சிலவும், சிதறுண்டன சிலவும், முறிந்தன சிலவும், தொளையுண்டன சிலவுமாயிருந்தன.

இத்தகைய அறையின் கண்ணே அற்றை ஞான்று காலை யொருவன் ஏதோ மிகக் கருத்துடன் தேடுவான்போலத் தேடிக்கொண்டிருந்தனன். இனி யவ்வறையினுட்புகாது மேற்சென்றக்கால் ஓரகன்ற கூடமுளதாகும். அக்கூடத்தின்கண் நீலக்கம்பலமொன்று விரித்திருந்தது. அக்கம்பலத்தில் நால்வ ராடவ ரிருந்தனர். அவர்களெதிரே யோரிருக்கை, பிரம்பினாலாயது இருந்தது. அதன்கண்ணே மெல்லணை யொன்றன்மேல் வயோதிகரொருவர் வீற்றிருந்தனர். அவர் நன்னர் வளர்ந்த யாக்கையர்; உற்பலம் போன்றினி தொளிரு மேனியர் ; குஞ்சியென்னுங் கோதறு தலையினர் ; நீறு பூத்த நெற்றியர் ; அண்ணலா ரக்கமாலை யளவில வணிந்த களத்தினர் ; அடிக்கடி 'திருச்சிற்றம்பலம்' என்னும் நாவினர். அத்துணைச் சிறப்புவாய்ந்த பெரியோர் தம் எதிரிருக்குநராய மாணவரை நோக்கி 'மைந்தர்காள் !

நந்தம் மறையவர்கோமான் மாறநாயனூர் சோமயாகஞ் செய்வான் விழைந்து பல்லாண்டுகளாக அதற்கு வேண்டிய பல்வகைத் துணைக்கருவிகளையுஞ் சேர்த்து வைத்துக்கொண்டு நந்தந் திருநாவலூர் வள்ளல் ஆளுடைய நம்பிக்குத் தங்கருத்தை வெளிப்படுத்துவானுன்னி அவர்த மிருப்பிடமாகிய பரவை நாச்சியாரது திருமாளிகைக்கட் புக்கனர். அந்நேரம் நாச்சியா ருகினிருந்து சுண்ணந்தீற்றிய வெள்ளிலைச்சுருள் பாகுடன் மடித்துக்கொடுப்ப, நம்பியார் வாயினிற் கௌவி மென்று மென்று தின்றுகொண்டிருந்தனர். அந்நிலையிற்கண்ட மாறர் அவ்விருவரையும் ஆசீர்வதித்துத் திருநாவலூரரை நோக்கி, "ஐய! நம்பி! நீ யெம்பெருமான் முக்கட் கடவுளது நல்லருண் மேவினை; அவரும் நின்பாற் பெருவிருப்புடையராய் நீ வேண்டின யாவும் வேண்டியாங் களியா நின்றனர். ஆதலின் நின்னிடம் யானொன்று வேண்டுவல். அதனை மாறாது எற்குதவுதல் வேண்டும். அஃதென்னோவெனில் யான் சோமவேள்வி செய்வான் விரும்பி யுரியவுபகரணங்களனைத்தையும் ஒருங்கு கூட்டி வைத்துளேன். அவ்வேள்வியினிடத்து நந்தந் தியாகராசப் பெருமானே நேரிற்போந்து அவியேற்றுக் கொள்ளுமாறு செய்தல் வேண்டும்" என்றனர். எனலு மெங்கள் சுந்தரக்குரிசில் சொல்வார்: "ஓ! தீக்கிதர்பெரும! நுந்தம் விருப்பம் மிகச் சிறப்புடைத்தே. ஆயினும் அண்ணலார் கருத்தறியாது யானொன்றுஞ் சொல்லுதற்பாலெனல்லேன். எனினும் நும்பொருட்டு என்னாலியன்றவளவு முயன்று பார்ப்பல்" என, மாறநாயனூர் விடைபெற்று வீட்டிற்

கேகினர். அதன்பின்னர் அஞ்ஞான்றைக் கங்குற் போழ்தினிற் கடவுளைக் கண்டு பரவைநாதர் மாறர்தங் கருத்தினைப் பெருமானிடங் கூறி 'அவர் மாட்டு நீவிர் கருணை புரிதல் வேண்டும்' என்றலும் தமிழ் வலைப்பட்டோன் சாற்றுவான் :

"தன்னியதய மெற்களியாத் தகையுடைய மாறனுக்கே
வென்னுருவங் காட்டியவ னின்னவியேற்றிடல்வேண்டும்?"

என, அம்பிகை பாகன்றனன்பர் 'நீவிர் என்பொருட்டேனுஞ் சென்று அவரிடம் அவியேற்றல் வேண்டும்' என்று மீட்டும் வேண்டலும், புற்றுதித்த பிஞ்ஞகன் 'அற்றேல் யான் வேடுவக் கோலத்தொடுஞ் சென்று அவனறன் அவிகொள்வல். மற்று, யானின்ன கோலத்தொடும் போதுவல் என்று நீ யவற்குக் கூறுதல் தவிர்தி' என்று போயினன். வழிநாட்காலை நந்தஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'மாற நாயனர்க்கு மதிசூடிய வேணியார் வந்தவியேற்பார்' என்று சொல்லி விடுத்தனர்; உடனே மாறரும் பெருங்கருணைப் பித்தர்தம்பிரானை வேண்டிச் சோமவேள்வியைத் தொடங்கினர். யாகசாலையும் பெரிதாக வகுக்கப்பட்டது. பல்பிளவுபட்ட பார்ப்பனக் குழாமுங் கூடிற்று. ஆதுலர் கூட்டமுமடைந்தது. சிவபெருமான்றன் காட்சியைக் காண்கிற்பானேனையோருங் கூடினர். வேதகோஷம் முழங்கிற்று. சைவச் சிறார்களெல்லாந் தேவார திருவாசகத் திருமுறைகளை யோதிக்கொண்டே யொருபுறம் விளையாடினர். வேள்வியுமொருவாறு முற்றி அவி பகரு மமயம் வந்துறலும் சொன்னசொற் றவருச்சோதி மேனியன் தான் வேடுவத் திருக்கோலங்கொண்டு உலகீன்ற அம்

மையைத் தன்னுருவிற்கேற்ப வேடுவிச்சி யுருக்கொளச் செய்து, தனது சிவகணங்களனைத்தையும் வேட்டை நாய்களும் பன்றிகளு மாக்கிக்கொண்டு முத்தலைச் சூல மொன்று கையகத் தேந்தி மகச்சாலையை நோக்கி வாரா நின்றனர். அதுகண்ட யாசசாலைக்கணிருந்த வேதியர் யாவரும் ஒய்யெனக் கூயெழுந்து அவர் தமை வாய்க்கு வந்தவாறெலாந் தெழித்து அடித்துத் துரத்தவும் புக்கனர். அன்புவலைப்பட்ட வண்ணல் தன்னை வைதடித்துக் துரத்தியும் திருமி யேகலானுகித் தன சிவகணங்களை நோக்கலும் நாயும் வன்றியுமாயிருந்த அன்னார் அங்ஙனம் பெருமான்மாட்டு இறப்பப் பெருந்தீங்கிழைத்த அப்பாவியர்மீது பாய்ந்து கடித்துக் கொன்று மகச்சாலை முழுதும் பிணச்சாலை யாக்கினர்; அதான்றியும் அந்தணர்பொருட்டு ஆண்டு ஆக்கியிருந்த நெய் பால் தயிர் அடிசின் முதலியயாவற்றையும்அப்பொய்ஞ்ஞமலிகளும் பொய்வன்றிகளும் உண்டுகழித்தன. உடனே கிராதரூபக் கிரீசனும் தன்னையே மனத்தின்கண்சிந்தித்து அவியினைக் கைக்கொடு தன் வரவினை யெதிர்பாராநிற்கும் யச்சுவாவின்பால் விரைந்து சென்று நிற்றலும், கிருதார்த்தனுதல் வேண்டி நின்ற மறையவர் தலைவர் உடனே அவியினை வேடுவக்கோலமுறு விடையோன்றன் கையினிற் சிறிதும் ஐயுறாது பெய்தனர்; அதனை யெம்பெருமான் அகடாாவுண்டு ஏற்றுக் குன்றின்மேலிருந்து காட்சி கொடுத்து அவர் தமை யுய்யக்கொண்டனர். இதுபற்றி யன்றே யவர் சோமாசிமாற நாயனாராயதூஉ மென்க" என்று சொல்லாநிற்ப, அவ்வீட்டின் மாடத்தும்பரோரறையின்கண்ணே யின்னிசைப்பாட்டும் மன்னிசைக்கல்

வியும் வல்லளாய், எழிலுங் குணமுமியைந்த பூங்கொம்ப ராய் மிளிர்தரும் ஓரிளம்பருவப்பெண் தனது வார்குழல் கோதி முடித்துக்கொண்டு நின்றாள்.

அப்போழ்தத்துக் கரியமாலனைய காளையொருவன் விரைந்து அவட்குப் பின்பிறம் போந்து அவடன விழிக ளிரண்டையுந் தன்னிருகையா லிறுகப் புதைத்துக் கொண்டு நின்றான். அன்னண மொருவன் கண் புதைத்த துணர்ந்த அந் நங்கை "விடுதி விடுதி விடுதி" என்று மெல்லெனக் கூயினள். அதற்கவன் "இதுவே நந்தமக்கேற்ற நல்லவிடுதி" என்று கூறி நகைத்தனன். என நகைத்தலும் அவள் "மாயவ!' இஃதுனக்குத்தக்க தன்று. நின்பெருந்தன்மையோ டேலாது. என்னை விட்டுவிடு. அல்லாக்கால் யான் உரத்த குரனில் எந்தை யைக் கூவுவேன்" என்று வெகுண்டனள் போலக் கூறி னள். உடனே மாயவன் தன்னிருகரங்களையும் வாங்கிக் கொண்டு அவட்கு முன்புறம் போந்து "அம்மா! கயற் கணீ! அடியேன்மீதும் அத்துணை வெகுளியோ?" என் றனன். இதுகேட்ட கயற்கணி "யான் நன்றாய்க் கோதி முடித்திருந்த கூந்தலவிழ்ந்து குலைந்துவிட்டதே! இனி யென்செய்வது?" என்றாள். அதற்கு மாயவனுடனே "கொண்டலுங் கறுத்து நிகர்க்கலாது தங்கண்ணீர் சொரிந்து உருவழியுமாறு புரியும் நின் கூந்தலை யான் சீவி முடிக்கின்றேன்" என்று அவளது கூந்தலைப் பற்றப் புகுமளவினில், அவள் சிறிது விலகிக் கொண்டு நின்று "நீ யென்னைத்தவிர்த்து வேறெம் மங்கையையுங் கனவி னும் விழையேன் என்று சொக்கலிங்கப் பெருமானறி யச் சத்தியஞ் செய்து வாய்மொழி கூறினாலன்றி நீ

யென் கூந்தலைத் தொடற்பாலையல்லை'' என்றாள். சிறிது போதுந் தாமதியாது உடனே மாயவன் "அங்ஙனமே செய்வல்: சொக்கலிங்கப் பெருமானது தலையினும் அறைவல். அதனைப்பற்றி நீ யையுறலொழிக. 'நீ வேறு யான் வேறு' என்னு மெண்ணமும் என்மனத் தெப்பொழுதேனும் நிகழ்ந்திற்றிலது. இஃதுண்மை'' என்று வாய்கூசாது மொழிந்தனன். அதனை மெய் யெனத் தெருண்ட மங்கை கயற்கணி யுடனே புன்முறு வல் கோட்டிச் செந்தாமரைமுகஞ் சிவந்து நின்றனள். அஃதுணர்ந்த மாயவன் அவளை யணைந்து தனகரங்க ளாற் றழுவு அவளை இருகபோலங்களினும் அகங் குழைய முத்தமிட்டனன். உடனே யிருவரும் ஆண்டு நாலவிட்டிருந்த பொன்னூசற் பலகையின் மீதிரீஇத் தங்கள் தாளினாற் றரையினை யுந்தி யாடிய தொடங்கினர். அவர்களுக் கெதிரே யொரு நிலைக்கண் ணாடி நிறுவியிருந்தது. அவர்கள் நிலத்தினை யுந்தியாடுந் தொறும் அவர்களுருவம் அவ்வாடியின்கண்ணே தோன் றுதலும், ஊசல் பின்னிடுந்தொறும் அவ்வுருவங்கள் மறைதலுமாயிருந்தன. அவ்வாடியை யுலகமாகக் கருதிக்கொளின், அதன்கண் அவர்களது உருவந் தோன்றுதலைப் பிறப்பாகவும், உருவம் மறைதலை மரண மாகவும் அவ்வூசலைக் கருமத் தொடராகவுங் கொள்ள லாம்; ஊசலாடி யோய்தலை யிருவினையொப்பி னிறுதியி லுண்டாகும் மலபரிபாக மென்னலாம்.

இனி யிதுநிற்க, மாயவன் "ஓ! கயற்கணிக் காரி காய்! ஓரின்னிசைத் தமிழ்ப்பாட்டுப் பாடுகிற்பாயோ?'' எனலும், கயற்கணி "ஓ! அங்ஙனமே நின் விருப்பத்தின்

வண்ணமே பாடுவல், கேட்டி" என்று பின்வரும் பாடலைக் குயிலினு மினிய குரலினிற் பாடினுள் :

"ஒத்த நலமுடையா னேங்கு குலமுடையான்
சுத்த மனமுடையான் ரேமில் கனமுடையான்
வித்தை குணமுடையான் வேண்டு பணமுடையா
னித்தகைய நாயகனை யெய்திற் குறையென்னே?
இன்பத் தலைமகனை யெய்திற் குறையென்னே?' (22)

இப்பாடல் கேட்ட மாயவனதுடல் புளகித்தது; புயங்கள் வீங்கின; மகிழ்ச்சி மேலிட்டது. உடனே மாயவன் அவளை மீட்டுந் தழுவி முத்தமிட்டுத் தன் மடி மீது சார்த்திக்கொண்டனன்.

இவ்வாறவர்களிருவரும் இன்புடன் பொன்னூசலாடிப் பாடிக்கொண்டிருப்புழிக் "கயற்கணீ! கயற்கணீ!! கயற்கணீ!!!" என்ற விளியினை முக்காலிசைப்பக் கேட்டனர். கேட்டலும் ஞரேலென வூசலாட்டமும் நின்றது; கயற்கணியு மெழுந்து கீழிழிந்தோடினள்; மாயவன் மட்டும் மேலேயே யிருந்தனன்.

"அந்தோ! இன்னு மொருமுறை முத்தமிடலாமென்றிருந்த வெற்கு அது சிந்தியாவண்ணம் மெய்ம்மொழிப்புலவர் கயற்கணியை விளித்தனர். இனியென் செய்வது? அவர் மகள் கயற்கணி மீட்டு மிவண் வருங் காறும் காத்துக்கொண்டு நிற்கோ? அன்றியேகுகோ?—அப்பேதை யென்னையே முற்றும் நம்பியிருக்கின்றனள். நேற்றை ஞான்று அவள் கூறிய வுறுதிமொழியை யென்னென்கேன்! 'உன்னையன்றி வேறெவரையுங் கனவினுங் கருதேன், நீயே யென்னுயிர்! என்னின்பம்!

என்னறிவு! என்னிறைவன்!' என்று மனங் குழைந்து சொற்றனள். இத்தகைக் கற்பாசியையோ கைவிடுவது? புலவர்க்குந் தம்மகளை யெற்களிப்பதிலேயே மிகவும் விருப்ப மென்பது முணர்ந்தேன். எல்லாவற்றிற்கும் யானிப்பொழுது மோன விரதம் பூண்டிருத்தலே மேதக்கது. ஒருகால், மதிவாணன் என்மீதேற்றி யிருக்கும் குற்றங்களைக் குறித்து ஏதேனும் ஆராய்ச்சி யேற்படின், அக்காலத்து இது பேருதவியாகவும் நிற்குமன்றே! புலவரு மென்னைத் தன் மருக னென்றே கருதி மன்னவனிடத்திற் பரிந்து பேசலுங் கூடும்—சீ! என்னே யென்மடமை! மதிவாணனைத் தொலைத்தலை விடுத்து இஃதென்கொல்! என்றன் நிலைமையென்? புலவர்தம் நிலைமையென்? யானோ புலவர் மகளை மணப்பது? கரும்பினுமினிய வேம்பன்மகளை மணத்தலை விடுத்து வேம்பினுங் கைக்கும் புலவன் மகளையோ பரிசிப்பது? ஐயோ! பாவம்! பாவம்!!" என்று மாயவன் தனக்குள்ளே பிதற்று நிற்கையில் ஓரழுகைக் குரல் கேட்டது.

உடனேயஃதென்னென மாயவன் இழிந்துசென்று வினவலும், கயற்கணி, தன்றந்தையார் ஆணையின் வண்ணந் தேவாரத் திருமுறையை யெடுத்துக் கொணரச் சென்றபோது அவளது வலக்கரத்துச் சுட்டுவிரலிற் றேட்கொட்டிற்றெனத் தெரிந்துகொண்டனன். அக்கணம் மாயவன் "யானிதற்குத் தக்கமருந்து கொண்டு வருவல்" என்று கூறி வெளியே சென்றனன்.

மாயவன்றன்செயல்க ளிவ்வாறாக. நீதியந்தலைவர் சொக்கநாதர், தம்பான் முன்னரே மன்னனுலாணை

தந்து அனுப்பப்பெற்ற திரிசிரிபுரக் கலகச் செய்தியினைப்பற்றி யாராய்வான் புக்கனர். அங்ஙனம் புகு முன்னர் மாயவனைப்பற்றிக் காவலின் வைக்குமாறு ஆணையிடுதல் இன்றியமையாததாயிற்று. மாயவனோ மன்னவற் குறவினன். ஆயினுமென்னை? நீதிப்பார்வையி னுறவுபார்வையு முண்டுகொல்? இல்லையாதலின் நந்தம் நீதிதவறா நின்மலச் செல்வர் சொக்கநாதரும் தானைத்தலைவர் வேலவர்க்கு மாயவனைக் காவலிற் செறிக்குமாறு நிருபம் வேந்தனுணையென விடுத்தனர்.

இங்ஙனம் ஆணைபிறந்தது உடனே யுணர்ந்த மாயவன் காலம்போக்கலின்றிப் புலவர் மாட்டோடி யாவற்றையுந் தனக்கு வேண்டியவாறு விரித்துரைத்து அவர்தம் மனத்தின்கண் மதிவாணனைப்பற்றி வேறுபட்ட கருத்துக் கொள்ளுமாறு செய்தனனேயன்றி, அப்புலவர்பிரானையுந் தன்பொருட்டு உத்தரவாதியாய் நிற்குமாறும் வேண்டிக் கொண்டனன். உலகியலுணரப் பெறாத உத்தமப் புலவரும் தம்மருகனுவான் மீதுள வாஞ்சைபற்றி அவன் கூற்றினையுண்மையென் றுட் கொளீஇ ஓமென விணங்கினர். இவ்வாறு அவரது உதவிபெற்ற மாயவனு முடனே மறைந்தனன். அதுமுதன் மாயவனை நேடிக் கண்டுபிடித்த லரிதாய் விட்டது. முளரிமலைக்குஞ் சிராமலைக்கும் முறையே சேவகர் சென்றனர். மாயவன் நாளும் வழக்கமாய்ச் சொல்லுறாஉம் இல்லங்கடொறும், பிறருணராவண மொற்றர்கள் அவனைப் பிடிக்குமாறு அமைக்கப்பட்டனர். கரந்துறை காவலருமிதன்க ணூக்கமொடுந் தலைப்பட்டு முயலாநின்றனர்.

இனி யிதுநிற்க, தங்கள் தலைவ னாணைபெற்ற வூர் காவலருளொருவன் போந்து மெய்ம்மொழிப் புலவ ரிடம் மாயவனெங்கென வினவினான். அதுகேட்ட பாவலர், "எது கருதி மாயவனை நேடுகின்றாய்?" என லும், அக்காவலன் "அப்பிரபுவின் மீது குற்றமேற் பட்டுளது; அதனைக்குறித்து ஆராய்ச்சி செய்து அதற் குத்தக வொறுக்குமாறு விடுத்த வேம்பனாணையின் வண்ணம் நந்தம் நீதியந்தலைவர் சொக்கநாதர் மாயவ னைப்பற்றிக் காவலிற் செறிப்ப வாணையிட்டுளர். அது பற்றி யெங்கடலைவன் என்னை யிவ்வயின் அனுப்பி னான்" என்று கூறினன்.

இஃதுணர்ந்த புலவர் முகங்கறுத்துத் தம்மிருக்கை விட்டெழீஇக் காவலனை நோக்கிக் கூறுவர்: "ஏயே! பேதாய்! எந்தம் மருமகன் மாயவனை நீ யாவனென்றுன் னினை? நன்று நன்று நின்வாய்மொழி!! இன்னொருகால் அங்ஙனம்கூறேல். அது பற்றித் தீவழியொழுகேல். எம் மருகனாவான் குற்றவாளியென் றேற்படில், அப் போழ்து பார்த்துக்கோடலாம்" எனக் கேட்ட காவ லன் சிறிது நகைத்துச் "செந்தமிழ்ப் புலவீர்! நீவிர் அங்ஙனங் கூறுதலொழிமின். எடுத்தவுடனே மாய வன் குற்றவாளியென் றெவ்வணமேற்படும்? எல்லா வற்றையும்பற்றி யாராய்ச்சி செய்த பின்ன ரன்றோ மெய்ம்மை வெளிப்படும்? அவ்வாறு ஆராய்ச்சி செய் தற்கு நந்தம் மாயவன் வாய் மொழி யின்றியமையாத தாமன்றோ?—" என்று கூறி முடிக்குமுன்னே, புலவர் "அற்றேல் அவ்வாராய்ச்சிக் காலத்து அவனது வாய் மொழி வேண்டிழி அவன் நீதிச் சாலைக்குத் தானே

போதருவான். அங்ஙனமிருப்ப அவனை யாவற்றிற்கு முன்னர்க் காவற்சிறையகஞ் செறிப்பானேன்?" என்றனர்.

உடனே காவலன் "நற்றமிழ் நாவலீர்! நீதிமுறை நூல் அன்னணஞ் செறிக்குமா விதித்தலின் யாங்கள் அவ்வாறு செய்யத் தலைப்படுகின்றேம். அதுபற்றி யெம்மை வெகுளன்மின்" என்றனன். அதுகேட்ட புலவர் நீதியையும், நீதிமுறையையும், நீதிச்சாலையையும், நீதியந் தலைவரையும், ஊர்காவலரையும் தமக்குத் தோன்றியவாறெல்லா மிழித்துரைத்து வாய்க்குவந்த வண்ணமெலாம் வாய்நோய்வுங்காறுந் தெழித்தனர்.

காவலன் புலவர் வாய்வெளிப்பட்டன வனைத்தும், அறியாமையா னெழுந்தனவென் றுணர்ந்தனனேனும், அவர் வரம்பு கடந்து சேறலைச் சிறிது அடக்குதல் கருதிக் கூறுவான்: "வண்டமிழ் வல்லீர் சற்றே யான் கூறுவதைச் செவிமடுத்தல் வேண்டும். நீவிர் இன்னணம் அரசமுறைக்கேற்ற வனைத்தையு மிழித்துப் பழித்துத் தெழித்து மன்னவன் மாட்டுப் பெருவசை யிழைத்தீர், மன்னவனாணைவழி யொழுகு மெம்மனோர் கேட்கும்படி யிங்ஙனம் கூறியதனால் நீவிருங் குற்றவாளியாயினீர். இராசத்துரோகியாயினீர்! மெய்ம்மொழிப் புலவரென்பது உமக்கு உள்ளவாறே காரணங் கருதியிட்ட பெயராயின் நீவிர் ஆராய்ச்சிக்காலத்து இக்கூறிய யாவற்றையும் சிறிதேனும் மறையாது கூறுவீர். அப்போது நுந்தம் நாவன்மையைக் காண்பல்" எனலும் புலவர் "ஈண்டு மாயவனிருக்கின்றிலன். நீ யினியொரு கணமேனு மிவ்வயின் நில்லாது நின்றன் றொழிலில் மேற்சேறி. அங்

னனஞ் செல்வாயல்லேயேல் நீயெமதாற்றல் இற்றென் றுணர்வை! புல்லியோய்!" என்றனர்.

இவ்வாறு புலவர்பெருமான் வெருட்டியும் அகல கில்லாத காவலன் சிறிது பணிந்து கூறுவான்: "ஆன்ற மைந்த அருந்தமிழ்ப் புலவீர்! எளியெனேன் புன் சொல்லேயுஞ் சற்றுச் செவியிலேற்பீர். என்றன் கூற்றுக் கொல்லர் மறுகினி லூசிவிற்ப தொக்கு மெனினுஞ் சிறிது துணிந்து கூறுவல். கேண்மின்.

*"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்." (23)

என்றவப் பெருநாவலர் பொய்யா மொழியை நீவிர் பொச்சாந்தனிரோ?" என்ற சொற்கள் காதினிற் புக்க வளவிற் புலவர் "என்சொனுய்? தீயோய்! கற்ற விந் தையைக் குரவற்பாற் காட்டுவான் புக்க இழி மாணுக் கனே யொப்பப், புல்லறிவாள! நீ யென்னே பகர்ந்தனே? ஈதோ நின்றன் புன்பொறி நாவைக் கொய்தற் குரிய வழியினே நாடுதும்; எமதாற்றலேயின்னே காண்டி" என்று கோடையிடி யிடித்தெனக் கூறித் தமது அகங் கையா லவன்றன் கதுப்பினிற் பொட்டெனப் புடைத் ததனேடமையாது ஊர் காவற்றலேவன் முருகன்பா லோடித் தன்னகத்துற்ற வளத்தையுங் கோவென வாய்விடுத்தரற்றி முறையிட்டார். முறையிட்ட நந்தம் மூதறிவாளரை முற்றுங்கேட்ட பின்றை அவர்தமைச் சாந்தப்படுத்தி யண்ணிதோ ராதனத்திருத்தி ஊர்காவற் றலேவனுரைப்பான்: "கவிஞர் பெரும! நீவிரறியாத

* திருக்குறள்.

தொன்றில்லை. நுந்தம் மேதகவுடைமை யறியான் அப் பேதைக் காவலன். ஆதலினது பற்றி நீவிர் கவலற்க. அவற்குத்தக்க புந்தி புகட்டுவல். "நீவிர்வாளா திருத்திர்" என்றறும், கலைஞர் கோமான் 'நும்மானுரைப்ப தொன்றுளது. அஃதென் கொலோவெனில் மாயவனைப் பற்றிக் காவற்சிறையகம் படுப்ப தொருதலையான் வேண்டப்படுவதேயோ?" என வினயினர். அதற்குக் காவற்றலைவனும் விதிவிடை கொடுத்தனன். அது கேட்ட தென்மொழி வல்லுநர் "அற்றேல் அவன் காவலிற்படாமைக்கேற்ற சூழ்ச்சியொன்றுசொல்லல் வேண்டும்" என்றிரந்தனர்.

இஃதுணர்ந்த முருகன் "நீவிர் இதுபற்றி யிவ்வளவு மட்டும் வேண்டுதலை யுற்று நோக்குமிடத்து அவன்பால் நுந்தமக் காவதொன்றுண்டுபோலும்!" என்று குறிப்பின் வினவலும், "புலவர் காவற்றலைவீர்! மாயவன் எந்தஞ் செல்வமகள் கயற்கணியைக் காதலித்துளன். அவளுமிவனையே மணப்பலென்கின்றனள். ஆதலிற் கடவுள் கருணையே முற்கொண்டு அம்மணவினையையுங் கடிதினில் முடிக்கலாமென் றுன்னினேம். ஆகவே யெந்தம் மருகனுவாற்கு எம்மாலியன்றவளவு உதவி புரியுமா விழைகின்றேம்" என்று சிறிது மகிழ்ச்சியொடுங் கூறினர். "அஃதுமது விருப்பமேற் கலகச்செய்தி யாராய்ச்சிக்காலத்துமாயவன் தவறுதுவருதற்கு உத்தரவாதியாய் நீவிர் நிற்றல் வேண்டும்; அங்ஙனம் நிற்றலென்று நீவிர் உட்படைச் சீட்டு மெழுதிக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்தபின்னர்க் குறித்தகாலத்து மாயவன் வாராதொழிவனேல் நீவிர் அகப்பட்டுக் கோடல்

வேண்டும். அப்போழ்தத்து எம்மனோரால் நும்பொருட்டேதுஞ் செய்தலியலாது. ஆதலின் நீவிர் செய்வான் கருதுவதை நன்னர் யோசித்துச் செய்மின்" என்றான் முருகன்.

இவையனைத்தையுங் கேட்டு மனங் குழம்பிய புலவர் நாத்தடுமாற நவில்வார்: "யான் மாயவன் பொருட்டு உத்தரவாதியாய் நிற்கின்றேன். அவனைச் சிறைப்படுத்தாது ஆராய்ச்சிக் காலத்துமட்டும் வருமாறு செய்விர்—" என்று கூறுநின்றுழி 'ஓ' வென்றொரு பெருங் கூச்சற் கேட்டது. அஃதென்னென வெளிச்சென்று விசாரிப்புழி "யாவனோ வொருவன் போந்து புலவர் வீடு சென்று மாயவனை நேடிய அக்காவலனைப் பின்புறம் நின்று வாளானெறிந்து மறைந்து போயினன். அதுபற்றித் தெருவனைத்துங் குழம்பிக் கோலாகலப்படுகின்றது" என அவ்வயின் நின்றோர் கூறலும், முருகன் ஆண்டுள்ள வொரு காவலனை விளித்துத் தன் கலிமாவினைப் புனைந்து கொணருமாறு ஆணையிட்டான். அங்ஙனம் இட்டது கேட்டார் அஃதவண் நின்றது கண்டார். உடனே முருகனும் அதன் மீதேறி விரைந்தேகினன். புலவருந் திகைத்துக் காவற்சாலை விட்டுப்போயினர்.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று

---

## ஆறும் அத்தியாயம்

### நகர்ப் புனைவு

புரவியேறிப் போன முருகனை காவலனெறியுண்டு கிடந்தகளங்குறுகி வினவியபோது பிக்குணிக் கோலம் புனைந்து வீடுகடோறும் ஐயமேற்றுச் செல்லா நின்ற கரவாளனொருவன் காவாளினெறிந்து பொள்ளென மறைந்து போயினனென்றூர் அவ்வயின் நின்றூர். உது கேட்ட காவலர் தலைவன் பரியினின் றிழிந்து ஆயிடை நிகழ்ந்தனவற்றை யெல்லாம் நன்னர் நோக்கிய பின்றைப் பிக்குணிக்கோலம் புனைந்து போந்தான் இவ்வழிப்போந் தன னென்பதனையும் இவ்விவ் வில்லங்கடோறும் ஐயமேற்றன னென்பதனையும் காவலன் புலவர் வீட்டு வாயிலினிற்புழி அக்கயவன் இவ்விடம் நின்றன னென் பதனையும் அவனது உயரம் நிறம் தோற்றம் முதலியன வற்றையும் பற்றி ஆராய்ந்தறிந்து கொண்டனனன்றி, அத்தீயோன்றன் அடிச்சுவடுகளைக் கண்டு குறித்துக் கொண்டு பிக்குணிக்கோலப் பேய்மகன் சென்ற திசை வழிச் சில காவலரையேவி நேடுமா விடுத்துத் தான் வேலவரது இல்லத்தை நோக்கிக் கனவட்ட மிவர்ந்து கடுகிச் சென்றனன்.

முருகன் வகுத்துரைப்ப நடந்த செய்தி யனைத்தை யுங் கேட்ட வேலவரும் மாயவன் மாட்டு வெறுப்பு மீக் கூர்ந்து 'என்னணமேனும் மாயவனைக் காவலிற் செறிக் குதும்' என்று உறுதிபூண் டெழுந்தனர்.

இடையிற் சென்ற காவலரோ பொய்ப்பிக்குணிக் கோலத்தான்றன் வேடத்தை மாற்றிவிடுவானென்பதனை

மறந்தனராய் வழிக்கட்டிரிதந்த பிணிக்குணிகள் யாவரை யும் பற்றிக் காவலிற் செறித்தனர். இனி வேலவமுருக ரிருவரும் வேற்றுக்கோலங் கொண்டு கொய்யுளைக் கலிமா வேறித் தென்மேற்றிசையிற் சென்று திருப்பரங் குன்றத்துற்றுத் துருவத் தலைப்பட்டனர்.

இவ்வாறிவர்கள் தேடாநிற்ப மாயவனே பரங்கிரிக் கருகிலுள்ள கூத்தியர் குன்றமென்னுஞ் சிற்றூரின்கண் ஒரு நாடகக் கணிகையி னில்லத்தினுற்றுக் கட்டிலிற் படுத்துக் கவலையற் றுறங்குவானாயினன்.

சிறிது நேரத்தினுள்ளெல்லாம் ஆயிடையோராரவமெ ழும்பிற்று. அஃதென்னென அக்கணிகையும் விசா ரிப்பச் சென்றனள்; சென்று 'மாயவனைத் தேடிப் பிடிப்பான் காவலர் ஊரூராய்ப் போய் வீடு வீடாய்ச் சோதிக்கின்றனர்' எனக் கேள்வியுற்றனள்; மனங்கலங் கினள்; பெருமூச் செறிந்தனள்; 'ஐயகோ! யாவரேனும் என்மீதும் ஐயங்கொள்ளுவாரோ?' என்று அஞ்சித் தன் மனோவிகாரங்களை வெளிக்காட்டாது உள்ளடக்கினள்; இனி யவ்வயின் நிற்றலும் நேரிதன்றென வீட்டை நோக்கி விரைந்து செல்லுமாறு அடியெடுத்து வைத் தவள் 'அம்மவோ! நான் விரைதல்பற்றி யையப்படி னென்செய்வது?' என்று சிறிது மெல்லென நடந்தனள். அப்போழ்தத்து மாயவனது நிலைமை நினைவிற்கு வரலும் எடுத்தடிவைத் தேகினள்.

இந்நாடகக் கணிகையின் செயல்களை யுற்றுநோக் கிக் கொண்டிருந்த வொரு காவலன் பிறர்காணாது அவ ளைப் பின்பற்றிச் சென்றான். சென்ற கணிகையோ மாயவனை யெழுப்பி "மறைதி! மறைதி! நின்னை நேடு

கின்றனர்'' என்றனள். இச்சொற்கள் செவிப்பட்ட மாயவன் எழுந்தனன் புனைந்தனன் பறையர் தங்கோலம்! கைப்பறை யெடுத்துக் கணகணென்றடித்துப் பொய்ப் பறையனுமுடன் போந்தனன் வெளியில். எதிர்கண்ட காவலன் அவனை யயிர்த்து "ஓ! பறையோய்! நீ யென் னுடன் போதுதி. அல்லாக்கால் நின்னைச் சிறையகஞ் செறிப்பல்'' என்றனன். "ஓ! நும்முடன் போதுதற் கென்னை? இழிகுலத்தேனையு மொருபொருட்படுத்து அழைக்கும் நுந்தங்குழூஉவிற் செல்லும் பெரும்பேறு பெற்றேன்'' என்றன னெவரையு மேமாற்று மாயவன். உடனே யவனைப் பற்றிக்கொண்டு நால்வர் காவலர் நண்ணினர் மதுரை நோக்கி.

பரங்கிரி யருகர்ப் பறையர் பலர் ஓடோடி வந்து "அண்ணா! போதியோ? அப்பா! போதியோ !! ஐயா! போதியோ!! எம் அரசே! போதியோ!'' என்று தாங் கொண்டு செல்லும் பறையனை நோக்கி யழுதல்கண்ட காவலர் சிறிது மனமிளகினரேனும் இடங்கொடுத்திலர். இவ்வாறிவர்கள் இடங் கொடுத்தலின்றி மாயவனைப்பற் றிக்கொண்டு செல்லுறாஉம் நெறிக்கட் பசுமலையருகின் எதிரே யெண்மர் குருதிபடிந்த குந்தக்கையினர்போதரக் கண்டு அவரொடும் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போழ்தத்து அவர்களுளொருவன் காவலரை நோக்கிக் "கயவருட் கயவனாகிய மாயவனென்னை யிக் கோலங் கண்டனன்! காண்மின்'' என்று கூறித் தன் னுடலினை யவர்கட்குக் காட்டி நின்றான்; அவர்களு ளின்னொருவன் "இவனை மாயவன் குத்திய குந்தம் இது காண்டிர்'' என்று சொற்றுச் செந்நீர்தோய்ந்த

குந்தமொன்று காட்டினன்; அவ்வமயத்திற் கீழ்த் திசையிற் குதிரையேறி விரைந்து செல்லாநின்ற வொரு வனைச்சுட்டி மூன்றுவன் "ஓ! ஆவயினேடுகின்றனன் மாயவன்! ஆவயினேடுகின்றனன் மாயவன் !!" என்று கூயினன். இதுகேட்ட காவலரிருவர் அவனைப் பற்று மாறு ஓடினர்கள்.

இதற்கிடையிற்பறையர் கோலப்பாதகன் வடமேற் றிசை வழியா யோடிவிட்டனன். கண்ணுற்ற காவல ரிருவரும் மாயவனைப் பின்பற்றி யோடினர். பரியாள னைப்பற்றிய சென்ற காவலரிருவரும்போய்ப் பார்ப்புழிக் குதிரைவீரன் முருகனே யென்று தெளிந்து வெட்க முற்றனரேயன்றித் தாம் போந்த செய்தியையும் நடந்த செய்தியையும் முதலோடிறுதியாக முற்றும் மொழிந் தனர்.

இவ்வாறிவர்கள் மொழியக் கேட்டு நின்ற முருகன் சேய்மைக்கண்ணே யொருவன் முன்னர் விரைந்தோடு தலையும் அவனைப் பிடிப்பா னிருவர் பின்னர்ச் செல்லு தலையுங் கண்ணுற்று அருகினின்ற காவல ரிருவரையுந் தன்னெடு கடுகி வருமாறு சொல்லிவிட்டுத் தனது கலிமாவினைத் துனைவிற் செல்லும்வண்ணந் தூண்டிச் சென்றனன்.

இஃதிவ்வாருக, பறையர் கோலத்தோடு மோடிப் போன மாயவன் மாடக்குளத்தினிறங்கி மடைப்புழை யிற் புகுந்து மதகினீர்தாங்கும் ஓவின்கீ ழொளித்துக் கொண்டனன். பின்பற்றிச் சென்ற காவலரோ இதனை யறியகில்லாது தவித்தனர். அவ்வயிற் சுற்றிச் சுற்றி வந்தனர்; 'இவ்வழியினேயே யவன் போந்தனன் ;

அதற்குளவன் யாங்ஙனம் மறைந்து விட்டனன்? இஃ தென்னை விந்தை!' என்றுரைத்து உளங்கவலா நிற்புழி முருகனும் மற்றைய காவல ரிருவரும் போந்தனர். உடனே முருகனும் அவர்தமுளிருவரை மடையின் மறு புறத்து நிறீஇ யொருவனை மடைப்புழையுள் நுழைந்து நெடுமாறேவி மற்றொருவனுந் தானுமாய் மாயவனொளித் துக் கொண்ட புறத்தே நின்றனர்.

சிறிது நேரத்திற் கெல்லாம் மடைப்புழையின்கண் நுழைந்து மாயவனை நேடிய சென்ற காவலனுடலம் வெளியே போந்து விழுந்தது; யாவரு மதனை யுற்று நோக்கிச் சென்ற காவல னிறந்து விட்டன னென் றெண்ணி யுளங்கவன்றனர்.

இதற் கிடையின் முருகன் நெடிய தோரிருப்புச் சலாகை தருவித்து அதனை மடையினுட் செலுத்திக் குத்துவான் புக்கனன். புக்களவில் உள்ளிருந்த மாய வன் மடையின் மறுபுறஞ் சென்று வெளியேறினன். உடனே யாண்டு அவனை யெதிர்பார்த்து நின்ற காவல ரிருவரும் ஓய்யெனக்கூய் அவன்மேற் பாய்ந்து பற்றலும் அவன் இவர்களைப் பொட்டெனக் கதுப்பினிற் புடை த்து மல்லினிற் கொண்டு பிடித்துப் போர் புரிந்துழிக் காவலனொருவன் காலொடிந்து வீழ்ந்தனன்.

இத்துணையும் நிகழ்தலை மடையி னிப்புறத்திருந்து கண்ட முருகன் காவலனொடுஞ்சென்றுபற்றப்புகுதலும் மற்போர் நின்றது; மாயவன் தலைகுனிந்தனன்; உடனே முருகனும் மாயவனை நோக்கி "என்னே! மாயவ! என்னையுன் னாற்றல்? எம்மனைவரையு மின்ன

ணம் வருந்துமாறு வைத்தனையே! இதன்காரணம் யாது கொல்? வாய்திறந்துரைத்தி'' என்று வினயினன். வின வலும் மாயவனொன்றும் பேசிலன்.

அஃதுணர்ந்து முருகனும் அவனைப் பற்றித் தளை யிறுமாறு கட்டளை யிட்டனன்; இட்டது கேட்ட மாய வன் "என்னைத் தளையிடுவோன் நீயேயோ? புல்லறி வாள!'' என்று கூறி முருகன்மேற் பாய்ந்தனன்; பாய்த லும் பக்கத்திருந்த காவலர் மாயவனைப் பற்றிப் பிடித்து அவன் கைகால்களில் யாப்பிட்டனர்.

அங்ஙனம் பிடியுண்ட மாயவன் சிறைக் கோட்டத் திடப் பெற்றான். மற்று, அரண்மனை மாடமீ மிசை மன்னவனொடுஞ் சென்ற மதிவாணன் பாண்டியனது அந்தப்புரத்திலுள்ள மகளிர்க் கிடையே சென்று சேர்ந் தான். சேர்ந்துழி வேந்தனணையின் வண்ணம் ஆண்டு வேய்ந்துளதோ ரிருக்கையின் கண் வீற்றிருந்தனன். இருந்த மதிவாணனைக் கண்டமகளிரெல்லாம் உள்ளத்து உவகை பொங்கிப் புன்முறுவல் பூத்தனர்.

அப்போழ்தத்துக் கன்னிமாடத்தினின்றும் பாங்கி யர் பலர் புடைசூழ இன்பவல்லியும் போந்து கோப் பெருந்தேவியின் அருகர் நின்றாள். உடனே வேம்ப னுந் தன்வயிற் பிறந்த கரும்பனைய கன்னியைச் சுட்டி, "மதிவாண! இவளையன்றே நீ காண்டல் வேட்டது?'' என்று கூறலும் மதிவாணன் "ஐயனே! இந்நங்கையை யன்றே யான் கைப்பிடித்தல் வேட்டது!'' என்றனன்.

தான் படத்தினிற் கண்ட காரிகையைக் கண்ணெ திரே காணப்பெற்ற மதிவாணன், தன்பால் நிகழ்ந்த மெய்ப் பாட்டினை யடக்கும் வலியின்றி யுழலுவான்

புன்முறுவல் பூத்தான். இன்பவல்லியும் இடையிடையே தனது காதலனைக் கட்கடையால் நோக்குவாள்; உள்ளங்களிப்பாள்; இளநகை யரும்புவாள்; ஒருபுறந் திரும்புவாள்; பெருந்தேவியின் புறத்தே நாணத்தினாற் றனது முகத்தினைக் காப்பாள்.

இவ்வாறு சிறிதுபோழ்து கழிந்தது. அதன்மேல் இன்பவல்லி, பொள்ளெனப்போந்து, மதிவாண வள்ளலைத் தாளின்கட் பணிந்தாள். அதனை யெதிர்பாராத அருந்தமிழ்க் குரிசில் மதிவாணனும் இறும்பூது கூர்ந்து இன்ன செய்வதென் றறியானாய்ச் செழியனை யொருமுறை யேறட்டுப்பார்த்துத் தன் இருகரங்களானும் நங்கையர் தலைமணி இன்பவல்லியை வாரியெடுத்தலும் அவள் அவன் அருகிருந்ததோ ராதனத்தின்கண் இருந்தனள்.

அதன்பினர் வழுதி "ஐயா! மதிவாண! நும்மிருவர்க்கும் யாங்கள் எமக்குள்ளே மணவினை செய்து முடிக்க வேண்டுமென்று கருதியதற்கேற்ப ஆலவாய்ப் பெருமானடிகளருளினால் நீவிரிருவருங் காதலுறுவீராயினீர். காத லில்வழிச் செய்யுங் கடிமணங் கடியப்படுவதொன் றன்றோ? 'நும்மிருவர்க்கும் எங்கே மெய்க்காதல் நிகழாது போய்விடுமோ?' என்று ஏங்குவேன் வயிற்றில் தனிப்பெருங் கடவுளார் பாலைப் பெய்தனர்" என்று சொல்லிக்கொண் டிருக்குமளவில், 'மதிவாணன் தாதையார் தஞ்சைவாணர் மதுரைமாநகரம் போந்தனர்' என்ற செய்தி அரசன் செவிகளில் வீழ்ந்தது. உடனே யாவரும் எழுந்தனர். மீனவர் கோமான் மதிவாணனை ஆண்டேயிருக்கும்படி பணித்து விட்டு ஞெரேலென

வெளிச்சென்றனன். அவ்வமையத்துப் படைநின்ற மக ளிருங் கோப்பெருந் தேவியோ டகன்றனர்.

அந்நிலையில் தனித்திருந்த இன்பவல்லி சிறிதுவெரூஉக் கொண்டனளாயினும் அதனை யண்ணல் மதிவாணன் அறியாது மறைத்தனள். சிறிது நேரம் ஒருவரோடொருவர் பேசாது நம்பியும் நங்கையும் வாய்வாளாமை மேற்கொண்டனர். அதன்மேல் மதிவாணன் இன்பவல்லியை யணுகி, "என்னுயிர்க்காதலீ! நீ நிறம் வேறுபடக் காரணமென்ன? எந்தையார் இவ்வாயின் முதலமைச்சராயிருந்துழி, நாமிருவேமுங் குழவிப்பருவத்து நட்பாளரல்லெமோ? அதனை மறந்துகொல் மடவாய்நீ யின்னணம்நாணுவாயாயினை? நீயெனை மறப்பினும் யானுனை மறப்பலோ? அன்புடையாய்!" என்றலும், இன்பவல்லி, குயிலுநாணுறு மினிய குரலில் "தேவ! அங்ஙனம் எண்ணலை, என்னிலை யிற்றென்று புனைந்து கூற வல்லெனல்லேன். நின்னைக் கண்டேன் காதல் கொண்டேன். அவ்வளவே. அதற்குமேல் யானொன்றும் அறியேன்" என்றனள். (எப்பொழுதுபேசுவாளோ)என்றெதிர்பார்த்து அவளது கிளவி வேட்டு நின்ற மதிவாணன் செவியில் அமுதம் பெய்தது போலும் இருந்தன அவள் மொழிகள். உடனே மதிவாணன் "மாதராய்! யாமிருவரும் அரண்மனையினுப்பணுள இளமரக்காவிற்குப் போக ஒருப்படுதியோ?" என்றலும் இன்பவல்லி யெழுந்தனள். அவளைக் கையிற் பிடித்துக்கொண்டுமதிவாணனு மேகினன்.

ஈதிவ்வாறாக தஞ்சைவாணரும் மாவீர வழுதியும் அளவளாவிப் பற்பல விடயங்களையும் பற்றிப் பேசிய

பின்னர் வாணனூர் மன்னவனை நோக்கி "மணவினை முடியுங்காறுந் திரிசிரபுரக் கலகச் செய்தியைக் குறித்து நிகழும் விசாரணையை நிறுத்தி வைக்கலாம். அங்ஙனஞ் செய்தலே நேர்" என்ற அளவில் உசிதனும் ஓமென விணங்கினன்.

அதன்மேல் நாலைந்து நாள்காறும் மணவினைக் குரிய செயல்களே நிகழ்ந்துகொண்டிருந்தன. அரச ஞணையின்படி வள்ளுவராயினர் அரசுவாவின் மீது முரசமேற்றிக் 'கோமகள் இன்பவல்லியின் மணவினை நிகழ்ச்சிக்கு அறிகுறியாக நகரெங்கும் அலங்கரிக்க' என்று முழக்கிச் சாற்றும் முன்னரே, நகருளார் தங் களிப்பிற்கு வெளியறிகுறியாகத் தங்கள் வீட்டு வாயி றொறும் பழமணன் மாற்றிப் புதுமணல் பரப்பினர்; பந்தர் பல வேய்ந்தனர்: தூண்களில் தாறிட்ட வாழை யுங் காய்க்குலைக்கமுகுந் திரடீங்கரும்புந் தெங்கிளம் பாளையுங் கட்டினர்; மயிலெனக் குயிலெனப் பாம் பெனக் கிளியெனத் தோரணம்பல தூக்கினர்; பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும் வைத்தனர்; நறு மணங் கமழு நாண்மலர் மாலைகள் நாற்றினர்.

இனி அரண்மனைவாயிலி னலங்காரத்தையிற்றெனை வெடுத்துரைத்தல் எம்மனோர்க் கியலாதெனினும் ஓராற் ருற் கூறுகின்ரும். முன்வாயின் முகமெல்லாம் முத் தெடுத்தார்; தாமரை வெண்முளைகள் பாய்த்தினர்; மின்வாய மணிக்கலசத்திற் பொற் செந்நெற்கதிர்கள் சூட்டி விளங்கவைத்தார்; பொன்வாழைகளை மரகதப் பைங்கமுகுகளொடுந் தோரணவாயிலில் ஏரணவ நாட் டினர்; ஒன்பான் மணிகளினுங் குயிற்றிய மீனக்

கொடிகள் பல வானத்தசைந்தன. வலம்புரிச் சங்கம் நலம்புரிந்தேங்கின ; மாரியு நடுங்கப் பேரிகை யதிர்ந்தன.

வீதியெங்கும் விழவருவாயின; பதியிலார் வயின் ஞெறுஞ் சுதிபல வெழுப்பிச் சதிநயங் காட்டினர் ; நாடகக்கூத்தியர் ஆடகத்தாக்கிய அரங்கினிலேறி அன்பொடு நடத்தினர்.

இவ்வாறு மதுரைமாநகரமெங்கணும்பொன்னகருநாணியொதுங்கப் பொலிந்திருந்தது; இந்திரன் காமுற்று நாடொறும் வலம்வரும் மருதமா தேவியின் நாட் கமல முகம்போலக், கடலாடை யுடையுடுத்த நிலமகளின் விழி போல, நிலவி விளங்கிற்று.

அரசனுங் குடிகளு மம்ம வேறல
ருரைசெயி னுயிருலா முடல மாவராற்
கரிசறு காவலன் கன்னி மாமணம்
பரசுபு மதுரையம் பதிவ யங்கிற்றே. (24)

ஆறம் அத்தியாயம் மூற்றிற்று

---

## ஏழாம் அத்தியாயம்

---

## வாட்போர்

இவ்வாறு நாலைந்துநாளாய் நகர்ப்புனைவு நிகழாநின்றது. மணவினைக்கென்று குறிக்கப்பெற்ற நாளும் நெருங்காநின்றது. அதற்கு இரண்டுநாள் முன்னரோரிரவு இன்பவல்லி தன் தாய் கோப்பெருந்தேவியொடும் பாங்கிமாரொடும் வெகுநேரமட்டில் உரையாடிக்கொண்டிருந்தனள். தனது அருந்தவப் புதல்

விக்கு எவ்வாற்ருனுமியைந்த நற்றலைவன் வாய்த்தமை பற்றிக் கோப்பெருந்தேவி கொண்ட மகிழ்ச்சிக்கோ அளவில்லை. புடைசூழ்ந்திருந்த தோழியரெல்லாம் இன்பவல்லியின் மணவினையைத் தனித்தனி தங்கடங்கள் மணவினையெனவே கருதி மகிழ்வுற்றனர். அரண்மனையிற் குழைமுகப் புரிசையெல்லாம் களிப்பெனுங் கரையிலாக் கடலு ளாழ்ந்திருந்தது.

அற்றைநாளிரவு இன்பவல்லி துயில்கொளப் போன பின்றை நிகழ்ந்த செய்திகள் இறும்பூதுசான்றன. ஏறக்குறைய நள்ளிரவு நண்ணலும் ஒரு கதவந்திறக்கப்பட்டது; அவ்வாயிலாக நீண்ட வுருவுடையா ளொருத்தி இன்பவல்லியின் பள்ளியறைக்குட் புகுந்தனள்; புகுந்து பக்கங்களி னெரிந்து கொண்டிருந்த விளக்கங்களு ளொன்றொழிய மற்றைய யாவற்றையும் ஞெரேலென் றவித்துவிட்டு இன்பவல்லியி னருகர்ப் போந்து அவள தழகிய திருமுகத்தை யுற்று நோக்கினள்; பிறகு சிறிது போழ்து கழித்து வெளியே போய்விட்டனள். அன்னணமவள் போனவுடனே நால்வ ராடவர் துணி சுற்றிய தாளினர் மெல்ல மெல்ல ஓதைப்படாமல் நடந்து போந்தனர். அன்னார் சிறிது நேரந் தமக்குள்ளே யொன்றும் பேசிலர். மேலுங் கீழும்பார்த்து நின்றனர்; பின்னர்க் கோமகளார் துயிலுறும் கட்டிலினை யடுத்து வந்து அவளது திருமேனிப் பொலிவுகண்டு திகைத்து நின்றனர். அவ்வமயத்தில் ஒருவன் "காலந்தாழ்க்கலிர்" என்றனன். அவன் தான் இவ்வயின் நின்றுளனென்பது பிறர்க்குப் புலப்படாதவாறு இருந்து கொண்டு இந்நால்வரையும் நோக்கி மேற்கூறிய வண்ணங் கூறினன்

போலும். அவ்வாறு கூறக் கேட்டலும் மேற்சொல்லிய நால்வரும் இன்பவல்லியார் கண்வளர்ந்திருந்த மஞ்சத்தினைத் தோளினிற் கொண்டு கதுமென வெளியேறி விட்டனர்.

அந்தோ! கோமகளில்லாத அக்கன்னிமாடம் வறிதே பொலிவழிந்து போயிற்று.

> கண்ணில் யாக்கைகொல்? திங்களில் கங்குல்கொல்?
> அண்ணன் மந்திரி யற்ற வரசுகொல்?
> பண்ணில் பாடல்கொல்? பாரினி னல்லெழில்
> வண்ண மாதர் வயங்கலின் மாடமே. (25)

நீழலினருமை வெயிலின்கட் சென்றக்காலே விளங்குமாறுபோல "மனைக்கு விளக்கமடவார்" என்ற மூதறிவாளர் கூற்றினுண்மை யிப்பொழுதன்றே விளங்குவதாயிற்று. "மனைக்குப் பாழ் வாணுதலை யின்மை" என்றதனுண்மையை யாவரே மறப்பார்? மகளிர் மனைக்கு விளக்கம் மட்டிலேயோ? மகளிரே மனைக்குச் செல்வம்; மகளிரே மனைக்கு அணிகலம்; மகளிரே மனைக்கு மங்களம்; மகளிரே மனைக்குக் காவல்; மகளிரே மனைக்கு மலர்; மகளிரில்லாதவிடம் நுகர்ச்சிக்குரிய பொருள்களனைத்தும் நிரம்பியதோர் தேவமாளிகையேயாயினும் அஃது அழகற்றது கண்டீர்; மற்று மகளிருள்ளவிடம் ஒன்றுமில்லாததோர் கொடும்பாலையேயாயினும் அஃதன்றே அழகு சிறந்து ஒளிரா நிற்கும். மனைநிறைந்தவர் மகளிரே யென்க.

நம்மாதரசி இன்பவல்லியை யெடுத்துச்சென்ற கயவர் நால்வரும் அவர் தந் தலைவனிட்ட ஆணை தவறாது

வெளியே சென்று அரண்மனைவாயில் கடந்து கீழைத் திசையின்கணுள்ள புதுவர் புகுவாயிலாற் புரிசையை யுங் கடந்துபோயினர். அங்ஙனம் போய்ச் சிறிது தூரங் கடந்த பின்னர்ப் போருடை தரித்தான் ஒரு வன் புரவிமீதேறிப் போந்து அவரை விரைந்து செல்லு மாறேயினன். அவருங் கடுகி நடந்தனர். முன்னர் ஒருவன் தீப்பந்தம் பிடித்து வழிகாட்டிச் செல்லா நின் றான். அவ்விரவில் அவர் சென்ற வழியிலுள்ள மரங்க ளிடை நிகழ்ந்த சிற்றொலியும், அடுத்த புதர்களிற் சர சரப்பொலியும், காற்றினலைசையுஞ் சருகுகளினொலியும், அடிக்கடி யிவர்கள் பேசும் பேச்சொலியுமாகிய இவற் றைத் தவிர்த்து வேறோ ரோதையுங் கேட்டற் கிட மில்லை.

இவ்வாறு இவர்கள் தாம் நினைத்தது முழுதுங் கை கூடிற்றெனக் கருதி வாய்விட்டு பாடத் தலைப்பட்ட னர். அப்போழ்தத்தில் ஒரு குளிர்ந்த காற்றும் வீசு வதாயிற்று. பின்னர்ப் போந்த வீரன் எவ்வள வுரப்பி யுரைத்தும் அவர்கள் பாடுதல் தவிர்ந்திலர். குளிர் காற்றும் வரவரமிகுந்தது: சிறு தூற்றலும் தூறத் தொடங்கிற்று. ஆதலின் அவர்கள் மேற்செல்லற் கியல வில்லை. சிறிதுபோழ்து மரங்களி னடியில் நின்றனர். அங்கால்வருளொருவன் குதிரை யேறிவந்த மாயவனைப் பார்த்து "இப்படியிருந்தால் யாந் திருப்பூவணம் போதல் எப்படி யியலும் ?" என்றனன். அதுகேட்ட மாயவன் " அற்றன்று; யாம் முத்தனேந்தல் போய்விடல் வேண் டும். பூவணத்தில் மன்னவற்கு வேண்டிய வுறவினர் பல ருளர். ஆண்டுத் தங்குதல் ஒருவாற்றானும் நேரிதன்று.

குறித்தவிடமே செல்லுக. காலம் போக்கலிர்'' என்று சிறிது வெருண்ட குரலிற் கூறினன். அவனை எதிர்த் துரைக்கலாற்ருத அந்நால்வரும், வாளுறை நிற்றலும், மீட்டுங் கட்டிலை மேற்கொடு விரைந்து சென்றனர்.

அங்ஙனஞ் செல்வுழி வன்காலொன்று முழங்கி யெழுந்தது. அவ்வளவில் துயிற்பெருந்தேவியின் திரு மடிக்கிடந்து கண்வளர்ந்திருந்த இன்பவல்லி துயிலொ ழிந்தெழுந்தனள்; எழுந்து தனது படுக்கை அசைந்து சேறல் கண்ணுற்று வெருண்டு ஒன்றுமுணர்கிலளாய்த் திகைத்துச் சிறிதுநேரம் வாளாதிருந்தனள். பின்னர் அறிவுகூடி யுறுதிபூண்டு நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்துத் தன்னிலைமையிற்றெனத் தெருண்டு தன்பினர்ப் போத ருங் குதிரை வீரனை நோக்கி, “யாரை வீர! இஃ தென்னை! எவ்வயிற் செல்லாநின்றனர் இக்கயவர்? இத் தீயர் என்னைச் சுமந்து சேறல் யாவரதாணை கொண்டோ? ஏனோ இருளினேகுதல்? கரவுகொல்களவுகொல்?—ஐய வீர! நீயுமேன் பேசுகின்றிலை? என்னை யின்னண மெடுத்துச் சேறல் நிற்கு முடன்பாடுகொல்லோ? வாய் வாளாமை மேற்கொண்டதேன்? ஓ! என்னை நின்வீரம்! என்னை நின் ஆற்றல்!—தாதாய்! மாவீர வள்ளால்! நின் வயிற்பிறந்த வெற்கு இதுகொலோ போக்கு! ஐயகோ!'' என்று கூவத் தலைப்பட்டனள்.

இஃதறிந்த அக்குதிரை வீரன் ஓடிப்போந்து இன்ப வல்லியை அண்ணுந்து நோக்கி, “அம்மே அஞ்சலை, நினது மணவினை கருதியே இச்செயல்'' என்றனன்.

இச்சொற்கள் தன் செவிப்படுதலும் இன்பவல்லி “நன்றே இச்செயல், மிகவும் புதிதுகாண்! இதுகாறும்

எவரும் புரிந்திடாச்செயல்?" என்று நகையாடி "யாரை நீ?" என்று வினவினள்.

அதுகேட்ட மாயவன் "இச்செயல் நன்றாமாறு பின்னர்க் காண்பை; ஆதலின் இதனை எள்ளற்பாலை யல்லை; என்னையின்னனென்று கடிதினினுணர்வை" என்று விடுத்தனன்.

விடுத்தலும் இச்செயலினைக் குறித்துக் கருதுவான் புக்க இன்பவல்லி கவலையங் கடலுண்மூழ்கி அசை வற்றிருந்தனள். மாயவன் வஞ்சங்களு ளொன்று முணராத அம்மடவரல் என்செயவல்லள்! சுவற்கா வாளரும் துணைவிற் செல்லா நின்றனர். 'அந்தோ நம் முதவிகொண்டே நம்மினத்தினர்க்குத் தீங்குபுரிகின்றான் காண்; இனி யிப்பதகற்கு உதவுவேமல்லேம்' என்று கருதி நளிர் கங்குலாகிய நங்கையு மேகினள். இத்தீச் செயலுணர்ந்த உலகமாதேவியுங் கீழ்த்திசை யொண் முகஞ் சிவந்தனள். புள்ளெல்லாம் அரற்றின. மரங் களும் கண்ணீர் சொரிந் தழுதாங்கு பனித்துளி சொரிந்து காற்றினொலித்தன. திருப்பூவணமும் அணித் தாயிற்று.

அவ்வமயத்தில் இவுளிமேற்கொண்டா னொரேந்தல் எதிரே போதரக்கண்ட மாயவன் கரவுநெறி யொன்று பற்றிக் கடுகத் தலைப்பட்டனன். எதிரே போந்த வீர னும் ஏதோ சிந்தித்துத் தோட்சுமையாளரை யேறட்டுப் பார்த்துப் 'பிணங்கொல்' என் றயிர்த்தனன். அது போழ்தின் இன்பவல்லியு மெழுந்தனள். உறவினர்க் காண்பான் முதனாட் பூவணம்போந்து வழிநாட்காலைப் புரவியிவர்ந்து உலவுறும் மதிவாணனும் அது கண்டு

உடனே காலந் தாழ்க்கலன் அத்தீயர் பாற்சென்று "மேற் சேறலீர், நின்மின்" என்றனன்.

என்றது செவிப்பட்ட மாயவன் தன் குதிரையைத் தூண்டி விரைந்துபோந்து தனது வாளினை யுறைகழித்துக் கைப்பிடித்துக்கொண்டு "இவர்களைத் தகைத்து நிறுத்துவோன் நீ கொலோ?" என்று சொல்லி மதிவாணன்மீது பாய்ந்தனன். அங்ஙனம் பாய்ந்தவளவில் அதனை யெதிர்பாராத மதிவாணன் சிறிது பின்னிடைந்து தனது வாள் கைக்கொண்டு முனைந்து நின்றனன். பரியிவர்ந்த வீரர்க ளிருவர்க்கும் வாட்போர் நிகழத் தொடங்கிற்று.

மாயவனோ நன்கு முதிர்ந்து தடித்துப் பருத்துக் கொழுத்த யாக்கையன்; நமதண்ணல் மதிவாணனோ திட்பஞ்சான்று செறிந்து சிறுத்த வுடலினன். இவ் விருவரும் வாட்போரிற் றலையிடலும் சுவற்காவாளர்கள் நால்வரும் வழிகாட்டி யொருவனுமாகிய அவ்வைவரும் போரின் முடிவு காண்டல் வேட்டு மேற் செல்லாது நின்றுவிட்டனர். கட்டிலுங் கீழே யிறக்கி வைக்கப் பட்டது; அதன் கண்ணே வீற்றிருந்த நங்தேவி இன்ப வல்லியும் எழுந்து அதினின்றும் இழிந்து வாட்போர் கண்டு நின்றனள்.

மாயவனுடன் போந்த அவ்வைவரது அநுதாபம் அண்ணல் மதிவாணன்பாற் சென்றதாயினுந் தத்தங் கருத்தில் மாயவனே வேறல் வேண்டினர். இன்பவல் லியோ வாட்போர் செய்குநருளொருவன் தனது இன் பத்தலைவன் மதிவாணன் என்றுணர்ந்து சிந்தை கலங்கி மதிமாழ்கி யுழன்றனள்.

இருவர்வாட்களும் ஞாயிற்றி னிளங்கதிரிற் சுழற் றப்படுந் தோறும் மின்னி யொளிவீசின. இருவர் புரவி களும் பின்னும் முன்னும் போவதும் வருவதுமாயிருந் தன; ஒருவரையொருவர் தாக்கினர்; இருவருங் குறிதவறாது வாளையோச்சி யெறிந்தனர்; இருவர் வாளெறியும் அவ்வவர் பகைவர் பரிசைகளிற் பட்டன வேயன்றிப் பகைஞர் மேனியிற் பட்டில. இன்னணம் நெடுநேரம் வாட்போர் நடந்தது. இடையில் மாயவன் புரவி காவதத் தூரத்திற்குமேல் நடந்த இளைப்பினாற் சிறிது தளர்ந்தது. அதுகண்ட மாயவன் தனது பரியை விட்டிழிந்து மதிவாணன் மீது மீட்டும் பாய்ந் தனன். இதற்குள் மதிவாணனும் தான் புரவிமீதி ருந்தே போர்புரிதல் நேரிதன்றெனக் கருதிப் பரியினின் றிழிந்து நின்றனன். மீட்டுமொருமுறை இருபெரு வீர ரும் வாட்போர் பிடித்தனர்.

இன்பவல்லிக்கோ மதிவாணன் குதிரையினின்றி ழிந்துபோர்புரிதல் அறிவுடைத் தன்றென்பதெண்ணம். என்செய்வாள்? சிறிது போழ்து வாளாதிருந்தனள். இதற்கிடையில் மாயவன் வெகுளிமீக்கூர்ந்து மதிவாண னுடைய தலைவிலாத்தாள்கைகளி னெருங்கே இடையீ டின்றி பன்முறை வாளெறிகண்டனன். அவ்வமயத் தில் அமைந்த சிந்தையனாகிய மதிவாணன் காலப்போக் கின்றித்தனது உடனலத்தாற் செவ்விதோன்றத்தாவியும் விலகியும் எழும்பியுங் குதித்தும் கைந்நலங்காட்டித் தன் னைப் பாதுகாத்து நின்றனன்.

இவ்வாறு வெகுநேரமாகப் போர் நிகழ்தல்பொறுக் கலாற்றாத இன்பவல்லி யுற்றமெய்ப்பாடுகெட்கோ அள

வில்லை. தலையையும் கைகளையும் ஏதோ வலிப்புடையாள் போல் அடிக்கடி சாய்த்தும் அசைத்தும் நின்றனள்; ஏதோ பேசினள்; முகஞ் சுளித்தனள்; யாக்கை குன்றினள்; தன் விருப்பத்திற் கெதிராக வாட்போர் முடியுங்கொலென்றையுற்றனள். இன்னும் என்னெல்லாமோ பாடுகள் பட்டனள். இவ்வாறு துயருழந்து அலம்வரும் இன்பவல்லி மதிவாணன் மிக்க அபாய நிலையிலுள னென்று கருதிப் பேதுற்றுத் தன் ஆருயிர்க்குரிசிலது புரவிமீதிருந்ததோர் குற்றுடைவாள்கைக் கொடுபோந்து மாயவன் தாள்களுளொன்றைநோக்கி விசையுடனெறிந்தனள். உடனே மாயவனும் இடக்கால்துணிந்து ஓவென்றலறித்தரைமிசை வீழ்ந்தனன்.

வீழ்ந்த மாயவன் "என்னை யிக்கோலங்கண்டவர் யார்கொலோ?" என்று சொல்லி யெழுந்து திருமினன், திகைத்தனன், மீட்டும் வீழ்ந்தனன். "ஐயகோ! யான் 'எனக்கு என்னுயிரினு மினியள்' எனக்கருதி மகிழ்ந்திருந்த இன்பவல்லியோ எனக்கிடரிழைத்தாள்! நன்று! நன்று!!—அந்தோ! இன்பவல்லீ! நீ என்னை நோக்கி 'மாயவ! யான் உன்னிடத் தன்பிலேன் கண்டாய்' என்று கூறியிருப்பையேற் பேதையேன் இத்துணை இதன்கண் தலையிட்டிருக்கமாட்டேன் காண். என்னழிவிற்கு நீயே பெருங்கருவி. நீ யிப்போழ்தத்தில் எனது தாளைத் துணித்ததோ ரழிவன்று; மற்று இதனுடன் என் நெஞ்சையுந் துணித்தனை; உள்ள முடைந்தேன், அழிகின்றேன்.—ஐய! மதிவாண! இவ்வாறு யான் காலொடிந்து வீழாதிருப்பினும் நின் வாளிற்கு இரையாயிருப்பேன் கண்டாய். நீ இன்பவல்லியுடன் கூடி

மணந்து இன்புற்று வாழ்க. யான் சாகின்றேன். இறைவனே! கடவுளே! என்பெருமானே! கணக்கற்ற தீங்கிழைத்த கயவனேற்கு முய்வுண்டோ?'' என்று கூறி மூர்ச்சை போயினன். உழையிருந்தா ரனைவரும் ஒவென்று கூவியழுதனர். நேரமாகவாக மக்கள் கூடினர், இடையிற் சுவற் காவாளரும் வழிகாட்டியும் யாண்டோ கரந்தோடிவிட்டனர்.

மதிவாணன் நிலமிசை வீழ்ந்தவன் மாயவனேயென் பதுணர்ந்து பெரிதுந் துயர்ப்பட்டுப் பெருமூச்செறிந்தனன். மாயவன் மேற்கூறிய மொழிகள் சொற்றபின்னரே இன்பவல்லி தன்னைக் களவாடிக் கொணர்ந்த குதிரை வீரன் மாயவனென்று தெளிந்தனள். தெளிந்த பின்றைத் துன்புற்றுக் கண்ணீர் சொரிந்தனள். அதன் மேல் தன்னுயிர்த் தலைவனை யேறட்டுப்பார்த்து, "அண்ணலே! யான் புரிந்த இச்செயல் யான் பிறந்த குலத்திற்கு மாசுவிளைத்தது; என் தேவன் வீரத்திற்கோர் இழுக்கு விளைத்தது. எனக்கும் பழிபாவம் விளைத்தது; என் உறவினற்கும் ஊறு விளைத்தது. இக்கொடுஞ் செயலை மேற்கொண்ட பாவியேனையும் மணந்து கோடற்கு ஒருப்படுதியோ?—அறிவுடையாய்! அன்புடையாய்! அறியாது செய்தனென்! இப்பிழை பொறுத்தெனை யாண்டருள்க'' என்று கூறி வணங்கினள். அவ்வளவிற் சிறிது கண்ணீர் துளித்த மதிவாணன் "காதலீ! மயங்கலே! நின் துணிவிற்கு வியப்புறுகின்றேன். தற்காப்பினிமித்தம் நீ இன்னணஞ் செய்தனை. மனமில் வழிப் புரிந்த செயற்குப் பாவமுமில்லை பழியுமில்லை; எனினும் மனமட்டில் துயருறுநிற்கும். அஃது அதற்

கியற்கை கண்டாய்" என்றுரைத்து உழையிருந்த மக்க ளுதவி கொண்டு மதிவாணன் மாயவனை வாரியெடுத்து இன்பவல்லியைக் கொணர்ந்த கட்டிலின் மீதிருத்தி மதுரை மாநகரத்தின்கணுள்ள பெருமருத்துச் சாலைக்கு உடனே யனுப்பினன். அம்மாயவற் குதவியாக மக்கள் பலர் மதிவாண னாணையின் மேல் உடன் சென்றனர்.

அதன்மேற் குதிரையேற்றங் கைவந்த இன்பவல்லி மதிவாணனது கலிமாவின் மேற்கொள்ளலும் மதிவா ணன் மாயவன் புரவிமேற்கொண்டு இருவருமாகப் பூவணம் போயினர். பின்னர் மாலைப்போழ்தத்து வேறு பரிகள் புனையப் பெற்றுப் போதரலும், அவற்றின் மீதேறி நம்பியும் நங்கையும், பலர் புடைசூழ்ந்து ஓடிவர, மதுரையம்பதிக்குட் புகுந்தனர்.

நாளத் தாமரை நங்கை யெனத்தக்காள்
வாளிற் றன்றலை வன்பகை வோனது
தாளை வீசுபு தான்றுணி செய்யுமா
றாளு மன்பின் முதிர்ச்சியு மென்கொலோ! (26)

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று

---

எட்டாம் அத்தியாயம்

## குற்றவாராய்ச்சி

இதற்கிடையில் இன்பவல்லி காணுமற்போனது முதல் மாயவன் காறுணிந்து வீழ்ந்ததுகாறும் யாவு முணர்ந்த மாவீரவழுதி துக்கமும் வியப்பும் மகிழ்வும் ஒருங்கெய்தி மகளது வரவையும் மருகனது வரவையு மெதிர்பார்த்து நின்றனன்; நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெண்ணி யெண்ணிப் பல்வகை மெய்ப்பாடுகளு முற்றனன்.

"சிறைக்கோட்டத்தின்கணிருந்த மாயவன் என்னை ணம் அதனிற்றப்பி வெளிப்போந்தனன்? எவ்வாறு அவன் அரண்மனையிற் கன்னிமாடம் புக்கனன்? கன்னி மாடங் காவலின்றி யிருந்ததுகொல்? என்குலவிளக்கை அவன் எவ்வழியானெடுத்தேகினன்? எப்படி புரிசை கடந்தனன்? ஓ! மாமாயம்! இத்தகைத்தீயோன் இவ் வுலகின்கணிருத்தற்கவிலன்! அறிந்தேன், அறிந்தேன் யாவும். சிராமலைக் கலகமுமிதுபற்றியோ? இன்பவல்லிக் கியைந்த நற்றலைவன் மதிவாணனேயன்றி மாயவனே? மாயவனே வாண் மனைவியர் வயினும் பிறவாது வைப் பாட்டியர் வயிற்பிறந்த போலி மைத்துனர் குழாத்தி னுள் ஒருவனுவான். இவற்கோ என் கோதிலாமணியை யளிப்பது? நன்றாயிருந்தது!—இவனைக் குழவிப் பருவ முதலெடுத்து வளர்த்து வந்தேன். இவனை யென் தானைக்கு உதவித் தலைவனாக்கினேன். இவனெற்குச் செய்தவுதவி யிதுகொலோ? வளர்த்தகடா மார்பிற் பாய்ந்ததே!"—என்ற மன்னவன் சொல்லி வாய்மூடு

முன்னர்த் தஞ்சைவாணரும் வாய்மையாளரும் போந் தனர். உடனே நீதியந் தலைவர் சொக்கநாதரும் தானைத் தலைவர் வேலவரும் ஊர்காவற் றலைவன் முருகனும் போந்தனர்.

அதன்மேல் அரசன் அவர்களனைவரையும் அழைத் துக்கொண்டு அத்தாணி மண்டபத்துற்று அரியாதனத் தமர்தலும் யாவரும் வீற்றிருந்தனர். விருணவைத்தி யர், துணியுண்ட தாளிற்குப் பிரதியாக மரத்தினியன்ற தோர் கால்செறித்துச் சிகிச்சை செய்யப்பெற்ற மாய வனை, ஒரு பஞ்சணை வேய்ந்த கட்டிலிற்கொணர்ந்தனர். மாயவன் படுத்தவண்ணமே மன்னவனை வணங்கினன். அவனை யந்நிலையிற் கண்ட காவலன் மனமிளகிக் கண் ணீர் வடித்தனன். எவர்க்கும் வளர்த்த வாஞ்சை போமோ?

அன்புக் குரியா ரருந்தீங்கு செய்தக்காற்
றுன்புக் குருகுவராற் றொன்மைவழிப் பெரியோர். (27)

அதன்மேற் சொக்கநாதர் மாயவன்மீது ஏற்பட்டுள குற்றங்களனைத்தையும் ஆராய்வான் புக்கனர். அவ் வமயத்தில் மாயவன் அவையின்கணிருந்தார் யாவரை யும் இருந்தவண்ணமே கைகூப்பிவணங்கிக் கூறுவான்:

"பேரறிவாளர்காள்! யான் கூறுவனவற்றைத் திரு வுளம்பற்றி யருளல் வேண்டும். யான் இளமைதொட்டு வழுதியர் பிரானால் வளர்ந்து வந்தேன். அரசரும் என்பால் அளவிறந்த அன்பு பாராட்டி வந்தனர். அவ ரான் இத்துணையன்பு பாராட்டப்பெற்ற யான் ஏன் அவர்க்கு மருகனாதலு மியலாதென்றெண்ணினேன். எண்ணியவாறே யொழுகுவான்புக்குக் கோமகள் இன்ப

வல்லியோடும் அடிக்கடி பேசிக் களித்து வந்தேன். எனினும் அவனிடத்து யான் என்மணவினைக்கருத்தை இது காறும் வெளியிட்டேனல்லேன். அமயம் நேர்ந்துழி வெளியிடலாமென்றிருந்தேன் பேதையேன். அவளிடஞ் சென்றபோதெல்லாம் அவள் என் வரவினை விரும்பிலள்போலாதல் வெறுத்தனள் போலாதல் காட்டிக் கொண்டிலள். ஆகவே இன்பவல்லிக்கு என்மீது அன்பிருக்கலாமென்று துணிந்து மனப்பால் பருகி மகிழ்ந்தேன்.

இங்ஙன மிருப்புழி அரண்மனைக்கண் அடிக்கடி மணவினைப்பேச்சு நிகழ்ந்தது. அப்போழ்தத்தெல்லாம் என்னைப்பற்றி யெடுத்துரைத்தார் எவருமிலர். 'யானோ கல்வி நலமிலாக் கசடனுமல்லேன்; புந்தி நலமிலாப் புல்லனுமல்லேன்; வீரநலமிலா வீணனுமல்லேன். என்னுயர் வனைத்தும் இறைவரும் அறிவார். அறிந்திருந்தும் என்னையேன் அவர் தம்மருகனுக்கோடல் குறித்திலர்? இனி இன்பவல்லியும் என்பா லன்புடையளாயின் என்னைப்பற்றி யேன் அவள்தன் பெற்றோரிடம் எடுத்துரைத்திலள்?—ஓ! நாணம்போலும்' என்று கருதிச் சின்னாள் கழித்தேன். எனினும் என் மனம் அமைந்திற்றலது. இவ்வாறு ஒருவாற்றானும் பொறுக்கலாற்றேன் தவிப்புழித் தஞ்சை வாணனூர் மகன் மதிவாணற்கு இன்பவல்லியைக் கனலி சான்றாயளிப்பதோர் பேச்சு அரண்மனைக்கண் நிகழ்வதாயிற்று. என்செய வல்லேன்! உள்ளங் கலங்கினேன். இன்ப வல்லிபா லெனக்குள வன்பு துன்பப்பெருங் கருவியேயாயிற்று. உடனே 'எவ்வாற்றானும் மதிவாணனைத் தொலைப்பல்' என்று ஒருறுதி

பூண்டயான் காலந்தாழ்க்கலேன், ஈண்டை மந்திரியார் வாய்மையாளரிடம் பொய்சொல்லிச் சின்னாள்விடுமுறை பெற்றேன். அவ்வாறு விடைபெற்ற யான் அவரிடஞ் சொற்றாங்கு முளரிமலை செல்லாது, திரிசிரபுரஞ்சென்று மலையரண் காக்குங் காலாட்படைஞரைத் தூண்டிக் கலகம் விளைத்தேன். விளைத்துழி யான் எதிர்பார்த்த வண்ணமே மதிவாணன் கலகமடக்குவான் தண்டெடுத்துப் போந்தனன். போந்துழிக் 'கரந்து நின்று தீவழியாலேனும் மதிவாணனைக் கொன்றுவிடுவது' என்று துணிந்து அப்புன் செயல் புரிய மும்முறை முயன்றேன். அம் முயற்சிகளனைத்தும் பயனிலவாயின.

அவனும் யானே யிக்கலகத்திற்கு முழுமுதற் றலைவனுமாறுணர்ந்து பல்வகை நியாயமுங் காட்டித் தன்றுதையர்க்கு நிருபம் போக்கினன். அதனை யிடையே தடுத்துக் கிழித்துத் தீமடுப்பா னெண்ணி முயன்றேன். அஃதும் பயனின்றிக் கழிந்தது.

இனியாண்டையிருத்த லடாதென்றறிந்து விரைந்து மதுரை போந்தேன். போந்த இரண்டு நாளைக்கெல்லாம் மதிவாணன் மணவினை நிமித்தம் மதுரை வந்தெய்துவானெனன் றுணர்ந்தேன். 'இவ்விடத்திலாயினும் அவன் வந்துழி அவனைச் சமனூருய்த்தல் வேண்டும்' என்றெண்ணி அவன் வருகையை எதிர் பார்த்திருந்தனென். அவனும் ஒரு ஞான்றை நாளந்திக்காலைப் புரவியேறிப் போந்தனன்.

இதற்கிடையிற் சோழன்வந்தானில் என் நண்பருளொருவனை ஓராண்டிபோல வேடம் புனைந்திருத்தி அவற்கு மதிவாணனைக் கொல்லுமாறு ஆணையிட்டிருந்

தேன். அவனும் மதிவாணனைக் கண்டு கொல்லச்சென் றவன் அவனது இசைநலத்தி லீடுபட்டு மயங்கிக் கொல் லாதோடி வந்து விட்டனன். என் செய்வேன்! அது வுங் கைகூடாது போயிற்று.

அதன்மேல் மதிவாணன் தான் மதுரை வந்த அற்றை ஞான்றே பாய்மா விவர்ந்து வெளியிற் சுற்றி நகரின் புறக்காட்சிகள் காணச் சென்றனன். சென்றவன் திருமிப் போதரும் நெறியிற் கயவர் பல்லோரை யமைத் துப் பல்லாற்ரானும் இடர்விளைப்ப வுன்னினேன். அவையிற்றினுள் ஒன்ருனும் அவ்வெழிலுடைக்குரி சில் வீழ்ந்திலன். என் முயற்சிகளெல்லாம் மேற் கூறியாங்கு வீணுதல்கண்டு மயங்கினேன்.

நடுவிற் குற்றவாராய்ச்சி கருதி என்னைக் காவற் சிறையகஞ் செறிப்பான் முருகன் முதலாயினுர் முயன் றனர். புலவர்மகள் கயற்கணியை யான் காதலித்தேன் போல நடித்தேன்; என் உட்கருத்து இஃதெனப் பிறர் ஐயுருவண்ணம். அங்ஙனம் நடிப்புழி ஊர்காவலருளொ ருவன் போந்து புலவர் வீட்டில் என்னைத் தேடினன். அஃதுணர்ந்த யான் அக்காவலனை வாள்ரனெறிந்து கொன்றேன்.

கோன்ற பின்னர்த் துடிக்குநெஞ்சினேன் துனைந்து கூத்தியர்குன்ற முற்றனென். ஆண்டும் காவலர் கடுகித் துருவினர். அப்போழ்தினிற் பறையர் கோலங்கொண்டு வெளிப்பட்ட வென்னை அன்னுர் கைப்பற்றிச் செல்வுழி அவரை வேருென்றைக் கவனிக்க விடுத்து யான் ஓடி மாடக்குளத்தினு ளிறங்கி நீர்மடையிற் புகுந்து ஓவின் கீழ்த் தங்கினென். தங்கியவழிக் காவலரு ளொருவனு

முடன்புகுந்து என்னை யண்மலுங் குந்தப் படையா லவனைக் குத்தியுந்தினேன்; அவனும் இறந்து வீழ்ந்தனன்; பின்னர்க்காவலர் நாராசத்தாற் குத்தியபுக்கனர்.புகலும் மடையின் மறுபுறத்தால் வெளிப்பட்ட வென்னைப் பற்றி விலங்கிட்டுச் சிறைக்களத்திட்டனன் முருகன்.

சிறைக்களத் திருந்தேற்கு வயிற்றெரிச்சல் மேலிட்டது; அழுக்காறு தலைக்கொண்டது; எவ்வாற்றானும் வெளிச்சேறல் கடைப்பிடித்தேன். சிறைக்களத்துற்றுத் தொழில்புரிவா னொருவனிடம் வலிய இருப்புத் தடியொன்று பெற்றுச் சாளரத்தினுள்ள இரும்புக் கம்பிகளுளொன்றை வளைத்தேன். வளைத்தலும் புரையினின்றும் கம்பியினொருமுனை வெளிப்போந்தது; போதரலும் அதனை வலிகொண்டீர்த்துப் புலத்தினெறிந்தேன். மீட்டுமொரு கம்பியை அன்னணமே வளைத்துப் பறித்து இடைவெளி படைத்துக்கொண்டு அவ்வழியாய்ச் சாளரத்தினேறிக் கீழே பார்த்தலும் என்னண்பரு ளொருவன் நூலேணி வீசினன். அது பற்றிச் சிறைக்கோட்டத்தினின்றும் வெளிப்பட்டேன்.

அங்ஙனம் வெளிப்பட்டு மறைந்து அரண்மனையுட் பெண்டிர் கோலத்திற் புகுந்து கன்னிமாடஞ் சென்று ஆண்டைத் துயின்றிரா நின்ற இன்பவல்லியை, என்னுயிரமுதை, நால்வருதவிகொடு கைப்பற்றிப் பூவணங் காறுஞ் சென்றேன். சென்றுழி மதிவாணனை, என் கூற்றுவனை, எதிரேகண்டு அவன்மீதுபாய்ந்து வாளோச்சுதலும், எப்பொழுதும் எதற்குஞ் சித்தனாயிருக்கு மவ்விளைஞன் சிறிதேனும் வெருளாது வாள் கைக்கொண்டு நின்றனன்.

அவ்வளவில் யாமிருவேமும் வாட்போர் புரிந்தேம். புரிந்துழி இன்பவல்லி என்னை யின்னனென் றெய்யாள் குற்றுடை வாள் கொண்டு எனதிடத்தாளைத் துணித்தனள், வீழ்ந்தேன். இஃதே யென் கதை. நீவிர் செய்வன செய்ம்மின். யான் சாதற்கு ஒருப்பட்டேன். ஐயன்மீர்! வந்தனம்."

என்று சொல்லித் தன் படுக்கையிற் சாய்ந்தனன்.

இவ்வாறு மாயவன் வகுத்துக் கூறிய வாய்மொழி கேட்ட மாந்தருட் சில்லோர் வியப்படைந்து மாயவனை அவன் வன்மை பற்றிப் புகழ்ந்தனர்; சில்லோர் அவன் புன்மைபற்றி அவனை யிகழ்ந்தனர். இவ்வணம் யாவரும் பேசவே உருத் தெரியாதவாறு அம்மண்டபத்தன்கண் ஓரொலி யெழுந்தது. குற்றவாராய்ச்சி செய்வான் புக்க பெரியோர்கட்கெல்லாம் அநுகூலமாக யாவற்றினையும் மாயவன் தானே ஒப்புக்கொண் டிணங்கி விட்டனன். இனியவர் செய்யக்கடவது மென்கொலோ?

இந்நிலையில் மதிவாணன் அவைக்களத்துப் பொள்ளெனப் புகுந்து மன்னனை வணங்கி நின்றான். அவ்வளவிற் பல்லோர் எழுந்து நிற்ப, வழுதியர்பிரான் வாழ்த்தெடுப்ப, அமைச்சரும் பிறரும் புகழா நின்றனர். மற்று மதிவாணன் ஆயிடையிருந்த மாயவனது நிலையைக் கண்ணுற்றுக் கண்ணோடிக் கண்ணீர் சொரிந்து தழுவிக் கூறுவான்: "மாயவ! எத்தொழிலையும் முடிக்கவல்ல பேராற்றலுடையாய்! ஆழ்கருத்தாள! என்னை நின்வன்மை! என்னை நின் துணிவு! என்னை நின் மனத்தின் றிட்பம்! என்னை நின் அறிவின் றெட்பம்! நின்னொடு யான்புரிந்த வாட்போரின்கண் யான் கண்ட நின் கைந்

நலமென்னே! நொடிப்பொழுதினுள் எப்படியுந் திரும வல்ல நின் மெய்ந்நலமென்னே! இன்று காலையன்றே யான் நின்னை யெதிர்த்துப் போர் செய்தது? நீ வீழ்ந்த பின்றை நின் கூற்றினானும் உழையிருந்தார் கூற்றினானும் நீ மாயவனென்பது உணர்ந்தேன். நின் கரவுகோலம் என்னையும் மயக்கிற்று. ஐய! மாயவ! யான் நின் வீரங் கண்டு பேருவகை பூவா நின்றேன். என்னால் நினக்கு நேர்ந்த தீங்குகள் எவையே யாயினும் எத்துணையவே யாயினும் அவையிற்றைப் பொருட்படுத்தாது பொறை பாராட்டி மறத்திகண்டாய்'' என்பதுகேட்டமாயவனுங் கண்ணீர் சொரிந்து வாய்விடுத்தழுதனன்; ஆயிடையிருந் தாரனைவரும் மதிவாணனை நன்குமதித்துப் பேசிக்கைம் முழக்கஞ்செய்து களிகூர்ந்தனர்.

இதுநிற்க, நீதியந்தலைவர் சொக்கநாதர் எழுந்து மாறர் பெருமானை நோக்கி, "ஐயனே! யாம் மேற் கொண்ட குற்றவாராய்ச்சி மிக வெளிதின் முடிந்தது காண். மாயவனும் ஒன்றையு மொளித்தலின்றி யாவற் றையு மொத்துக்கொண்டனன். அவன்மே லேற்படுங் குற்றங்களாவன: கலகஞ் செய்தல், கொலைமுயற்சி, குறியே டழிவுமுயறல், கொலைதூண்டல், கொலை, சிறை யினின்றோடல், ஆட்களவு முதலியனவாம். தண்ட நூலிற்கூறியாங்கு, அரசனொடுமுரணிக் கலகஞ்செய்தார் வரையினின் றுருட்டப் பெறுவர்; கொலை முயன்றார் பன்னீராண்டு சிறைக்களத் திடப்பெறுவர்; குறியேடு களை யழிப்பான் முயன்றவர் பதிற்றாண்டு காவற் சிறை யகஞ் செறிக்கப் பெறுவர்; கொலை தூண்டினார் ஏழாட் டைச் சிறையீடு பெறுவர்; கொலை புரிந்தார் தாமுந்

கொல்லப்படுவர்; சிறையினின்றுந் தப்பியோடினூர் * நிலமகட்குத் திருமார்பு நல்குதல் வேண்டும்; அல்லாக் கால் †இந்திரநிலை பெறுதல் வேண்டும்; ஆட்களவு செய் தார் கைகுறைப்பவுங் கண் சூலவும் பெறுவர். ஒறுத் தன் முறை யிவ்வாருக, மேற்கூறிய குற்றங்கள் யாவும் ஒருவனே செய்தனவாமாதலிற் 'பலதீட்டிற் கொரு முழுக்கு' என்ருற்போல ஒருவகையா ஞெறுத்தலே ஏற்புடைத்தாகும். 'தலைக்கு மிஞ்சின தண்டமில்லை' யாதலின் அஃதேதமாயவன் றிறத்து விதிக்கப்படுவதாகும்" என்று கூறி நின்றனர். இதுகேட்டு மாயவன் நெஞ்சங் கலங்கிலன். உயிர் வாழ்க்கை அவனுக்கு வெறுப்பு விளைத்து விட்டது. அவன் தான் துன்பப் பெருங் கட லில் வீழ்ந்து விட்டதாகவும் இன்னுஞ் சிறிது போழ்தி னுள் ஆழ்ந்தழிந்து விடப்போவதாகவு மெண்ணினன்.

பின்னர் மாயவன் ஆவயினிருந்த நீதியந்தலைவரை நோக்கி, "ஐயரே! நுந்தம் நடுவுநிலைமை குன்ருத் தக வுடைமைக்குவவாநின்றேன். மற்று, நீவிர் இடும் அத்தண்

* நிலமகட்குத் திருமார்பு நல்குதலாவது குற்றவாளி யின் இருகைகளையு மிருவர் பிடித்துக் கொள்ள, அவன் கால்களிரண்டையும் வேறிருவர்பிடித்துக்கொண்டு,நால்வரு மாய் அவனை யூசலாட்டி அவன்மார்பு தரையுறத் தாக்குமாறு மோதியடித்தலாம்.

† இந்திரநிலை பெறுதலாவது குற்றவாளியாக்கை யெங் கணும் எரிகொள்ளியாற் சுடுதல்; ஆயிரங் கண்களுடைய இந் திரன்போல உடலெங்குஞ் சுடுபுண் பலவுறுதலின் இப் பெயர்த்தாயிற்று. முற்காலத்து ஒறுத்தல் வகைகளிற் பல இக் காலத்தோர்க்கு மிகக் குரூரமாய்த் தோன்றுதலியல்பே.

டத்தை இத்தீயேற் கிசையுமாறு சிறிது மாற்றி யருள்க. அஃதாவது யான் திருப்பரங்குன்றமேறி வரைபாய்தலே" என்றனன். வேலவர் "இதனின் வேறு வழியில்லைகொல்?" என்றனர்.

அவ்வமயத்தில் ஊர்காவற்றலைவன் முருகனெழுந்து, "ஐயன்மீர்! நந்தம் மாயவன் என்ன தீங்குக ளியற்றியிருப்பினும், அவன் அரசற்கு ஓராற்று ணுறவினனாதலானும், தன் குற்றங்களைத் தானே யொப்புக்கொண்டனனாதலானும், மெய்ம்மொழிப் புலவர்மகள் கயற்கணியைக் காதலித்துளனாதலானும், புலவரும் மாயவன் தமக்கு மருகனாதலைப் பெரிதும் விழைகின்றனராதலானும், யாவற்றையுங் கருதி நாம் ஒரு முடிவு செய்யலாம். அஃதாவது நஞ்செல்வக்கோமகள் இன்பவல்லியின் திருமணத்தோடு புலவர்மகள் கயற்கணியின் மணவினையையும் ஒருங்கு முடித்தலேயாம்" என்றுரைத்தனன். முருகன் கூறியதே தனக்குமுடன்பா டென்றனன் மதிவாணன். உடனே மன்னவனாணையாற் புலவர் வீட்டிற்கோ ரேவுலன் சென்றனன்.

இதற்கிடையிற் சொக்கநாதர், "அறிவொளி சான்ற ஐயன்மீர்!

நீதி யாகவு நேர்மைகுன் றாமலு
மேதை யேனும் மினிதறி வுற்றபின்
றீதொ றுத்தவிற் செம்மை பிறழுதல்
பேதை மார்செயல் பேசிற் பழுதரோ. (28)

செவ்விபெறு நியாயநனி செலுத்துழியாங் கண்ணோடி
யொவ்வொருவர்க் கொருநீதி யுஞற்றுதலு மறனேயோ?

வாய்திறந் துரைமின்'' என்று கூறினர். அதன்மே லெவரும் பேசிலர் மோனவதம் பூண்டனர்.

பின்னர்ச் சிறிது சிந்தித்த வேலவர் "மாயவன் என்ன தாஞ் சாத்தக்க குற்றங்கள் செய்திருப்பினும்,

*'ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியாமாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை'

*கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்'' (31)

என்று செந்நாப்போதார் கூறியிருப்பினும், நாம் சிறிதளவு கருணைகாட்டுதல் செங்கோன்மைபிறழ்தலாகாது

*"கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்!''

குற்றவாளி தன் குற்றத்தை யுடனே யொப்புக் கொண்டு நம் அடியுறையாக வீழ்ந்தபின்றை அவற்கு அருள்புரிதல் அறச்செயலேயாம். அருளிலா அறந்தான் அறக்கொடிது. அருளே அறத்திற் குயிர்போல்வது; அறத்திற்கு ஒளியும் புகழும் அவ்வருளே. ஆதலிற் றண்டக் கொடுமையைக் குறைத்திடுவீர்'' என்று கூறியமையு முன்னர்ச் செந்தமி ழமுதமுண்டு தேக்கெறிந்துஒளிரும் நல்லிசைப் புலவரும் அவைக்களத் துற்றனர். உடனே யரசன் முதலனைவரும் இருக்கைவிட்டெழுந்து மெய்ம் மொழிப்புலவரை வணங்கினர். ஓ! அக்காலங்களிற் செந்தமிழ்ப் புலவர்க்கிருந்த மகிமையும் மதிப்புமென்னே! இக்காலத்தில் அன்னர்படும் அரந்தைகளு மென்னே!

*திருக்குறள்

நிற்க யாவருந் தத்தம் இருக்கைகளி லிருந்தபின்னர் மதிவாணன் ஓடிச்சென்று புலவரைத் தாட்களில் வணங்கலும், புலவர்பிரான் "அண்ணலே! மதிவாண! அருந்தமிழறிஞ! யான்நின் ஞெளிநிலவிற் களிக்குஞ் சகோரப் புள்ளனேயே யென்பதுணர்க" என்று கூறித் தம்மருங் கிருந்ததோர் ஆதனத்து அவனை யிருத்தி, அவைக்களத் துள்ளோ ரனைவருக்குந் தலைவனும் விளங் கும் வேந்தனை நோக்கிக் "கோல் கோடாக் கோமாஅன் வாழிய!—எந்தம் வாய்மொழியுஞ் சிறிதேற் றருள்க:

†"அருளு மன்பு மாருயி ரோம்பு
மொருபெரும் பூட்கையுமொழியா நோன்" பே (33)

நோன்பெனப்படுவது. இதனைமறந்தொழுகுதல் தீவினை புரிதலோ டொக்குங் கண்டாய். மற்று,

†"இன்பச் செவ்வி மன்பதை யெய்த
வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதி ராழி திறப்பட வுருட்"டலே (34)

செங்கோன்மையாவது. என்னை வேண்டியாதல் கண்ணோட்டம் புரிக" என்று கூறியிருந்தனர். அவ்வளவில் வேந்தன், "இதனைக்குறித்துக் கருதித் தக்க நியாயஞ் செய்வல்" என்றெழுதலும் யாவரு மெழுந்தனர். அவையுங் கலைந்தது.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று

---

† மணிமேகலை

## ஒன்பதாம் அத்தியாயம்

# முடிவுரை

இடையில் இன்பவல்லி காணுமற்போனமை காரணமாக மயங்கி யுழன்ற கோப்பெருந்தேவி செவிலிமுதலாயினோரும் கன்னிமாடக் காவன்மங்கையரும் அல்கந்திப் போழ்தினில் மீட்டும் அவளைக் காணப்பெற்று மழுங்குவிழி பெற்ருெளிரும் மக்களெனு, இழந்தமணி பெற்ருெளிரும் நாகமெனுக், கவிழ்த்தகல முற்று மகிழ் நாய்கனெனுக், கழிபேருவகை பூத்தனர். இந்நிலையிற் பாண்டியர் குலதிலகர்மாவீரவள்ளலார்மதிவாணனோடும் ஆயிடைப் புகுதலும், இன்பவல்லி எழுந்து போந்து, "இன்றன்றே யான் மறுபிறவி பிறந்தேன், எந்தாய்! நம் குலக்கிழுக்குநேராதவாறு அங்கயற்கணம்மையென்னைக் காத்தருளினள்" என்று கூறிப் பணிந்தனள்.

அரசனும் அவளை வாரியெடுத்து, ஏனையோரை யேகவிடுத்து, மதிவாணனோடும் இன்பவல்லியோடும், மாயவனைப்பற்றி யுசாவினன். மதிவாணன் தான் அவைக்களத் துரைத்ததையே மீண்டும் வற்புறுத்துரைப்பாருயினுன். இன்பவல்லி தன் தாதையை நோக்கி, "என் தேவன் இதன்கண் யாது கூறியிருப்பினும் அஃதே யானுங் கூறத்தகுவது. என்னுருயிர்க் குரிசில் கூற்றேடும் யான் முரணற்பாலெ னல்லேன்" என்றுரைத்து விட்டனள். "அன்றேல் முருகன் கூற்றன்றே வலியுறுவதாகின்றது; இத்தகைய தீயனையும் இவ்வுலகில் வைப்பதோ?" என்று தனக்குள்ளே முனகினன்வேந்த

னும். "புலவர் நிலை மிகவு மிரங்கத்தக்கது'' என்றான் மதிவாணன். "புலவர் மகள் கயற்கணியும் என்னிடம் சிறிது போழ்திற்கு முன்னே போந்து, தன்னைப் பற்றியுந் தனது தலைவன் மாயவனைப்பற்றியுந் தகவுரைத்து ஏற்பிக்குமாறு மிகவுமிரந்து வேண்டினள்'' என்றனள் இன்பவல்லி. அதன்மேல் வழுதியும் "அற்றேல் நும் விருப்பத்தின் வண்ணமே யாவற்றையும் முடிப்பல்'' என்றான்.

பின்னர் வழிநாட் பிற்பகற் போழ்தத்து மீட்டும் அவை கூடிற்று. யாவரும் மன்னவன் வாய்மொழியை யெதிர்பாரா நின்றனர். தம்மகள் கதி யாதாய்முடியுமோ வென்று துடிக்குமனத்தினர் புலவரும்போந்திருந்தனர், மாயவன்மட்டில் வந்திலன். அப்போழ்து, சொக்கநாதர் எழுந்து புன்னகை புரிந்து, "மாயவன் வரை பாய்தலே அவற்கேற்ற தண்டனை; மற்று, இன்பவல்லியார் மண வினைக் காலத்தில் நம் நாட்டின்கணுள்ளா ரனைவரும் மகிழ் சிறந்திருத்தல் கருதி, முன்னர்ச் சிறைக்கோட்ட முற்றாரும் சிறைவீடு பெருவரன்றே? அவர்போல, நம் மாயவனும் காலறையாய பின்னரும் ஓறுக்கப்பெறாது விடுக்கப்பெற்றனன்'' என்று கூறியவளவில் யாவருங் கைகொட்டி யார்த்தனர். புலவரும் மகிழ்ந்து வேந்தனை வாழ்த்தினர். கலங்கிய வுள்ளங்களெல்லாந்தெளிவடைந் தன. வாடிய முகங்களெல்லாம் மலர்ந்து சிறந்தன. இவ் வினிய முடிவு கேட்டாரனைவரும் ஆலவாயிற் பெருமா னடிகளின் அருட்டிறத்தை வியந்து கொண்டாடினர்.

முன்னர் முருகன் முதனாள் அவைக்களத்தறைந் தாங்கு, புலவர் மகள் கயற்கணியின் மணவினையை

யும் இன்பவல்லியார் மணவினையோடும் ஒருங்கு முடித்தல் வேண்டியும், முதற்கண் வகுத்த நன்முகூர்த்த நாள் இடையீடுபட்டுக் கழிந்தமை பற்றியும், வேறோர் நன்னாள் வகுக்கப்பெற்றது. அதற்குள் மாயவன் சிந்தினத்தினு வொருவனாயினனேனும் சுகப்பேறடைந்தனன். இதற்கிடையில் மதிவாணனும் அடிக்கடி அவனை மருத்துச்சாலையிற் சென்று பார்த்து வந்தனன். மதிவாணற்கும் மாயவற்கும் வரவர நட்பு மேம்பட்டது. இவ்வாறே இன்பவல்லியுங் கயற்கணியிடத்தின் அன்பு பாராட்டி வந்தனள். கொடிய பகைஞ ரிருவரும் உயிர் நண்பராயின ரென்றக்கால் இவ்வுலகின்கண் முடியாத பொருளு முண்டோ?—என்னே அதிசயம்!

பின்னர்ச் சின்னாட்கள் கழிந்த பின்றை மதிவாணற்கும் இன்பவல்லிக்கும் அங்கிசான்றாய், அந்தணர் ஐயர் முனிவர் முதலிய யாவர் முன்னிலையினும் மணவினை நிகழ்ந்தது; அப்போழ்தே மாயவனுங் கயற்கணியைக் கைப்பிடித்து மகிழ்ந்தனன். நாடெல்லாம் மகிழ்ந்தது.

இன்ப வல்லியோ டெம்மதி வாணனு
மன்பு சான்ற கயற்கணி யங்கனை
வன்பு மிக்கொளிர் மாயவன் றன்னொடுந்
துன்ப மின்றிச் சுகித்திவண் வாழ்கவே. (35)

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

# செய்யுண் முதற் குறிப்பகராதி

[* உடுக்குறியுற்றன மேற்கோட் பாக்களாம்]


| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| அரசனுங் ... ... ... | 81 |
| *அருளுமன்பு ... ... | 102 |
| அறிவொடுங்கி ... ... | 54 |
| அன்புக்குரி ... ... | 93 |
| அன்போடரு ... ... | 5 |
| ஆகையின்மா ... ... | 38 |
| ஆடன்மறந் ... ... | 33 |
| *இன்பச்செவ்வி ... | 103 |
| இன்பவல்லி ... ... | 106 |
| எப்போது ... ... | 36 |
| தானந்த / இன்பவடி } ... | 36 |
| என்றனரெ ... ... | 51 |
| என்றென்றலை ... ... | 38 |
| ஒத்தநல ... ... ... | 64 |
| *ஓர்ந்துகண் ... ... | 101 |
| *கடிதோச்சி ... ... | 102 |
| கண்டவக் ... ... | 58 |
| கண்டனன் ... ... | 56 |

| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| கண்ணில்யாக் ... ... | 82 |
| காவிற்புகுந் ... ... | 52 |
| *கொலையிற்கொடி ... | 101 |
| கொள்விடத்தே ... | 51 |
| *சினமென்னுஞ் ... | 69 |
| செவ்விபெறு ... ... | 101 |
| தன்னிதய ... ... | 60 |
| தூவிரிதா ... ... ... | 49 |
| *தேன்பாலுகந் ... | 39 |
| தேனினு ... ... ... | 2 |
| *நட்டான் ... ... | 24 |
| நாளத்தா ... ... | 91 |
| நீதியாக ... ... ... | 101 |
| பெண்களி ... ... | 50 |
| பெண்ணே! ... ... | 53 |
| மந்தரமலை ... ... | 49 |
| யாணர்மே ... ... | 54 |
| விம்மினர் ... ... | 50 |

சென்னைக் கிறிஸ்தவ

கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி.ஏ.,**

அவர்கள் இயற்றியவை

## 1. கலாவதி 2 0 0

இஃது ஒரு புதிய தமிழ் நாடகம். மகளிராடவர் மகிழ் சிறந்து படிக்கற்பாலது. கதையினடியாய்ச் சிறப்பு வாய்ந்த நீதிகள் பல கட்டுரைப்பது. கற்றாருங் கல்லாருங் கண்டு, ஒருங்கே களிகூறத் தகுவது. ஸ்ரீமான் டி. ராமகிருஷ்ண பிள்ளை B.A., F.M.U., F.R.H.S., அவர்களுடைய முகவுரையுடன் கூடியது.

## 2. தமிழ் மொழியின் வரலாறு (காலிகோ) 1 0 0

இஃது தமிழ்ப் பாஷையின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, வேறுபாடு, சிறப்பு, சீர்திருத்தம், சரித்திரம் முதலியன கூறும் ஓர் அரிய தமிழ்நூல். யாவரும் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க செந்தமிழ் வசன நடையில் எழுதப்பட்டுள்ளது. தமிழர் எவர்க்கும் இன்றியமையாதது. பி.ஏ. பரீக்ஷைக்குப் பாடமானது.

## 3. தமிழ் மொழியின் வரலாறு (சுருக்கம்) 0 8 0

இஃது ஹைஸ்கூல் மாணவர்க்கு உபயோகமாகு மாறு ஷை பெரிய புத்தகத்திலிருந்தே சுருக்கப்பட்டது.

## 4. ரூபாவதி (காலிகோ) 1 4 0

இது ஓர் புதிய தமிழ் நாடகம். ஆடவரும் பெண்டிரும் அகமகிழ்ந்து வாசிக்கத் தக்கது. கதையின் ரூ மாய்ச் சிறந்த நீதிகள் பல கற்பிப்பது. எப். ஏ. ப ரீக்ஷைக்குப் பாடமானது.

## 5. மதிவாணன் (காலிகோ) 0 12 0

இது மிகவும் உயரிய செந்தமிழ் நடையில் இயன்றுளது. புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை. தமிழுலகில் இணையற்றது. இதனைப் படிப்பவர் எவரும் இதனைக் கைவிடார் என்பது திண்ணம். தமிழில் நற்பயிற்சி யுண்டாக்கும் கதாரத்தினம்.

## 6. மான விஜயம் 1 0 0

இது ஓரங்கத்தில் முடிந்துள்ள ஒரு தமிழ் நாடகம். முழுதும் செய்யுளாகவே அமைந்துள்ளது. அறிஞர் விருப்பும், கவிஞர் மதிப்பும் பெற்றது. சுதேசமித்திரன் ஆசிரியர் காலஞ்சென்ற. ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள், பி.ஏ., எழுதிய முகவுரையுடன் கூடியது. அண்ணாமலை சர்வ கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் நா. பலராமய்யர் எழுதிய உரையுடன் கொண்டது.

## 7. பாவலர் விருந்து (காலிகோ) 1 0 0

(முதல் நாள்):—இனிமையும், புதுமையும், வாய்ந்த அநேக சிறிய செய்யுள் நூல்கள் கொண்டது; ஆங்காங்குச் சில புதிய கருத்துக்கள் பொதிந்துளது. பண்டிதரும் பாமரரும் படித்துணர்ந்து பயன்பெறத் தக்கது. அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் நா. பலராமய்யர் எழுதிய குறிப்புரையுடன் கொண்டது.

## நாடகவியல் (காலிகோ) 1 0 0

இது நாடகத் தமிழிலக்கண நூல்; நாடகவமைதியை நன்கு விளக்கி, இனிமை தோன்றக்கூறுவது. தமிழ் மொழியின்மீது ஆர்வமுடையோர் யாவருக்கும், நாடகாசிரியர்க்கும் இன்றியமையாதது. மிகவும் புதுமையாக அமைக்கப்பட்டுள்ளது. அண்ணுமலை சர்வ கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ந. பலராமய்யர் எழுதிய விரிவுரையுடன் கொண்டது.

## 9. தனிப்பாசுரத் தொகை 1 0 0

(முதல் வரிசை):—இது 43 தனிப்பாசுரங்களடங்கியதோர் உறுதி நூல். அருமையும் பெருமையும் வாய்ந்த பல பொருள்களை யெடுத்து உரைப்பது. மாணுக்கர் யாவர்க்கும் பெரிதும் பயன்படத் தக்கது. "பரிதிமாற் கலைஞன்" என்னும் புனைவுப் பெயரில் வெளியிட்டது. கனம் பொருந்திய ஜி. யூ. போப்பையரவர்களால் ஆங்கில பாஷையினுஞ் செய்யுளாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (கலிகோ கட்டடம்.) அண்ணுமலை சர்வ கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ந. பலராமய்யர் எழுதிய குறிப்புரையுடன் கொண்டது.

## 10. தமிழ்ப் புலவர் சரித்திரம் 0 8 0

இது பதினெட்டாம் நூற்றுண்டில் இருந்த தமிழ்ப் புலவர்களைப்பற்றியும், புகழேந்தி செயங்கொண்டான் முதலியோரைப் பற்றியும் கூறுவது.

## 11. தமிழ் வியாசங்கள் 0 5 0

இது எளிய நடையில் எழுதப்பட்டதோர் அரிய நூல். தற்காப்பு நியமம், பொய்த் தோற்றங்கள் ஜீவ

ராசிகளின் நானுவித வர்ணங்கள், மனவமைதி, சொற் பொருளாராய்ச்சி முதலிய அரிய வியாசங்களைக் கொண்டது.

## 12. ஸ்ரீ மணியசிவனுர் சரித்திரம் 0 4 0

இஃது இடையிடையே வடமொழி மேற்கோள்கள் பெய்யப் பெற்றதோர் சரிதம். எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. சைவமதத்தின் உண்மை பல தெரிவிப்பது.

## 13. பரிதிமாற் கலைஞன் - அச்சில்

இது சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து காலஞ்சென்ற வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் பி. ஏ., அவர்களுடைய சரித்திரம். அண்ணுமலை சர்வ கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் நா. பலராமய்யர் எழுதியது.

சென்னைக் கிறிஸ்தவ

கலாசாலைத் தலைமைத் தமிழ் ஆசிரியராயிருந்த

**வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ.,**

அவர்களது

**நூல் தொகுதி**

**இரண்டு பகுதிகளாக வெளிவரும்.**

மாணவர்க்கும், பண்டிதர்க்கும், புத்தகசாலைகட்கும் தகுந்தது.

உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்!

---

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.